அன்புள்ள

இளந்தலைமுறைக்கு

வெற்றியுள்ள வாழ்க்கைக்கு...

இளைஞரே, நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள்,
கடவுளின் வார்த்தை உங்களுள்
நிலைத்திருக்கிறது; தீயோனை
நீங்கள் வென்றுள்ளீர்கள்.

1 யோவான் 2:14

ஜெபா நியூட்டன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.
WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

அன்புள்ள இளந்தலைமுறைக்கு

வெற்றியுள்ள வாழ்க்கைக்கு...

ஆசிரியர்

திருமதி.ஜெபா நியூட்டன்

வெளியிடுவோர்

திருநெல்வேலி திருமண்டலம்

வாலிபர் ஐக்கிய சங்கம்

2/1, நூற்றாண்டு மண்டப வளாகம், பாளையங்கோட்டை,

திருநெல்வேலி - 627 002 ☎0462 2578765

அன்புள்ள இளந்தலைமுறைக்கு

Copyright : Tirunelveli Diocese Youth Association

First Edition : Sep-2015

No. of Copies : 2000

Design & Typing : J.Abraham Samuel

Proof Reading : Prof. Winfred Jebaraj, Mrs. Emi Stephen
TDYA Staff Members

Printed By : Santhosh Offset Printers
Sivakasi.

Rev.D.K.Stephen

Director

TDYA, 2/1, Centenary Hall Campus,

Palayamkottai - 627 002

Phone : 0462-2578765, 9842519991

பேராயரின் வாழ்த்துரை

மனித வாழ்வின் படிநிலைகளில் இளம்பருவம் இறைவன் அளித்துள்ள அருட்கொடையாகும். சாதிக்கத் துடிப்பவர்களுக்கு எதிர்பார்ப்பாகவும், சாதித்தவர்களுக்கு சுகமான நினைவாகவும் அமைந்துள்ளது இப்பருவம். தைரியத்தையும், வேகத்தையும், எதையும் செய்யத் துடிக்கும் ஆற்றலும் நிறைந்தது இப்பருவம். இதனால் தான் இன்றைய வாலிபர்களை எல்லாத் தரப்பினரும் தங்களுக்குச் சாதகமாய் கையாள திட்டங்களை தீட்டுகிறார்கள். சினிமா, அரசியல், விளையாட்டு, விற்பனை என்று இளையோர்களை மையமாக வைத்தே அனைத்தும் செயல்படுத்தப்படுகிறது. வாலிபர்கள் சரியான பாதையில் உருவாக்கப்பட வேண்டுமென்பதும், இறைவனின் கையிலிருந்து புறப்படும் அம்பாய் இறைச்சித்தம் செயல்பட வேண்டுமென்பதுமே எம் விருப்பம். இதற்காக திருமண்டல வாலிபர் ஐக்கிய சங்கம் எடுத்து வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியது.

குறிப்பாக மாதந்தோறும் வெளியிடப்படும் வாலிபர் தோழன் இதழின் சிறப்பு எழுத்தாளர் திருமதி.ஜெபா நியூட்டன் அவர்களை பாராட்டுகிறேன். அன்னாரின் ஒவ்வொரு கட்டுரைகளையும் தொகுத்து **"அன்புள்ள இளந்தலைமுறைக்கு"** என புத்தகமாக வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அநேக வாலிபர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இப்புத்தகம் மிகுந்த ஆசீர்வாதமாய் அமைய வாழ்த்துகிறேன்.

இளைஞரே நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள், கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது; தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள். (1 யோவான் 2:14)

இறையாசி உங்களனைவரோடும் இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்

Rt.Rev.Dr.J.J.கிறிஸ்துதாஸ்

பேராயர், நெல்லை திருமண்டலம்

இயக்குனரின் அணிந்துரை

அன்புள்ள இளந்தலைமுறைக்கு

வாலிபர் தோழன் மாத இதழ் இன்று தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான இளையோர்களும், பெரியோர்களும் விரும்பி வாசிக்கும் பத்திரிக்கையாக அமைந்துள்ளது. வாலிபர்கள் மட்டுமன்றி பல பெரியோர்களும் கூட "ஒரு பக்கம் விடாமல் வாசித்து விடுவேன்" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். பத்திரிக்கையின் எளிய நடையும், ஆழ்ந்த கருத்துக்களுமே அதற்கு காரணம். சிறப்பாக திருமதி.ஜெபா நியூட்டன் அவர்கள் வாலிபர் தோழன் பத்திரிகையின் சிறந்த நிரந்தர எழுத்தாளர் எனலாம். இளையோர்களிடையே இறைநம்பிக்கையும், உத்வேகத்தையும், சிந்தனைத் திறனையும் உருவாக்கும் ஆற்றல் அன்னாரின் எழுத்துக்களில் உண்டு. மாதந்தோறும் வாலிபர் தோழனில் அவர்கள் வனைந்த கட்டுரைகளை ஒன்று திரட்டி புத்தகமாக வெளியிடுவதில் **TDYA** மகிழ்ச்சியடைகிறது. வாங்கி படியுங்கள். உயரிய இலட்சியம் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். இந்தப் புத்தகத்தை வெளியிட எங்களை ஊக்கமளித்த அன்புப் பேராயர் ஐயா அவர்களுக்கும், திருமதி. ஜெபா நியூட்டன் குடும்பத்தினருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இளையோரை நல்வழிப்படுத்தும் பணியில்

Rev.D.K.ஸ்டீபன்

இயக்குநர், **TDYA**

ஆசிரியரின் முன்னுரை

குழந்தைப் பருவத்திற்கும், முதுமைப் பருவத்திற்கும் இடைப்பட்ட வாலிபப் பருவம் மனித வாழ்க்கையில் வசந்தகாலம். அதில் தென்றல் வீசுவதும், புயல் அடிப்பதும், வாலிப சகோதர, சகோதரிகளான உங்கள் கையில்தான் இருக்கிறது. உங்களைப் பரிசுத்தமாகக் காத்துக் கொண்டு இறைவனின் இதயத்துக்கேற்றவராய், பாவம் நிறைந்த இவ்வுலகில் வெற்றிகரமான தேவபிள்ளைகளாய் வாழ்வதற்காக 'வாலிபர் தோழன்' பத்திரிக்கையில் வழங்கப்பட்ட ஆலோசனைகள், கருத்துக்கள், புத்தகமாக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இன்நூலுக்கு ஆசியுரை வழங்கிய பெருமதிப்பிற்குரிய திருநெல்வேலி திருமண்டல பேராயர் அருள்திரு. அறிவர் **J.J.கிறிஸ்துதாஸ்** M.A., B.D., M.Th., D.D. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் எனக்களித்த தாலந்தைப் பயன்படுத்த ஊக்கமும், உற்சாகமும் அளித்து இப்புத்தகம் வெளிவர உதவிய வாலிபர் ஐக்கிய சங்க இயக்குநர் அருள்திரு. **D.K.ஸ்டீபன்** B.A., B.D., அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு துதி தோத்திரங்களை காணிக்கையாக்குகிறேன்.

'புத்திமதியைத் தள்ளி விடுகிறவன் ஆத்துமாவை வெறுக்கிறான். கடிந்து கொள்ளுதலைக் கேட்கிறவனே ஞானமடைவான்'. (நீதிமொழிகள் 15:32)

திருமதி.ஜெபா நியூட்டன்

பொருளடக்கம்

1.	புதிதாய் பிறப்போம்	6
2.	காதலிக்கலாமா?	10
3.	வாழ்வின் வசந்தம்	13
4.	வென்றிடு	17
5.	ஹாலிடேஸ் எல்லாம் ஜாலி டேஸ்	21
6.	நினைத்துப்பார்	24
7.	வெல்வது நிச்சயம்	26
8.	தாலந்தைப் புதைத்திடாமல்	29
9.	ஆயத்தப்படு	32
10.	உன்னைத் தேடி வரும் ஆசீர்வாதம்	35
11.	ஆசீர்வாதமான புத்தாண்டு	38
12.	புதிய பயணம்	41
13.	இழந்து போகாதே	44
14.	சோதனையைத் தோற்கடி	48
15.	வாடிப்போகும் வசந்த காலங்கள்	51
16.	திரும்பிப்பார்	54
17.	என்றென்றும் கல்வி	58
18.	சுதந்திரம் எது?	61
19.	கானல் நீரில் காகிதக் கப்பல்கள்	64
20.	பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள்	67
21.	நேர நிர்வாகம்	71
22.	அர்த்தமுள்ள கிறிஸ்மஸ்	75
23.	எல்லோருக்கும் நற்செய்தி	79
24.	இதுதான் காதலா?	82
25.	உன்னால் முடியும்	85
26.	உயிர்த்தெழுதலின் மகிமை	89
27.	கல்வியென்பது யாதெனில்	92
28.	பின்னிட்டு பாராதே	96
29.	தேடுங்க... தேடிக்கிட்டே இருங்க	100
30.	உண்மை எனப்படுவது யாதெனில்	104
31.	ஓடி ஓடி விளையாடு	107
32.	காதல் எனும் கொலைக்கருவி	110
33.	கவனமாயிருங்கள்	113
34.	பொறுப்புள்ள வாலிபம்	117

புதிதாய்ப் பிறப்போம்

ஒரு புகை வண்டியோ அல்லது ஒரு பேருந்தோ குறிப்பிட்ட ஒரு தூரத்தைக் கடந்த பிறகு அது பலவிதங்களில் சோதிக்கப்படுகிறது. நன்றாக சுத்தம் செய்யப்பட்டு, சரி செய்யப்படுகின்றது. அதன் இயந்திரங்கள் எல்லாம் பழுதுபார்க்கப்பட்டு சரி செய்யப்படுகின்றன. புதிதாக மாற்றப்பட வேண்டிய பாகங்கள் மாற்றப்பட்டு, மீண்டும் ஓடத் தயாராகின்றன. அதுபோன்று பழைய சிறகுகளை உதிர்த்து விட்டு வளர்ந்திருக்கும் புதிய சிறகுகளோடு செட்டையை விரித்துப் பறக்கும் கழுகினைப் போல பழைய துன்பங்கள், சோதனைகள், சோகங்களை உதிர்த்து விட்டு, புதிய நம்பிக்கை என்னும் சிறகுகளோடு செட்டைகளை விரித்துப் பறப்போம். எதையெல்லாம் புதுப்பித்துக்கொள்வது? எப்படி புதுப்பித்துக்கொள்வது என்பதைப் பார்க்கலாமா?

மனதைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்

பழைய மனக்கசப்புகள், தோல்விகளால் ஏற்பட்ட வேதனைகள் ஆகிய வேண்டாத குப்பைகளை மனதிலிருந்து அகற்றுங்கள். அப்போதுதான் புதிய எண்ணங்கள் உருவாக இடம் உண்டாகும். நேற்று செய்த எல்லாவற்றையும் விட இன்று அதிகம் செய்வேன் என்று மனதில் உறுதி கொள்ளுங்கள். உற்சாகமான நல்ல பொழுது போக்குகளால் மனதைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். தினமும் ஒரேமாதிரியான காரியங்களை இதுவரை செய்ததால் மனம் சோர்வடைந் திருக்கலாம். கொஞ்சம் வித்தியாசமான வேலைகள், செயல்களில் ஈடுபடுங்கள். உற்சாக ஊற்று உங்கள் மனதில் பொங்கியெழும்.

நேற்றுவரை எதிர்பார்த்தது இன்று நடந்து விடலாம். இன்றுவரை கிடைக்காதது நாளை கிடைக்கலாம் என்ற நம்பிக்கை விதையை மனதில் விதையுங்கள். நாளை அது விருட்சமாகி வெற்றிக்கனியை அளிக்கும்.

உடலைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

காலையில் தாமதமாக எழுந்து வேகவேக மாகக் காலைக் கடன்களை முடித்து பள்ளிக்கும், கல்லூரிக்கும், வேலைக்கும் ஓடுவதே இன்றைய இளைய தலைமுறைக்கு வாடிக்கையாகி விட்டது. இதில் எங்கிருந்து உடலை பாதுகாப்பது? உடற்பயிற்சி செய்ய நேரமில்லை. உண்ணுவதற்கு நேரமில்லை, உறங்குவதற்கு நேரமில்லை. கிடைக்கின்ற துரித உணவுகளைச் சாப்பிட்டு, உடலைக் கெடுத்துக் கொள்கிறார்கள்.

காலையில் எழுந்து நடைப்பயிற்சி அல்லது ஏதாவது பிடித்தமான பயிற்சியில் ஈடுபடுங்கள். நீர்நிலையில் நீச்சலடியுங்கள். அது உள்ளத்திற்கும், உடலுக்கும் உற்சாகம் தரும். அம்மா செய்து தரும் அன்பான உணவை ருசித்து, ரசித்துச் சாப்பிடுங்கள் இரவில் வெகுநேரம் கண்விழிக்காமல், தூங்கச் செல்லுங்கள். நல்ல உடற்பயிற்சி, நல்ல உணவு, நல்ல ஓய்வு, உடலைப் புதுப்பித்துக் கொள்ள உதவும்.

> நல்ல
> உடற்பயிற்சி,
> நல்ல உணவு,
> நல்ல ஓய்வு,
> உடலைப்
> புதுப்பித்துக்
> கொள்ள உதவும்.

சரீரம் தேவனுடைய ஆலயம். (1 கொரிந்தியர் 3:16) அதைப் பேணிப்பாதுகாப்பது நம் கடமை. நல்ல இசையைக் கேட்பது, கற்றுக் கொள்வது, ஓவியம் வரைவது, தொலைக்காட்சியில் நல்ல நிகழ்ச்சிகளைப் பார்ப்பது, நல்ல புத்தகங்களைப் படிப்பது போன்றவற்றால் உடலும், உள்ளமும் உற்சாகமடைந்து புதுப்பிக்கப்படும்.

நட்பினைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

'அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரை சம்பாதியுங்கள்'. (லூக்கா 16:9)

இந்த உலகில் செல்வத்தை சம்பாதிப்பதைப் பார்க்கிலும் சிநேகிதரை உருவாக்கிக் கொள்வதே சிறந்தது என்று ஆண்டவரே கூறியுள்ளார். படிப்பு, படிப்பு என்று நட்பு வட்டத்தை விட்டு, இதுவரை விலகியிருந்திருப்பீர்கள். இப்போது பழைய நண்பர்களைத் தேடிக் கண்டுபிடித்து நட்பினை புதுப்பித்துக் கொள்ளுங்கள். நல்ல பண்புள்ள புதிய நண்பர்களை உங்கள் நட்பு வட்டத்திற்குள் கொண்டுவாருங்கள். அவர்களோடு உல்லாசப் பிரயாணம் சென்று வருவது உங்களுக்குப் புதிய உற்சாகத்தைக் கொண்டுவரும்.

வெறும் அரட்டை, ஊர்சுற்றல், செல்போன், ஃபேஸ்புக் என்று பொழுதைக் கழிக்காமல் நண்பர்களோடு உங்களால் இயன்ற சமூக சேவை செய்யுங்கள்.

பாடங்கள் நடத்துங்கள். விடுமுறை வேதாகம வகுப்புகளில் சிறு குழந்தைகளுக்குப் புதிய பாடங்கள், புதிய கலைகளைக் கற்றுத் தாருங்கள். புதிய அனுபவங்கள், புதிய உறவைப் ஆசீர்வாதத்தைத் தரும். நட்பினால் உங்கள் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

உறவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

உங்கள் கல்விச் சுமையின் காரணமாக உங்களால் கடந்த ஆண்டு முழுவதும் உங்கள் பெற்றோரின் பணிச்சுமைகளைப் பகிர்ந்து கொள்ள இயலாமல் போயிருக்கலாம். விடுமுறை நாட்களில் உங்களால் இயன்ற உதவியை அவர்களுக்குச் செய்யுங்கள். சமையலறையில் அம்மாவுக்குச் செய்து தரும் உதவிகள் புது அனுபவத்தைத் தரும். தோட்டத்தில் செய்யும் வேலையால் உறவும் சிறக்கும்.

கிராமத்திலிருக்கும் தாத்தா, பாட்டியையோ, வேறு ஊரில் இருக்கும் அத்தை, மாமாவையோ சென்று பார்த்து சில நாட்களை அவர்களோடு செலவழித்து உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். கிராமத்து வயல்வரப்புகளும், புதிய காய்கறிகளும், சுத்தமான காற்றும் உள்ளத்திற்கும், உடலுக்கும் புது உற்சாகத்தைக் கொண்டுவரும்.

> வெறும் அரட்டை, ஊர்சுற்றல், செல்போன், ஃபேஸ்புக் என்று பொழுதைக் கழிக்காமல் நண்பர்களோடு உங்களால் இயன்ற சமூக சேவை செய்யுங்கள்.

உறவினர்கள் யாரென்றே தெரியாத, தெரிந்து கொள்ள விரும்பாத பல இளைஞர்களை நாம் அன்றாட வாழ்வில் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். தனிமரம் தோப்பாகாது. ஆபத்துக் காலத்தில் நமக்கு உறுதுணையாக விளங்குகின்ற உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

ஆண்டவரோடு உறவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

நேரமில்லை என்று கூறி பரிசுத்த வேதத்திலிருந்து அவசரமாக ஏதோ ஒரு அதிகாரத்தை வாசித்துவிட்டு, அவசரமாக ஜெபித்துவிட்டுக் கல்லூரிக்கும் பள்ளிக்கும் சென்றிருப்பீர்கள். இந்த விடுமுறை நாட்களில் எந்த அவசரமும் இல்லை. நிதானமாக வேதம் வாசித்து, தியானியுங்கள். ஜெபம் என்ற தொலை தொடர்பு சாதனத்தோடு ஆண்டவரின் தொடர்பு எல்லைக்குள் இருங்கள். அப்போது துன்மார்க்கரின் ஆலோசனையின்படி நீங்கள் நடப்பதில்லை. பாவிகளின் வழியில் நிற்பதில்லை. பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காருவதில்லை. சோர்ந்துபோன வாழ்வுக்குச் சத்துவம் அளிக்கும் ஜெபங்கள் ஆண்டவரோடுள்ள உறவைப் புதுப்பிக்கும்.

“வாலிப பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை” என பிரசங்கி (12:1)ல் கூறியிருப்பதை நினைவு கூர்ந்து உங்கள் தாலந்துகளை அவருக்காய் செலவழித்து உங்கள் திறமைகளையும் புதுப்பியுங்கள்.

ஒவ்வொரு நிதியாண்டு முடியும்போதும் தொழில் நிறுவனங்கள்

வரவு, செலவு கணக்குகளைப் பார்த்து, முடிவடைந்த ஆண்டின் இலாப நஷ்ட விபரத்தைக் கண்டு கொள்கிறார்கள். நாமும் சென்ற ஆண்டின் நிகழ்வுகளைச் சீர்தூக்கிப் பார்த்து இன்ப, துன்ப கணக்கினைச் சரி செய்து, நம்மைப் புதுப்பித்துக்கொள்ள உடலை, உள்ளத்தை, உறவை, உன்னத ஆண்டவரோடுள்ள ஐக்கியத்தைப் புதுப்பித்துக் கொள்வோம்.

''சென்றுபோன நாட்களுக்காக வருத்தப்படுவதைக் காட்டிலும், கையில் கிடைத்திருக்கும் காலத்தில் இன்னும் விரிவாகச் சிறகுகளை விரித்தால் கண்ணுக்குத் தெரியாத வானத்தின் தொலைதூரம் உங்களுக்குப் புலப்படும்'' - வெ.இறையன்பு

காதலிக்கலாமா...

அழகான கடற்கரை... பட்டாம்பூச்சிகளாய் சிறகடித்துப் பறக்கும் இளம் வாலிபர்களின் கூட்டம். இளைஞர்களும், இளைஞ்ஜீகளும் வாழ்த்து அட்டைகளையும், ரோஜா மலர்களையும், பரிசுகளையும், இனிப்புகளையும் பரிமாறிக் கொண்டு மகிழ்ச்சியின் உச்சகட்டத்தில் கைகோர்த்து வருகிறார்கள். பூங்காக்கள், கேளிக்கை அரங்குகள் உற்சாகத்தால் நிரம்பி வழிகின்றன. இங்கெல்லாம் என்ன நடக்கிறது? ஓ! இன்று பிப்ரவரி 14ம் நாள் அல்லவா? பெற்றோர்தினம், குழந்தைகள் தினம், ஆசிரியர் தினம், முதியோர் தினம் என்ற வரிசையில் அயல்நாட்டில் கொண்டாடப்பட்ட "வேலன்டைன்ஸ் டே" என்ற காதலர் தினம் நம் நாட்டு இளைஞர்களையும் ஆட்டிப் படைக்கிறது.

அது என்ன 'வேலன்டைன்ஸ் டே' என்று கேட்கிறீர்களா? ரோமப் பேரரசனான இரண்டாம் கிளாடியஸ் காலத்தில் திருமணம் என்பதே தடை செய்யப்பட்டிருந்தது. திருமணம் ஆண்களின் வீரத்தைக் குறைத்துவிடும் என்பது அரசனின் எண்ணம். திருமணம் செய்யத் துடித்த ஆண்களுக்கு (வேலன்டைன் என்ற பாதிரியார் அரசகட்டளையை மீறி இரகசியமாகத் திருமணங்களை நடத்தி வைத்தார். இந்த விஷயம் மன்னனுக்கு தெரிய வந்தபோது வேலன்டைன் பாதிரியாருக்கு மரண தண்டனை விதித்தார். அவர் கொல்லப்பட்ட நாள் பிப்ரவரி 14.) 'வேலன்டைன்ஸ் டே' பற்றி, அதாவது காதலர் தினத்தைப்பற்றி உலவும் கதைகளில் இதுவும் ஒன்று.

தென் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் வேலன்டைன்ஸ் தினத்தை காதலர்கள் மட்டும் கொண்டாடு வதில்லை. நண்பர்கள், சிறுவர்கள், பெரியவர்கள் எல்லோரும் கொண்டாடி மகிழ்கின்றனர். வகுப்பறைகளையெல்லாம் அலங்கரித்தும், ஆசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும் பரிசு கொடுத்தும் மாணவர்கள் இந்த நாளை கொண்டாடு கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 14ந் தேதியை யார் ரொம்ப ஆர்வமாக வரவேற்கிறார்கள் தெரியுமா? இளைஞர்கள் என்பது உங்கள் பதிலென்றால் அது தவறு. உண்மையில் அது வியாபாரிகள்தான். வாழ்த்து அட்டைகள், பரிசுப் பொருட்கள், சாக்லேட்டுகள், மலர் கொத்துக்கள், புத்தகங்கள் என

அன்றைய தினத்தின் வியாபாரம் பல கோடிகளைத் தாண்டும். ஹால்மார்க் என்னும் ஒரு நிறுவனம் காதலர் தினத்திற்கென வெளியிடும் வாழ்த்து அட்டையின் எண்ணிக்கை ஆண்டுக்கு 20 கோடி. இதற்கென முதன்முதலாக வாழ்த்து அட்டை உருவாக்கிய பெருமை எஸ்தர் ஏ.ஹௌலாண்டா மவுண்ட் ஹோலியோக் என்பவரைச் சாரும். இவர் கிபி. 1840ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவில் வாழ்த்து அட்டைகளை உருவாக்கி விற்பனை செய்து வந்தார்.

இந்நாளில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்திற் கென பார்ட்டி அழைப்புகள் குவிகின்றன. ஊடகங்கள் காதலர் தினத்திற்கென வாழ்த்துக்கள் தெரிவித்து, சிறப்பு நிகழ்ச்சிகளையும் அறிவிக்கின்றன. மறுபுறம் இந்த கலாசாரம் நம் நாட்டிற்கு ஒத்துவராது என கூறும் கூட்டத்தாரால் இத்தினம் கொண்டாடப்படு வதை கண்டித்து வன்முறையும் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

சரி, இதைப்பற்றிய ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திக்கொண்டு மேற்கொண்டு பேசுவோமா? இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகள் காதலிக்கலாமா? காதல் திருமணங்களால் ஜாதிப் பிரச்சனை, வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க லாம் என்று சொல்லப்படுவது உண்மையா? என வாலிபர்கள் கேட்பது காதில் விழுகிறது.

> மனநிம்மதியைக் கெடுத்து, குடும்பங்களில் குழப்பத்தை விளைவித்து, தற்கொலை, கொலை என்ற சோகக்கடலில் இளைஞர்களையும், குடுபத்தினரையும், மூழ்கடிக்கும் இந்த காதல் தேவைதானா?

எல்லா காதலும் திருமணத்தில் முடிவ தில்லை. குறுஞ்செய்திகளால் (SMS) வளரும் காதல் குறுகிய காலத்தில் முடிவதும் உண்டு. அரசியலும், அரசியல்வாதிகளும் உள்ளவரை ஜாதிப்பிரச் சனைகள் இந்த நாட்டில் ஒழியப்போவதில்லை. காதலித்துத் திருமணம் செய்து கொண்டபின் வரதட்சணை வாங்கிவர மனைவியை விரட்டி விடும் கணவன்மாரையும், மருமகளை விரட்டி விடும் மாமனார், மாமியாரையும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்? அவிசுவாசிகளோடு இணைவதை, ஆண்டவர் விரும்புவதில்லை. (2 கொரி. 6:14) அவ்வாறு நடைபெறும் திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன. (ஆண்டவரை விட்டு வெகு தூரத்திற்கு அழைத்துச் சென்று விடுகிறது. கடிதப் பரிமாற்றங்கள், இரகசிய சந்திப்புகள், தவறான பார்வைகள், தவறான நடவடிக்கைகள், சாட்சியுள்ள வாழ்க்கைக்குத் தடையாக மாறுகிறது. இந்த உலகமே வன்முறையாலும், காதல் என்னும் மாயையாலும் சீரழிந்து கொண்டிருக்கிறது. படிப்பு பாழாகிறது. பெற்றோரிடம், மற்றோரிடம் பொய்பேச வைக்கிறது.) மனநிம்மதியைக் கெடுத்து, குடும்பங்களில் குழப்பத்தை விளைவித்து, தற்கொலை, கொலை என்ற சோகக் கடலில் இளைஞர்களையும், குடுபத்தினரையும், மூழ்கடிக்கும் இந்த காதல் தேவைதானா? தம்பி, தங்கைகளே! சிந்தியுங்கள்.

அப்படியானால் காதலிப்பது தவறா என நீங்கள் முணுமுணுப்பதும் கேட்கிறது.

கத்தி அபாயகரமானதா என கேட்டால் அதைக் கொண்டு காயும் வெட்டலாம், கொலையும் செய்யலாம் என்றுதான் பதில் சொல்லலாம். பெற்றோரின் சம்மதம் இல்லாமல் நடக்கும் காதல் திருமணங்கள் அபாயகரமானவைதான். இத்தகைய திருமணங்களால் பாதிப்பப்படுவது பெரும்பாலும் பெண்களே! பல வாலிபர்கள் பெற்றோரின் புத்திமதியை அசட்டை செய்து, நண் பர்களின் தூண்டுதலால் தவறான வழிகாட்டுதலின்படி பள்ளிப்பருவத்திலும், கல்லூரி வயதிலும் வீட்டைவிட்டு ஓடி காதல் திருமணம் செய்து விடுகிறார்கள். கையில் பணமின்றி, வறுமையில்வாடி, வேலைவாய்ப்பின்றி, வாழ்க்கை கசந்துபோய் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடுகிறது.

இக்கால சூழ்நிலையில் வாலிப பெண்களும், பையன்களும் கலந்துபேசுவது, பழகுவது கூடாது என சொல்லமுடியாது. ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து படிக்கவும், சேர்ந்து பணிபுரியவும், ஊழியங்களை நிறைவேற்றவும், திருச்சபை காரியங்களில் ஈடுபடவும் வேண்டியது அவசியம். ஆனால் பேசுவதிலும், பழகுவதிலும் ஒரு எல்லைக்கோடு இருக்க வேண்டும்.

> அன்பு என்பது
> அழகைப் பார்த்தோ,
> பணத்தைப்பார்த்தோ
> வருமாயின் அது
> உண்மையானதல்ல.

வேதத்தில் எந்த பாவப்பட்டியலிலும் காதலிப்பது குற்றமாக சித்தரிக்கப்படவில்லை. எனினும் அதற்காக அடிக்கப்பட்டோர், கொல்லப் பட்டோர், அவமானமடைந்தோர், வெறுக்கப்பட் டோர், வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டோர், சித்ரவதை செய்யப்பட்டோர், தற்கொலை செய்துகொண்டோர் என அநேகரைப்பற்றிய செய்திகளை தினம்தினம் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்கிறோம். அன்பு என்பது அழகைப் பார்த்தோ, பணத்தைப்பார்த்தோ வருமாயின் அது உண்மையானதல்ல.

மேற்கத்திய நாடுகள் போல அல்லாமல் நமது உறவுகள் எல்லாம் குடும்பத்தைச் சுற்றியே பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதை கொண்டால் குடும்பத்தில் என்றும் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்திலுள்ள வயதான தம்பதியர், பெற்றோர் முதுமையிலும் ஒருவரையொருவர் காதலித்து வாழவேண்டும். அவர்களது மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பார்த்து பிள்ளைகள் உண்மையான அன்பின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும்போது அன்பு என்னும் அற்புதமான வாழ்வியல் உணர்வுபற்றிய, புரிதல் உள்ள புதிய தலைமுறை உருவாகும்.

"வாலிப இச்சைகளுக்கு விலகியோடுங்கள்" 2 தீமோத்தேயு 2:22

வாழ்வின் வசந்தம்

லெந்து என்னும் வார்த்தைக்கு வசந்தகாலம் என்று பொருள். இலையுதிர் காலத்தில் காய்ந்த, வேண்டாத, பழுத்த இலை களை உதிர்த்துவிடுகின்ற மரம், பின்வரும் காலமாகிய வசந்தகாலத்தில் துளிர்விட்டு பசுமையான இலைகளோடு செழித்து காணப்படும் அதுபோல நமது வாழ்க்கையின் கடந்த காலப் பாவங்களையும், தீயப் பழக்க வழக்கங்களையும் வேண்டாத இலை களைப்போன்று உதிர்த்துவிட்டு, நற்குணங்களையும், நற்செயல்களையும் கைக்கொள்ளும் காலமே லெந்தென்னும் வசந்த காலமாகும்.

நம் பாவங்களுக்காக மனம்வருந்தி, பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும் காலம். 'பெற்றோர்களும், பெரியோர்களும் உபவாசித்து, ஜெபித்து, திருச்சபையின் ஆவிக்குரிய கூட்டங்களில் கலந்து கொள்ளட்டும் நாம் எப்போதும்போல் நம் அன்றாட அலுவல்களை மட்டும் தொடர்ந்து செய்வோம் என நினைக்காமல் ஆண்டவரின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதலை தியானியுங்கள். ஆவிக்குரிய வாழ்வில் துளிர்விடும் காலமாக லெந்துகாலத்தை பயன்படுத்துங்கள்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரிஜன் என்பவர் ஆண்டவரின் உயிர்த்தெழுதலுக்கு முந்தைய நாற்பது நாட்களை கிறிஸ்தவர்கள் உபவாச காலமாக ஆசரித்தார்கள் என தெரிவித் துள்ளனர். உபவாசம் என்பது வடமொழிச் சொல். உபம் = அருகில் வாசம் = என்பது வாழ்தல் பொருளாகும். ஆண்டவரோடு நெருங்கிவாழும் காலமே லெந்து காலமாகும். எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரகோரி என்ற போப் சாம்பற்புதன் கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக நாற்பது நாட்கள் உபவாச நாட்களாக ஆசரிக்கப்பட வேண்டும் என கட்டளையிட்டார். சரீரத்தை ஒடுக்கி, மாம்ச இச்சைகளை நீக்கி செய்யப்படும் உபவாசத்தால் ஆத்துமா பெலனடைகிறது. எஸ்தரின் மூன்று நாள் உபவாசத்தால் யூதகுலமே விடுதலையடைந்தது.

வேதாகமத்தில் நாற்பது நாட்கள் என்பது பல இடங்களில் துக்கம் கொண்டாடு தலுக்கும், உபவாசிப்பதற்கும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதைக்

காண்கிறோம். மோசே, எலியா போன்ற தீர்க்கதரிசிகள் நாற்பது நாட்கள் உபவாசித்தார்கள். மோசேயின் உபவாசத்தால் பத்து கற்பனைகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாற்பது நாட்கள் உபவாசித்து பிதாவிடமிருந்து வல்லமையைப் பெற்றுக் கொண்டார். நாமும் இப்படிப்பட்ட உபவாசத்தை மேற்கொண்டு ஆவிக்குரிய வாழ்வைத் துளிர்விடும் வசந்தகாலமாக மாற்றலாமே?

அன்றாடம் உண்ணும் உணவிற்கான செலவைக் குறைக்கலாம். மாமிச உணவை இந்த லெந்து காலத்தில் மறக்கலாம். இவ்வாறு மிச்சப் படுத்தும் பணத்தை சுடவெறுப்பு உண்டியலில் சேர்த்து ஆலயத்தில் படைக்கலாம். பசியுள்ளவனுக்கு ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதும், துரத்துண்ட வரை வீட்டில் சேர்த்துக் கொள்வதும், வஸ்திரமில்லாதவருக்கு வஸ்திரம் கொடுப்பதும் தேவனுக்கு உகந்த உபவாசம் என ஏசாயா 58:7ல் கூறியிருப்பதை இக்காலத்தில் வாழ்வில் கடைபிடிக்கவேண்டியது மிக அவசியம்.

> வசனமாகிய விதைகள் உங்கள் இருதயங்களில் விதைக்கப்பட்டு துளிர்விடும்போது உங்கள் வாழ்வில் வசந்தம் வீசும்.

ஆண்டவரோடு நாற்பது நாட்கள் தனித்திருந்த மோசேயைப்போல, ஆண்டவரின் பாதத்தருகே அமர்ந்திருந்த மரியாளைப்போல, தனித்திருந்து ஜெபித்த சங்கீதக்காரனாகிய தாவீதைப்போல உங்களுக்கும் இருக்க ஆசைதானே? படிப்பு காரியங்களிலும், பணி நிமித்தமாகவும், இந்த இருபத்தோராம் நூற்றாண்டாகிய அவசரயுகத்தில் உலகமக்களோடு சேர்ந்து ஓட வேண்டியிருக்கிறதே? ஆனாலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் வசந்த காலமாகிய இந்நாட்களில் ஆவிக்குரிய வாழ்வில் துளிர்விட்டு வளர வேதத்தை வாசித்து தியானியுங்கள். வசனமாகிய விதைகள் உங்கள் இருதயங்களில் விதைக்கப்பட்டு துளிர்விடும்போது உங்கள் வாழ்வில் வசந்தம் வீசும்.

மனந்திரும்புதலின் காலம்

அமெரிக்காவில் ஒரு பிரபலமான தொழிலதிபர் ஓர் உணவகத்தில் அமர்ந்திருந்த போது அவரை அடையாளம் கண்டு கொண்ட ஒரு பெண்மணி அவரது முதுகில் தட்டி வணக்கம் கூறினாள். அந்த தொழிலதிபரின் கையிலிருந்த காப்பி அவருடைய 'கோட்'டில் சிந்தியது. பிறகு அவள் தான் அணிந்திருந்த தோள் ஆடையை உதறி மீண்டும் தன் தோளின் மீது போட்டுக் கொண்டாள். அது தொழிலதிபரின் முகத்தில் உரசிக் கொண்டது. அந்த பெண்மணி இந்த இரு காரியங்களுக்காகவும் 'வருத்தமடைகிறேன்' என்று மன்னிப்பு கோரினாள். அந்த தொழிலதிபர் அவளை நேருக்குநேர் பார்த்து "அம்மா, வருத்தமடைந்தால் மட்டும் போதாது. இனிமேல் சரியாக நடந்து கொள்ளுங்கள்" என்று கூறினார். நாம் பாவம் செய்து ஆண்டவரிடம் மன்னிப்பு கோரினால் மட்டும் போதாது. மீண்டும் அந்த பாவத்தைச்

செய்யாதபடி மனம் திரும்ப வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

வாலிப நாட்களில் சிற்றின்பங்களிலும், மதுபான கேளிக்கைகளிலும் அமிழ்ந்து பொன்னான காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களே! வாலிப நாட்களில் மனம்போல வாழ்ந்து, வயதான காலத்தில் ஆண்டவரைத் தேடலாம் என்பது ஒருசில இளைஞர்களின் எண்ணமாய் இருக்கிறது. வாலிப வயதின் குணாதிசயங்களைக் கொண்டே முதிர் வயது தீர்மானிக்கப்படுகிறது. இளம் வயதில் தவறான பழக்க வழக்கங்களை பழகிக் கொள்பவர்கள் அதனை மாற்றிக் கொள்வது கடினமானகாரியம்.

இந்த காலத்தை உங்கள் மனந்திரும்புதலின் காலமாக மாற்றிக் கொள்ளுங்கள். காதல் என்னும் மாயவலையிலிருந்து வெளியேறுங்கள். மது பழக்கம், போதைப் பழக்கம், தவறான நண்பர்கள் போன்ற தீய காரியங்களை விட்டு விலகுங்கள். லெந்து காலம் பாவங்களிலிருந்து விலகி மனந்திரும்புதலுக்கான காலம்.

பாவங்களுக்கு விலகி ஓடும் காலம்

தேவன் மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார். அவனோ பல உபாய தந்திரங் களைத் தேடிக் கொண்டான். (பிரசங்கி 7:29) இன்று அநேகர் பெருமை, பொறாமை, கீழ்ப்படியாமை, கோபம், விபசாரம், கொலை, திருட்டு, சிற்றின்பம், போதை வஸ்துக்கள், மதுபானம் போன்ற பாவங்களுக்கு வாலிப வயதில் அடிமையாகி விடுகின்றனர். பாவங்களிலிருந்தும் சாபங்களிலிருந்தும் நம்மை மீட்பதற்காகவே இயேசு கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தினார்.

> பார்க்கக் கூடாத படமோ, காட்சியோ ஒரு மனிதனின் ஆழ்மனதில் ஏழு வருடங்கள் அழியாமல் பதிந்துவிடும்

சாத்தானின் கண்ணிகளுக்கு தப்பியோடுங்கள். விலையேறப்பெற்ற உங்கள் ஆத்துமாவை பாவ சோதனைகளிலிருந்துகாத்துக் கொள்ளுங்கள். யோசேப்பைப்போல பாவத்திற்கு விலகியோடுங்கள். சோதனைகளிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ள தானியேலைப் போல ஜெபியுங்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

இன்றைய நாட்களில் ஆபாசமான பத்திரிகைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வலைத்தளங்கள், இளைய தலைமுறையினரின் மனதைக் கறைப்படுத்த சாத்தான் பயன்படுத்தும் அக்னியாஸ்திரங்களாக இருக் கின்றன. பார்க்கக் கூடாத படமோ, காட்சியோ ஒரு மனிதனின் ஆழ் மனதில் ஏழு வருடங்கள் அழியாமல் பதிந்துவிடும் என ஆராய்ச்சியாளர் தெரிவிக்கின்றனர். எனவே சாத்தானின் தந்திர உபாயங்களுக்குத் தப்பித்துக் கொள்ளுங்கள். சிம்சோனை போல இச்சை வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

நற்கிரியைகள் செய்யும் காலம்

ஒருநாள் அசிசி நாட்டைச் சார்ந்த பிரான்ஸிஸ் குதிரையில் சவாரி செய்து

கொண்டிருந்த போது சாலையோரம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்த ஒரு தொழுநோயாளியைக் கண்டார். கீழே இறங்கி அவரிடம் ஒரு நாணயத்தைக் கொடுத்துவிட்டு அவன் கன்னத்தில் முத்தமிட்டுப் பின் குதிரையில் ஏறித் திரும்பிப் பார்த்தார். ஒருகணம் அந்தப் பிச்சைக்காரன் நின்ற இடத்தில் இயேசு கிறிஸ்து நின்று கொண்டிருக்கும் காட்சியைக் கண்டார். "இந்த சிறியரில் ஒருவருக்கு எதைப் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" என ஆண்டவர் கூறியது எத்தனை சத்தியம்?

உபவாசித்து, நம் தேவைகளைக் குறைத்து அதன்மூலம் ஏழைகளுக்கு உதவுங்கள். ஊழியங்களுக்குக் கொடுங்கள். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் நன்மை செய்பவராகவே சுற்றித் திரிந்தார். இன்றும் இவ்வுலகில் பொருளாதார ரீதியாகவும், ஆவிக்குரிய வாழ்விலும் தேவையுள்ளோர் அநேகர். சத்தியத்தை எடுத்துச் செல்லும் கருவிகளாகவும், நற்காரியங்களைச் செய்யவும் இளைய தலைமுறையினர் எழும்ப வேண்டும்.

தேவ பக்திக்குரிய காலம்

> தேவபக்திக்கான காரியங்களை ஒருபோதும் அலட்சியம் செய்யாதீர்கள்

இது தேர்வு நெருங்கி வரும் காலமாகவும் இருக்கிறது. படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம். அதோடு கூட ஆண்டவருக்காகவும் நேரம் செலவிட வேண்டிய காலமாகவும் இருக்கிறது. திருமறை வாசிக்கவும், ஜெபிக்கவும் நேரமில்லை என்று கூறிபடிப்பில் மட்டும் கவனம் செலுத்தும் இளைஞர்களே! தேவபக்திக்கான காரியங்களை ஒருபோதும் அலட்சியம் செய்யாதீர்கள். அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு உங்களை சீர்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனசாட்சியின்படி பாவங்களுக்கு விலகி யோடி, தேவபக்தியில் விருத்தியடைந்து, நன்மை செய்யும் ஆயுதங்களாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்வு எப்போதும் வசந்தகாலமாகவே செழிப்பாயிருக்கும்.

வாலிபம் என்னும் வசந்த காலத்தில் இருக்கும் தம்பி, தங்கைகளே! உங்கள் வாழ்க்கையும் வசந்தமாய் மாற ஆண்டவரின் கரத்தில் உங்களை அர்ப்பணியுங்கள்.

வென்றிடு...

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி எல்லா இடங்களிலும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (2 கொரி. 2:4)

சிங்கக் கெபிக்குள் தூக்கியெறியப்பட்டாலும், சிங்காசனத்தில் அமர்ந்திருந்தாலும் கர்த்தர் வெற்றி சிறக்கப் பண்ணுவார் என்று கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. வெற்றிப்பாதையில் நடந்த இஸ்ரவேலின் போர்த் தளபதி யோசுவாவின் விசுவாச வாழ்க்கையைப் பாருங்கள். எரிகோ என்ற தடையைக் கண்டு யோசுவா தலைகுனிந்து நிற்கவில்லை. அதை எதிர்த்து நோக்கினான். கோட்டை இடிந்து விழுந்தது. கோலியாத்தைக் கண்டு தாவீது அஞ்சவில்லை. அவனை நோக்கி நடந்தான். சூழ்நிலையைப் பாராமல் கர்த்தரை சார்ந்து கொண்டு களமிறங்கினான் தாவீது. களம்பல கண்டு படைபல வென்றவர்களே பலமின்றி பதறி நிற்கையில் சிறு கூட்டம் ஆடுமேய்த்த சிறியவனான தாவீது கோலியாத்தை வென்று வீழ்த்தினான்.

இளைஞர்களே! வாழ்வில் குறுக்கிடும் பிரச்சனைகளைக் கண்டு ஓடி ஒளியாதீர்கள். ஆண்டவரைப் பற்றிப் பிடித்துக் கொண்டு வெற்றிவீரராய் வீரநடை போடுங்கள். பவுலின் ஜீவனுள்ள வார்த்தைகளை கவனியுங்கள். "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும் முறிவடைகிறதில்லை". (2 கொரி. 4:8) கவலை மேகங்களைக் கலைத்து விட்டு நம்பிக்கை வானில் வலம் வரும் நீதியின் சூரியனை உற்று நோக்குங்கள். உங்கள் இருள் வெளிச்சமாகும். கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பதே பவுலின் ஜீவியத்தின் வெற்றி இரகசியம். நாமும் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயி ருந்து இந்த உலக கவலைகளை வென்றிடுவோம்.

வேதத்தினால் வெற்றி

இங்கிலாந்தில் கேப்டன் ஜேம்ஸ் என்பவர் 30 வருட காலமாக இராணுவத்தில் சேவை புரிந்து பல யுத்தாங்களில் அற்புத மான வெற்றிகளைக் குவித்தவர். ஒரு விருந்தின்போது அவருடன் இருந்தவர்கள் "நீங்கள் அடைந்த வெற்றிகளிலை

லாம் பெரிய வெற்றி எது?" என கேட்டனர். அப்போது அவர் நான் சிறு பையனாக இருந்தபோது விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒவ்வொரு நாளும் வேதத்தைப் படித்துவிட்டு பாடங்களை படிக்கத் தொடங்குவேன். பள்ளிக்குச் செல்லும் முன்பும், விடுதிக்கு வந்த பின்பும் வேதம் வாசித்து ஜெபிப்பேன். இதைக் காணும் சக மாணவர்கள் என்னை பரியாசம் பண்ணுவார்கள். கைதட்டி சிரிப்பார்கள். ஆனாலும் நான் வேதம் வாசிப்பதையும், ஜெபிப்பதையும் நிறுத்தவில்லை. நான் படிப்பில் பெற்ற வெற்றிகளைக் கண்டு, கேலிபேசிய மாணவர்கள் வெட்கப்பட்டுப் போனார்கள். என்னைப் போலவே வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் துவங்கினார்கள். இதைத்தான் என் வாழ்வில் பெற்ற மகா பெரிய வெற்றியாக கருதுகிறேன்" என்றார். வாலிப தங்கை, தம்பிகளே! நீங்களும் வாழ்வில் இப்படிப்பட்ட பரியாசங்களையும், நிந்தைகளையும் சந்திக்கக் கூடும். தேவனுடைய சத்திய வேதத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும்போது வாழ்வில் பல வெற்றிகளைக் குவிக்கலாம். "அகந்தைக்காரர் என்னை மிகவும் பரியாசம் பண்ணியும், நான் உமது வேதத்தை விட்டு விலகினதில்லை". (சங்கீதம் 119:51)

> ஆர்வம், திறமை, உழைப்பு இந்த மூன்றும் ஒரு நேர் கோட்டில் சங்கமிக்கும்போது விளைகிற கனிதான் வெற்றி.

உழைப்பினால் வெற்றி

ஆர்வம், திறமை, உழைப்பு இந்த மூன்றும் ஒரு நேர் கோட்டில் சங்கமிக்கும்போது விளைகிற கனிதான் வெற்றி. இம்மூன்றும் ஒன்றையொன்று விட்டு தனித்திருந்தால் வெற்றி நிச்சயமில்லை. விதையும், நிலமும், நீரும், தனித்திருந்தால் பயிர் விளைவதில்லை கடினமாக உழைக்கத் தயாராக இருப்பவர்களுக்கு வெற்றியின் வாசல் எப்பொழுதும் திறந்தே இருக்கும். "என்மீது எனக்கிருந்த நம்பிக்கை, ஜெயிக்க வேண்டுமென்று உந்திக் கொண்டிருந்த ஆர்வம், அயராத உழைப்பு, தெய்வத்தின் அருள் ஆகியவைதான் என்னை ஜெயிக்க வைத்தது" என்று சாமானியனாயிருந்து சாதனையாளரான தொழிலதிபர் (ஆச்சிமசாலா) பத்மசிங் ஐசக் கூறுவது எவ்வளவு உண்மையான வார்த்தைகள்?

முழங்காலுக்குக் கீழே இரண்டு கால்களையும் இழந்த மார்க் இங்கிலீஷ் என்ற மனிதர் எவரெஸ்ட் சிகரத்தை சென்றடைந்திருக்கும்போது நம்மால் சாதிக்க முடியாதா? அதற்குத்தேவை அவரே கூறும் வார்த்தை கடுமையான உழைப்பு. விடாமுயற்சி, சவால்களை சந்திக்கத் தயாரான மனநிலையே என்று. வேதம் கூறுகிறது. தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான். (நீதி. 22:29) நீயும் உன்னுடைய வேலையில் கவனமாக இருந்தால் தேவன் உன்னை உயர்ந்த ஸ்தலத்தில் நிறுத்துவார்.

திறமைகளால் வெற்றி

பிளஸ் 2 மதிப்பெண்கள் நாம் போக வேண்டிய வாழ்க்கைப் பாதையை தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அவைதான் வாழ்வின் இறுதியா? உலகின் முடிவா? வாழ்வில் வெற்றியடைந்த சாதனையாளர்கள் பலர் கல்வியால் மட்டுமல்ல, அவர்களது பல திறமைகளாலும் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். பாடப்புத்தகங்களுக்கு வெளியேயும் ஓர் உலகம் இருக்கிறது. அந்த உலகை வென்றிட பல விதிகள் உள்ளன. உழைப்பு ஜெயிக்கும். கற்பனா சக்தி ஜெயிக்கும். படைப்பாற்றல் ஜெயிக்கும். பாடும் திறன், படைக்கும் திறன், பேசும் திறன், சமூக சேவை, விளையாட்டு போன்ற பல்வேறு திறமைகளுக்கும் இந்த உலகம் கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

> வெற்றிக்கான சாவியை யாரும் ஒளித்து வைப்பதில்லை அது நம்மிடம்தான் இருக்கிறது என்பதை மறவாதீர்கள்.

பள்ளி நாட்களில் ஜொலிக்காமல் பின்வரும் நாட்களில் வாழ்க்கையில் நட்சத்திரங்களாக ஜொலித்தவர்கள் ஏராளம். வெற்றியும், தோல்வியும் நம் உள்மனதில் உருவாக்கப்படுகிறது. வெளி உலகால் அங்கீகரிக்கப்படுகிறது. வெற்றிக்கான சாவியை யாரும் ஒளித்து வைப்பதில்லை அது நம்மிடம் தான் இருக்கிறது என்பதை மறவாதீர்கள்.

தயக்கம் வெற்றிக்கு எதிரி

சிறு தயக்கம்கூட பெரிய வெற்றியை பெறவிடாமல் தடுக்கும். நிலவில் முதன்முதலாக காலை வைத்திருக்க வேண்டியவர் ஆல்ட்ரின் என்பவர். ஆனால் புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படியிருக்குமோ, புதை மணல் இருக்குமோ, எரிமலை இருக்குமோ என்ற தயக்கத்தில் சில நொடிகள் தாமதித்தார். அதன் விளைவு அடுத்தபடியாக நாசாவிலிருந்து கட்டளை வந்த அடுத்த நொடி நீல் ஆம்ஸ்ட்ராங் தன்காலை நிலவில் பதித்தார். உலகப்புகழ்பெற்றார்.

வெற்றிக்கான டிப்ஸ்

நம் எண்ணங்கள் வலிமையானவை. அவற்றை பூக்களாக தூவுவதும், கற்களாக எறிவதும் நம் கைகளில்தான் இருக்கிறது. பூக்களாகத் தூவினால் மாலையாகிறது. கற்களாக எறிந்தால் காயங்களாக அவை திரும்பி நம்மிடமே வருகின்றன என ஓர் அறிஞர் கூறுகிறார். எண்ணங்கள் பூக்களாக இருந்தால் வாழ்வு வண்ணமயமான மாலையாக உருவாகும்.

பொருத்தமான நிறத்தில், பொருத்தமான உடை, தன்னம்பிக்கை கொண்ட விறுவிறுவென்ற நடை, தயக்கமில்லாத பதில்கள் இவை நேர்முகத் தேர்வில்

வெல்வதற்கான டிப்ஸ். தடைபோடும் மனதை வெல்வதும், நம்மால் முடியும் என்ற மனோபாவத்தை வளர்த்துக் கொண்டு அயராது உழைப்பதும் வாழ்வினை வெல்வதற்கான டிப்ஸ்.

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு. பிலிப்பியர் 4:13 என்ற வார்த்தையின்படி எல்லாக் காரியங்களிலும் முன்னேறிச் செல். நாம் என்ன செய்யவேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டு முனைப்புடன் திட்டமிட்டு படிப்படியாக செயலாற்றுபவர்கள் வெற்றியின் இலக்கணம் புரிந்து கொண்டவர்கள்.

இரண்டாவது உலகப்போரினால் சிறுத்துப் போன ஜப்பானை வீறுகொண்டு எழச்செய்தது எது? ஜப்பானியர்களின் நற்குணங்கள்தான். நல்லமனித இயல்புகள், நல்ல பழக்க வழக்கங்கள், பதினாலு மணிநேர உழைப்பு, பொறுமை, சுய கட்டுப்பாடு, பிறரது உணர்வுகளை மதிக்கும் குணம், மரியாதை, அமைதி இவைதான் அவர்களது வெற்றிக்கு வழி வகுத்த செயல்கள். வாழ்க்கையில் பல தோல்விகள் நம்மை தடுமாறச் செய்தாலும் ஆண்டவர் நமக்குக் கற்றுக்கொடுத்த கற்பனைகளை கருத்தாய் கைக் கொள்வோமானால் வெற்றி நம்மைத் தேடிவரும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை உற்று நோக்குங்கள். இந்த உலகில் மனிதனாக வாழ்ந்த காலத்தில் உழைத்து வாழ்ந்தார். பிறரிடம் அன்பு செலுத்தினார். பொறுமை சகிப்புத் தன்மையுடன் நன்மை செய்பவராக சுற்றித் திரிந்தார். அவர் மரணத்தை ஜெயமாக மாற்றினார். மகிமையோடே உயிர்த்தெழுந்தார். அவரது மரணத்திற்குப் பின் ஒரு மகிமையான சரித்திரம் ஆரம்பமானது. முன் காலத்தில் சிலுவை உலகத்தாரின் பார்வையில் தோல்வியின் சின்னமாக, மரணமே மனித வாழ்வின் முடிவாகக் கருதப்பட்டது. உயிர்த்தெழுந்த ஆண்டவரால் சிலுவை வெற்றியின் சின்னமாக மாறிவிட்டது. அவரது அன்பை நாமும் கைக்கொண்டு வாழ்வில் வெற்றிபெறுவோமாக.

ஹாலிடேஸ் எல்லாம் ஜாலிடேஸ்

கல்வி என்பது இக்காலத்தில் போட்டி நிறைந்த உலகமாகிவிட்டது. எந்த நேரமும் படிப்பு, படிப்பு என மாணவர்கள் மூளையை சூடாக்கிக் கொள்கிறார்கள். அந்த மூளையை குளிரச் செய்து அமைதிப்படுத்தவே இந்த விடுமுறை நாட்கள். இந்நாட்களில் நன்றாக ஒய்வெடுங்கள். நம் ஆண்டவரும், ஆறு நாட்களில் வானத்தையும், பூமியையும், அதிலுள்ள அனைத்தையும் அருமையாகப் படைத்து, தன் கிரியைகளை முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். (ஆதியாகமம் 2:2,3) நன்றாக உழைத்தபின் ஓய்வெடுக்க வேண்டும் என்பதை ஆண்டவரே நமக்குக் கற்றுத் தருகிறார். அந்த ஓய்வு நாட்களை பயனுள்ள நாட்களாக மாற்றிக் கொள்வது நம் கையில்தான் இருக்கிறது. உழைப்பாளர் தினத்தை (மே 1) இந்த உலகம் முழுவதும் விடுமுறை நாளாகக் கொண்டாடி மகிழ்கிறது.

நம் பெற்றோர் சிறுவயதில் விளையாடி மகிழ்ந்த எத்தனையோ விளையாட்டுகள் மறக்கப்பட்டு போய்விட்டன. கம்ப்யூட்டரும், டிவியும், வீடியோ கேம்ஸ்-ம் பிள்ளைகளை உடற்பயிற்சியே இல்லாமல் சோம்பேறிகளாக்கி விட்டன.

கிரிக்கெட் சீசனில் அந்த விளையாட்டே கதி என டி.வி. முன்பு விடுமுறை நாட்களை வீணாகக் கழிக்காதீர்கள். நீங்கள் ஒரு திறந்த வெளியில் உடலுக்குப் பயிற்சியளிக்கும் விளையாட்டுகளை உங்கள் நண்பர்களுடன் விளையாடி மகிழுங்கள். உடலுக்கும், உள்ளத்திற்கும் உற்சாகம் கிடைப்பதோடு நட்பு வட்டமும் விரிவடையும்.

விடுமுறையும், சமையலறையும்

பள்ளி, கல்லூரி நாட்களில் சமையலறைக்குள் சாப்பிடுவதற்குக் கூட நுழையாத தம்பி, தங்கைகளே! விடுமுறை நாட்களில் அங்கே அம்மா என்ன

செய்கிறார்கள் என கொஞ்சம் பாருங்கள். தங்கைமார் சமையல் கற்றுக் கொள்வதற்கு இது நல்ல தருணம். நீங்களே புதிது, புதிதாக சிற்றுண்டிகளும், சிகள் வகைகளும் செய்து அசத்தலாம். வீட்டை சுத்தம் செய்ய, துணி துவைக்க அம்மாவுக்கு உதவலாம். எப்பொழுதும் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் உங்கள் அம்மாவுக்கு இந்த விடுமுறை நாட்களில் கொஞ்சம் ஓய்வு கொடுக்கலாமே?

பெண்கள் மட்டும்தான் இந்த வீட்டு வேலைகளை செய்ய வேண்டுமா? ஆண்களும் விடுமுறையில் விளையாட்டாக இவற்றைச் செய்ய கற்றுக் கொண்டால் பிற்காலத்துக்கு உதவுமே! இருபாலரும் இக்காலத்தில் பணிபுரிய வேண்டிய நிலை இருப்பதால் இருவருமே வேலையை பகிர்ந்து கொள்வதற்கு இது உதவியாயிருக்கும்!

விடுமுறையும் தேவாலயமும்

> மிஷனெரிகளின் சரித்திரத்தைப் படித்து, திருச்சபையின் வரலாற்றைத் தெரிந்து கொண்டு மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தேர்வு காலங்களில் பெரும்பாலான வாலிப பிள்ளைகள் தேவாலயத்திற்கு ஒழுங்காகச் செல்வதில்லை. விடுமுறை நாட்களிலாவது ஆண்டவருக்காக நேரத்தைச் செலவிடுங்கள். ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்து கொள்ளுங்கள். விடுமுறை வேதாகமப்பள்ளி (V.B.S)யைப் பொறுப்பெடுத்து குழந்தைகளுக்கு வேதாகமக் கதைகளைச் சொல்லி, பாடல்கள் கற்றுக் கொடுத்து, அவர்களோடு ஆடிப்பாடி, ஹாலிடேயை ஜாலிடேயாக்கி மகிழுங்கள். அனுதின வேதவாசிப்பும், ஜெபமும், தியானமும், தேர்வு நேரத்தில் துரித கதியில் முடிந்திருக்கும். இப்போது அவற்றிற்கு அதிக நேரம் செலவழிக்கலாமே? மிஷனெரிகளின் சரித்திரத்தைப் படித்து, திருச்சபையின் வரலாற்றைத் தெரிந்து கொண்டு மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். ஏதாவது ஓர் இசைக்கருவியை இந்த விடுமுறை நாட்களில் இசைக்கக் கற்றுக் கொண்டால் வாழ்நாள் முழுவதும் ஆண்டவரை மகிமைப்படுத்தலாம்.

'நீ இளவயதுள்ள வனாயிருந்த போது... உனக்கு இஷ்டமான இடங்களில் நடந்து திரிந்தாய்' (யோவான் 21:18) நமக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்வதில் தவறில்லை. ஆனால் தீய நண்பர்களோடு சேர்ந்து சினிமா, கேளிக்கை விடுதிகள், சீட்டாட்டம் என சுற்றித் திரிவதைத் தவிர்த்திடுங்கள். திராட்சைத் தோட்டங்கள் நிறைந்த போகக்கூடாத திம்னாத்துக்குப்போய் (நியாயாதிபதிகள் 14:1) சிம்சோன் அனுபவித்த துன்பத்தை நாம் அறிவோமே!

சரி, விடுமுறை என்றால் சுற்றுலா இல்லாமலா? இந்த விடுமுறை நாட்களில் அவரவர் வசதிக்கேற்ப சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று வரலாம்.

மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கும். நீண்டநாட்களாகச் செல்ல வேண்டும் என நினைத்திருந்த இடங்களுக்குப் பெற்றோருடன் சென்று வாருங்கள். இந்த விடுமுறை நாட்களில் சிறியோர் முதல் முதியோர் வரை அனைவரையும் மகிழ்விப்பது சுற்றுலா பயணம்தான்.

'கனா காணுங்கள்' என்றார் அப்துல் கலாம். இந்த விடுமுறை காலத்தில் எதிர்காலத்தைக் குறித்து கனா காணுங்கள். இளைஞர்களே! யோசேப்பு கண்ட கனவு பலித்தது போல உங்கள் கனவுகளையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுவார். தேர்வு காலம் வந்தால் பெற்றோர்களுக்கும் தேர்வு ஜீரம் வந்துவிடும். பிள்ளைகளோடு சேர்ந்து அவர்களும் கண் விழித்து, தேநீர் தயாரித்து கொடுத்து தேர்வு முடியும்வரை பெற்றோர்கள் படும்பாடுக்கு அளவே இல்லை. இந்த விடுமுறை நாட்களில் பெற்றோரும் ரிலாக்ஸ் செய்து கொள்ளுங்கள். உங்களை நீங்களே புதுப்பித்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளோடு சேர்ந்து இந்த விடுமுறை நாட்களை கொண்டாடி மகிழுங்கள்.

தீய நண்பர்களோடு சேர்ந்து சினிமா, கேளிக்கை விடுதிகள், சீட்டாட்டம் என சுற்றித் திரிவதைத் தவிர்த்திடுங்கள்

நினைத்துப் பார்...

ஆகஸ்டு 15. ஒவ்வொரு ஆண்டும் நாம் சுதந்திரம் பெற்றதை நினைத்துப்பார்த்து கொண்டாடும் மகிழ்ச்சியின் தினம் அது. பெற்ற சுதந்தரத்தை பேணிக் காக்கிறோமா? தினமும் காலையில் நாளிதழைத் திறந்து பார்க்கவே அச்சமாயிருக்கிறது. வன்முறைகளும், கொலைகளும், தீவிரவாதமும் தலைப்புச் செய்திகளாகி நாம் இருப்பது சுதந்திர இந்தியாவிலா? என நெஞ்சம் பதற வைக்கிறது.

இரத்தம் சிந்தி, இன்னுயிர் ஈந்து, மனைவி, மக்களை துறந்து, சிறையில் வாழ செக்கிழுத்து சுதந்திரம் வாங்கித் தந்த சுதந்திர வீரர்களை நினைவு கூருவோம். அதேபோன்று திருச்சபைக்காக இரத்தம் சிந்தி தங்கள் இன்னுயிரை ஈந்த ஆதி அப்போஸ்தலர் களையும், மிஷனெரிகளை யும் என்றும் நினைத்துப் பார்க்கக் கடமைப் பட்டுள்ளோம்.

பூர்வநாட்களை நினைத்திடு...

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேயர் இந்தியாவை ஆட்சி செய்தபோது ஸ்காட் என்ற ஒரு ஆங்கிலேயர் மிஷனெரியாக நாகர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கச் செல்ல விரும்பினார். அங்கு செல்வது உயிருக்கு ஆபத்து என பிரிட்டிஷ் அரசினால் எச்சரிக்கப்பட்ட அவருக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வந்தது. ஆனால் தான் ஒரு சமாதானத்தூதுவனாகவே அங்கு செல்ல விரும்புவதாகவும், தனக்குப் பாதுகாப்புத் தேவையில்லை எனவும் கூறி நாகர்கள் வாழும் ஒரு கிராமத்தை நோக்கிச் சென்றார். அவரது ஒருகையில் வேதாகமும் மறுகையில் ஒரு இசைக் கருவியும் இருந்தது. அவர் நாகர்மொழியை நன்கு அறிந்திருந்தார்.

திடீரென நாகர்கள் அவரைச் சுற்றி வளைத்து அவரை வந்த வழியே திரும்பிப் போகும்படி எச்சரித்தனர். அவரைக் கொன்று விடுவதாக மிரட்டினர். அந்த மிஷனெரி எதற்கும் அஞ்சவில்லை. தனது கையிலிருந்த இசைக்கருவியை எடுத்து மீட்டி நாகர் மொழியில் ஒரு பாடலைப் பாடினார். இசையில் மயங்கிய நாகர்கள் அவரைப்பார்த்து இன்னொரு பாடல் பாடுமாறு கேட்டனர். தங்கள் கிராமத்திற்கு

வந்து எல்லோருக்கும் அந்தப் பாடலைக் கற்றுக் கொடுக்கும்படி கேட்டனர்.

இவ்வாறு நாகர்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் தொடங்கியது. இன்று நாகர்கள் 98 சதவீதம்பேர் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். நாகலாந்து சட்டசபை நிகழ்ச்சிகள் ஜெபத்தோடு ஆரம்பிக்கப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் ஒரு மிஷனெரியின் தைரியமும், தியாகமும்தான். இந்தியாவில் இயேசுவை அறியாத எத்தனையோ கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சுவிசேஷம் அறிவிப்பது நம்மேல் விழுந்த கடமையல்லவா? சிந்தையில் ஆத்மபாரம் கொண்டு, மிஷனெரிகளை நினைவு கூர்ந்து ஆண்டவரின் நாமத்தை தைரியமாக அறிவிப்போம்.

முந்தின நாட்களை நினைத்திடு...

கர்த்தரின் கிருபையாலும், பெற்றோரின் உழைப்பு, தியாகம் ஆகியவற்றால் நாம் நன்கு படித்து, நல்ல பணியில் சேர்ந்து கைநிறைய ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் சிறு வயது முதல் வளர்த்து, ஆளாக்கி, சிரமப்பட்டு படிக்க வைத்த பெற்றோரை கனம்பண்ணுகிறோமா? கல்லூரியில் படிக்கும் சில தம்பிமார் ஏழைக்கோலத்தில் தம்மை பார்க்கவரும் பெற்றோரை தங்கள் வீட்டு வேலைக்காரர் என்று சொன்ன சில சம்பவங்களை நாம் அறிவோம். வீட்டில் வைத்து அன்பு செலுத்த வேண்டிய பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடும் பிள்ளைகள், அவர்கள் பிள்ளைகளும் அதையே செய்வார்கள் என்பதை நினைத்து பார்க்க வேண்டும். முந்தின நாட்களில் நம் பெற்றோர் நமக்குச் செய்த நன்மைகளை நினைத்து அவர்களை கனம்பண்ணுவோம்.

நிந்தைகள், உபத்திரவங்கள் நிறைந்த பாதை வழியாக, வாழ்வின் ஆரம்பநிலையில் நீங்கள் நடந்து வந்திருக்கலாம். அதனை மறவாமல் வசதிபடைத்த காலத்தில் உபத்திரப்படுபவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

இன்றைய தலைமுறை 'எங்கள் பிதாக்களைப் பார்க்கிலும், நாங்கள் மேலானவர்கள்' என்று நினைக்கும் தலைமுறை. கணிப்பொறி காலமாகிய இக்காலத்தில் அறிவின் பெருக்கத்தை எல்லாத் துறைகளிலும் காண்கிறோம். நீங்கள் அறிவில் தேறினவராய், பலசாலியாய், சமுதாயத்தில் பெயர் பெற்றவராக இருக்கலாம். ஆனால் ஆன்மீக சிந்தை இல்லா விடில், ஆண்டவரின் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியாது. தானியேலும், யோசேப்பும், தாவீதும் காரிய சமத்தராயிருந்தாலும், ஆண்டவரை எப்போதும் நினைவில் கொண்டவர்களாய், தங்கள் வலது பாரிசத்தில் வைத்திருந்ததால் அவர்களின் காரியங்களை ஆண்டவர் வாய்க்கப்பண்ணினார்.

பாடப்புத்தகங்களுக்கு நேரம் செலவிடுவதுபோல, வேதத்தை வாசிப்பதற்கும் நேரத்தை ஒதுக்குங்கள். வேதத்தை நினைவில் கொள்ள மறந்தால் ஆண்டவரும் நம்மை மறந்துவிடுவார். வாலிப நாட்களில் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் முதிர்வயதுவரை ஆண்டவர் ஏந்துவார், சுமப்பார், தீங்குக்கு தப்புவிப்பார்.

வெல்வது நிச்சயம்

கல்லூரி வாழ்க்கைக்குள் நுழைந்திருக்கும் அனைவருக்கும் வாழ்த்துகள். குறிப்பாக தொழில் சார்ந்த படிப்புக்கான கல்லூரிகளில் பலர் சேர்ந்திருப்பீர்கள். வித்தியாசமான சூழ்நிலை, படிப்பு, சிலருக்கு உற்சாகத்தைக் கொடுக்கலாம். சிலருக்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருக்கலாம். ஆரம்பத்தில் சவாலாகக் காணப்படும் பாடங்கள் போகப் போக எளிதாக காணப்படலாம். பெற்றோர்கள் மிகச் சிரமப்பட்டு உங்களை கல்லூரிகளில் சேர்த்திருக்கிறார்கள் என்பதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். பிடிக்காத பாடம், பிரிவு என்பதற்காக பாதியில் விட்டு ஓடி விடாமல், எதையும் சவாலாக ஏற்றுக் கொண்டு படிப்பை தொடருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சார்ந்து கொள்ளுங்கள். ஒளிமயமான எதிர்காலத்தை உங்களுக்குத் தர அவர் ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் வெல்வது நிச்சயமே

எதிரியை வீழ்த்திய சவால்

வீரனாகிய கோலியாத்தை எதிர்க்க அரசனாகிய சவுலால் முடியவில்லை. அவன் சவுலின் யுத்த வீரர்களைப் பார்த்து யாராவது ஒருவர் என்னோடே யுத்தம் பண்ணவும், என்னைக் கொல்லவும் வாருங்கள் என அழைத்தான். எவராலும் ஏற்கமுடியாத சவாலாக கோலியாத் காணப்பட்டான். (1 சாமுவேல் 17:8) முறையான போர் பயிற்சி பெறாத தாவீது சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் அவனிடத்திற்குச் சென்றான். (1 சாமுவேல் 17:45)

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞனாகிய தாவீது 'என்னால் ஏன் முடியாது' என்னோடு தேவன் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு கோலியாத்தின் சவாலை ஏற்றுக் கொண்டான். ஒரு கவணினாலும், ஒரு கல்லினாலும் கோலியாத்தை வீழ்த்தினான் (1 சாமுவேல் 17:50) ஆம்



தேவன் நம்மோடிருக்கும் போது எப்படிப்பட்ட கடின காரியமும் இலகுவாகத் தோன்றும். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாம் கூடும் என்ற நம்பிக்கை எந்த சவாலையும் முறியடிக்கும்.

வாழ்க்கையே சவால்தான்

"நாம் எல்லோரும் இப்பொழுது தேவனுக்கு நன்றி கூறுவோம்" என்ற பாடலை எழுதிய மார்ட்டின் ரிங்கார்ட், முப்பது ஆண்டுகள் போர் மற்றும் நெருக்கடியில் பணியாற்றியபோதுதான் அதை எழுதினார். அவர் போதகராக இருந்தபடியால் போரின்போது ஒரு நாளில் ஏறக்குறைய 40 அடக்க ஆராதனையை நடத்த வேண்டியதாயிற்று. அவரது மனைவியின் அடக்கமும் அதில் சேர்ந்தது அவரைச் சுற்றியிருந்த யுத்தம், கொள்ளை நோய், அவருக்குள் இருந்த துக்கம் இவற்றின் மத்தியிலும் வாழ்க்கையை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டார். அதனாலேயே தேவனுக்கு நன்றி செலுத்தும் பாடலை அவரால் எழுத முடிந்தது.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாம் கூடும் என்ற நம்பிக்கை எந்த சவாலையும் முறியடிக்கும்.

நம்முடைய வாழ்க்கையிலும் பரீட்சையில் தோல்வி, அன்புக்குரியவர்களின் மரணங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்ற பல சோதனைகள் சவாலாக காணப் படலாம். தினம் வேதம் வாசிப்பது, ஜெபிப்பது, சக மனிதர்களிடம் அன்பு பாராட்டுதல், உதவுகின்ற நற்குணம் ஆகிய நற்கிரியைகளால் சவால்களை சமாளிக்கும் பலத்தை ஆண்டவர் நமக்கருளுவார்.

மிஷனெரிகளும் சவாலும்

மிஷனெரிகளின் வாழ்க்கை எப்போதும் சவால் நிறைந்த வாழ்க்கையாகவே காணப்படுகிறது. 17ம் நூற்றாண்டில் சில மிஷனெரிகள் முதன்முதலாக சீனா தேசத்துக்குள் சென்று சுவிசேஷம் அறிவிக்க முயன்றனர். அது அவர்களுக்கு மிகப்பெரிய சவாலாகவே காணப்பட்டது. பலமுறை முயன்றும் அத்தேசத்துக்குள் நுழையமுடியவில்லை திபெத் வழியாக முயன்றும் செல்ல முடியவில்லை. மாறுவேஷத்தில் சென்றும் முடியவில்லை. அவர்களையும், சீன தேசத்தையும் பிரித்த மலையைப்பார்த்து, மலையே, மலையே எப்பொழுது எங்களுக்கு பாதை திறப்பாய்? எனக் கேட்டு அதற்காக ஊக்கமாக ஜெபித்தனர்.

என்ன ஆச்சரியம், ஒரு நாள் பாதை திறந்தது. மிஷனெரிகள் சீன தேசத்துக் குள் சென்று சுவிசேஷம் அறிவித்து ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை ஆதாயம் செய்தனர். வாழ்க்கையில் தோல்விகளும், துன்பங்களும் மலை போல் தோன்றி மலைப்பை ஏற்படுத்தலாம். ஜெபம் என்னும் உளி எப்படிப்பட்ட துன்ப மலையையும், தோல்வி மலையையும் உடைத்து, தகர்த்துவிடும்.

வாலிபமும் சவாலும்

வாலிப வயதில் இருக்கும் உங்களுக்கு ஒவ்வொரு நாளும் பலவித பாவ சோதனை களை சவாலாக எதிர் கொள்ள வேண்டிய திருக்கிறது. கண்களினால், மனதினால் செயல்களினால் கறைபட்டுப் போகும் நிலை ஏற்படலாம். பாவம் என்று உணர்ந்தும், அதைவிட்டு விலக முடியாதபடி சாத்தான் வஞ்சிக்கிறான்.

அழகான ரூபம் கொண்ட யோசேப்புக்கு அவனது எஜமானின் மனைவியின் தவறான இச்சை சவாலாக அமைந்தது. ஆனால் அந்த இச்சைக்கு விலகியோடி சாத்தானின் சவாலை சமாளித்து வாலிபத்தை கறைபடாமல் காத்துக் கொண்டதினால் யோசேப்பு வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்தான். நீங்களும் 'கர்த்தாவே வாலிபத்தை கறைபடாமல் காப்பீராக' என ஆண்டவரிடம் கேளுங்கள். சோதனை களிலிருந்து விடுவிக்க ஆண்டவர் வல்லவரா யிருக்கிறார். மனித வாழ்வில் நாம் சந்திக்கும் அத்தனை சவால்களுக்கும் வேதத்தில் விடையுண்டு. வேத வாசிப்பு, ஜெபம் என்னும் பட்டயங்களால் சாத்தானின் சவால்களை முறியடியுங்கள். வாழ்வில் வெற்றி பெறுங்கள்.

> ஜெபம் என்னும் உளி எப்படிப்பட்ட துன்ப மலையையும், தோல்வி மலையையும் உடைத்து, தகர்த்துவிடும்.

தாலந்தைப் புதைத்திடாமல்...

இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் ஒவ்வொருவிதமான தாலந்தை, திறமையை அளித்திருக்கிறார். பவுல் அப்போஸ்தலர் சொல்வதுபோல அவை வித்தியாசமான வரங்களாக இருக்கலாம். சிலருக்கு பாடும் திறமை, சிலருக்கு பேசும் திறமை, சிலருக்கு ஓவியம் வரையும் திறமை, சிலருக்கு நல்ல தொழில் செய்யும் திறமை இருக்கலாம். அவை யாவும் தேவன் நமக்கு அளித்த ஈவுகளே. அவரவர் தகுதிக்கேற்ப ஆண்டவர் கொடுத்திருக்கும் தாலந்துகளைப் பயன்படுத்தாமல் இருப்பது அதைப் புதைத்து வைப்பதற்கு சமம்.

செல்வந்தனும் தாலந்துகளும்

செல்வந்தனாகிய வியாபாரி ஒருவன் வெளிநாட்டுக்குச் செல்லும்போது தன் ஊழியக்காரர் மூவரிடம் அவர்களது திறமைக்குத் தக்கவாறு ஒருவனிடம் ஐந்து தாலந்துகளும் ஒருவனிடத்தில் மூன்று தாலந்துகளும், மூன்றாமவனிடம் ஒரு தாலந்தும் கொடுத்துச் சென்றான்.

ஐந்து தாலந்துகளைப் பெற்றவன் அந்த பணத்தை வைத்து வியாபாரம் செய்து கூடுதலாக ஐந்து தாலந்தை சம்பாதித்தான். இரண்டு தாலந்துகள் பெற்றவனும் அதைப்பயன்படுத்தி கூடுதலாக இரண்டு தாலந்துகள் சம்பாதித் தான். ஒரு தாலந்து பெற்றவன் அதை புதைத்து வைத்து நிம்மதியாக இருந்தான்.

செல்வந்தன் திரும்ப வந்தபோது ஐந்து தாலந்து பெற்றவனும் இரண்டு தாலந்து பெற்றவனும் அதைப்பயன்படுத்தி பெருக்கி யிருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்து அவர்களுக்கு உயர்பதவிகளை அளித்தான். ஒரு தாலந்தைப் பெற்றவன் அதைப் புதைத்து வைத்ததைக் கண்டு செல்வந்தன் மனம் வருந்தினார். அதை வீணடித்ததோடு அதைக் கொடுத்த தன்னையும் கொடுமைக்காரனாக சித்தரிப் பதைக் கேட்டு கோபமும் கொண் டான். அவனை அழுகையும், பற்கடிப்பும் நிறைந்த தண்டனைச் சாலையில் போடும்படி உத்தரவிட்டான்.

இதில் செல்வந்தன் என்பது ஆண்டவரை

டும். ஊழியர்கள் என்பது மக்களையும் குறிக்கிறது. ஆண்டவர் நம் எல்லோருக்கும் ஆற்றல், அறிவு, நல்ல சூழ்நிலை ஆகிய தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். சிலருக்கு அதிகமாகவோ, சிலருக்கு குறைவாகவோ இருக்கலாம். எந்தத் திறமையும் இல்லாமல் ஆண்டவர் யாரையும் படைப்பதில்லை. திறமைகளையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வது மனிதனின் கையில்தான் இருக்கிறது. ‘இறைக்கிற கிணறே ஊறும்’ என்பது போல பயன்படுத்தப்படும் தாலந்துகளே பெருகும். ஆண்டவரும் அதைக் கண்டு மனம் மகிழ்ந்து மேலும் மேலும் தாலந்துகளை அளித்து ஆசீர்வதிப்பார். திறமைகளைப் பயன்படுத்தாமல் சோம்பலுடன் வாழ்நாளை வீண்நாளாகக் கழிப்போர், வாழ்வில் துன்பங்களையே அனுபவிக்க நேரிடும். ‘சோம்பேறியின் மனம் பிசாசின் தொழிற்சாலை’

> ‘இறைக்கிற கிணறே ஊறும்’ என்பது போல பயன்படுத்தப்படும் தாலந்துகளே பெருகும்.

காலம் என்ற தாலந்து

“காலம் பொன் போன்றது” என்பது பழமொழி. விலையுயர்ந்த பொன்னை கவனமாக நாம் கையாளுவது போல காலத்தையும் நாம் பயன்படுத்த வேண்டும். அதை வீணாகக் கழிப்பது ஆண்டவருக்குப் பிரியமில்லாத காரியம். படிக்க வேண்டிய காலத்தில் நேரத்தை வீணாக்காமல் படிக்க வேண்டும். போட்டி நிறைந்த இவ்வுலகில் யாரும், யாருக்காகவும் காத்திருக்க நேரமில்லாமல் உழைக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ‘உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே” என பவுல் கூறுவதை மனதிலிருத்தி திறமையை பயன்படுத்தி, காலத்தை வீணாக்காமல் உழைப்போம்.

தாலந்துகளை பயன்படுத்துவது எப்படி?

நமக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளைப் பற்றி ஆண்டவர் கணக்குக் கேட்பார் என்பதை நாம் உணர வேண்டும். நன்மையும், செம்மையுமான காரியங்களுக்கு நம் தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும். பாடும் திறமைபெற்றோர், இசைக் கருவி வாசிப்பதில் திறமை வாய்ந்தோர் அதனை ஆண்டவரின் ஊழியத்திற்குப் பயன்படுத்த வேண்டும். பணம் கிடைக்கிறது என்பதற்காக சினிமா உலகிற்கு அவற்றைப் பயன்படுத்துவது தாலந்தை மண்ணிற்குள் புதைத்து வைப்பதற்கு சமம். அதனால் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை இழந்து நித்திய அக்கினியை சுதந்தரிக்க நேரிடும்.

தாவீது இசைக்கருவிகளை இசைத்துப் பாடும் ஓர் இனிய பறவை. ஆடு மேய்க்கும் சிறுவனாக இருந்தபோதும், அரசனாக ஆனபிறகும் பாடும் தாலந்தை ஆண்டவருக்கென்றே பயன்படுத்தினான். ‘கர்த்தர் எனக்கு நன்மை

செய்தபடியால் அவரைப் பாடுவேன்' (சங்கீதம் 13:6)

தாலந்தும் சாட்சியுள்ள வாழ்க்கையும்

நம் தாலந்துகளை மட்டும் ஆண்டவருக்கென்று பயன்படுத்தினால் போதாது. நம்முடைய வாழ்க்கையும் தேவனை மகிமைப்படுத்துவதாய், சாட்சியுள்ளதாய் இருக்க வேண்டும் ஊழியம் என்ற பெயரில் ஊழியக்காரர்களோடு மேடையில் ஆண்டவரைப் போற்றி இனிய பாடல்களைப்பாடி, இசைக் கருவிகளை மீட்டி ஆண்டவர் அளித்த தாலந்துகளை பயன்படுத்திவிட்டு, வீட்டுக்குச் செல்லும் வழியில் மதுபானக் கடையை நாடிச் செல்லும் இளைஞர்களா நீங்கள்? ஆண்டவரை வெட்கப்படுத்தாதீர்கள். மீண்டும் அவரை சிலுவையில் அறைய வேண்டாமே?

> திறமைகள்,
> தாலந்துகள்
> ஆண்டவர்
> நமக்களித்துள்ள
> ஆசீர்வாதங்கள்.

ஆண்டவருடைய ஊழியங்களுக்குப் பணம் தேவைதான். ஆனால் அதைவிட மிக அவசியம் நமது சாட்சியுள்ள வாழ்க்கை என்பதை ஒருபோதும் மறக்க வேண்டாம். தேவனுடைய வார்த்தைகளின்படி வாழாதவர்களின் பணத்தையோ, அவர்கள் பயன்படுத்தும் தாலந்துகளையோ ஆண்டவர் ஒருபோதும் அங்கிகரிப்பதில்லை.

இக்கால இளைஞர்கள் திறமை வாய்ந்தவர்கள். கல்லூரியிலும், பள்ளியிலும் படிக்கும் காலத்திலேயே தங்கள் தாலந்துகளை பயன்படுத்தி பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறார்கள். நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அறிவியல் வளர்ச்சிக்கும், தொழில் புரட்சிக்கும் வழிவகுக்கும் இளைஞர்கள் வளமான இந்தியாவின் எதிர்காலத் தூண்கள்.

இளைஞர்களே! திறமைகள், தாலந்துகள் ஆண்டவர் நமக்களித்துள்ள ஆசீர்வாதங்கள். அவற்றை ஆக்கபூர்வமான செயல்களுக்கு மட்டுமே பயன்படுத்துங்கள். தீவிரவாதத்திற்கோ, தேச துரோக செயல்களுக்கோ பயன்படுத்தி தாய், தந்தைக்கும், தாய்த்திருநாட்டுக்கும் தலை குனிவை ஏற்படுத்தி விடாதீர்கள். அறிவையும், திறமையையும் வீணாக்கி விடாதீர்கள்.

ஆண்டவர் நமக்களித்திருக்கும் தாலந்துகளுக்காக நன்றி செலுத்துவோம். அவருடைய நாமம் மகிமைப்பட மட்டுமே அவற்றை பயன்படுத்துவோம். தாலந்தைப் புதைத்திடாமல், உண்மையும், உத்தமுமான ஊழியக்காரனே' என ஆண்டவரால் அழைக்கப்படும் பாக்கியம் பெறுவோம்.

ஆயத்தப்படு...

பறவைகளின் இனிய சத்தங்கள், குளிர்ந்த தென்றல், பணிக்குச் செல்வோரின் வாகன ஒலிகள், நடைப்பயிற்சியினை மேற்கொள்ளும் மனிதர்களின் காலடி ஓசைகள், தினசரி இதழ்களை வீடுகளுக்குள் வீசியெறியும் சிறுவர்களின் சைக்கிள் மணி சப்தம். ஒரு காலைப் பொழுது உதயமாவதற்கான ஆயத்தங்கள் தான் இவை. நம் வாழ்வு இவ்வுலகிலும், பரலோகிலும் இனிதா யிருப்பதற்கு என்னென்ன ஆயத்தங்கள் தேவை என பார்ப்போமா?

பூவுலக வாழ்விற்கான ஆயத்தங்கள்

போட்டி நிறைந்த இவ்வுலகில் வாழ்வதற்கு கடுமையாக உழைக்க வேண்டியதாயிருக்கிறது. அதற்கு கல்வி மிக அவசியம். இன்றைய நவீன உலகில் தாயின் கருவில் இருக்கும்போதே குழந்தை கற்றுக் கொள்ள ஆயத்த மாகிறது. மூன்று வயதிலேயே பள்ளிக்குச் செல்ல ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள். எதிர்கால இந்தியாவின் விஞ்ஞானிகளாக விளங்குவதற்கு பள்ளிப்படிப்பின் போதே ஆயத்தமாகி விடுகிறார்கள். கல்லூரிப் படிப்பு முடிந்ததும் நல்ல பணிக்கான நேர்முகத் தேர்வுகள், போட்டித் தேர்வுகளுக்கு ஆயத்தம். குதிரை யுத்த நாளுக்கென்று ஆயத்தப்படும். ஜெயமோ கர்த்தரால் வரும்.

நாம எவ்வளவுதான் வெற்றிக்கென ஆயத்தங்களை செய்தாலும் ஆண்டவரின் ஆசீர்வாதம் இல்லையேல் வாழ்வில் வெற்றியடைய முடியாது. அற்புதங்களை காண முடியாது.

அற்புதங்களுக்கான ஆயத்தம்

தேவ கோபத்தால் தேசம் மழையில்லாமல் பாழாயிற்று. மிருகங்களும், மனிதர்களும் குடிக்கக் கூட நீரின்றி வாடினர். மனித இனமே மரணத்தை நோக்கியிருந்த வேளை. தண்ணீர் கிடைப்பதற்கு எந்த சாத்தியமும் இல்லை. என்ன? இது இப்போது

நடக்கும் கதைபோல் இருக்கிறது என நினைக்கிறீர்களா? இது எலிசா தீர்க்கதரிசி காலத்து கதை. எலிசாவின் விசுவாசக் கண்கள் மழையைக் கண்டன. 'வாய்க்கால்களை வெட்டுங்கள்' என உற்சாகமாக கூறினார். மழை வருவதற்கு முன்னதாகவே வாய்க்கால்களை வெட்டி ஆயத்தமாக இருக்கச் சொன்ன எலிசாவின் விசுவாசம், நம்பிக்கை நமக்கு இருக்கிறதா? ஆண்டவரிட மிருந்து அற்புதங்களை எதிர்பார்க்கிறோம். ஜெபிக்கிறோம். ஆனால் அற்புதங் களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறோமா? சிந்திப்போம்.

மேன்மையான வாழ்வுக்கான ஆயத்தம்

நம் ஆண்டவர் நமக்கு எப்போதும் நல்ல ஈவுகளைத் தர ஆயத்த மாயிருக்கிறார். நம்மை கீழாக்காமல் மேன்மையாக வைத்திருக்கவே அவர் விரும்புகிறார். தகப்பனிடம் பிள்ளைகள் தனக்கு வேண்டியதை கேட்டுப் பெறுவதைப் போல நாமும் உரிமையோடு கேட்க வேண்டும். விசுவாசத்தோடு காத்திருக்க வேண்டும்.

> நம்மை கீழாக்காமல் மேன்மையாக வைத்திருக்கவே அவர் விரும்புகிறார்.

விக்டோரியா மகாராணி சிறுமியாக இருந்த போதுதான் இங்கிலாந்தின் ராணியாகப் போவதை அறிந்திருக்கவில்லை. அவருடைய ஆசிரியர்கள் எதிர்காலத்தில் ராணியாக்குவதற்கு ஆயத்தப் படுத்த முயன்றார்கள். ஆனால் அவர் அதற்கு ஒத்துழைக்கவில்லை. பாடத்தில் ஆர்வம் காட்ட வில்லை. அனால் 'நீதான் இங்கிலாந்து தேசத்தின் மகாராணியாகப் போகிறாய்' என்று ஆசிரியர்கள் கூறியதும், மேலான பதவியை சுதந்தரிக்கப் போகிறோம் என்பதை உணர்ந்து, அதற்காக ஆயத்தப்பட ஆரம்பித்தார். ஆண்டவரின் மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும், மேன்மையான வாழ்வுக்காகவும் நாம் ஆயத்தப்பட வேண்டும்.

ஆண்டவரின் வருகைக்கான ஆயத்தம்

நினையாத நேரத்தில் ஆண்டவரின் வருகை இருக்கும் என கூறப்படுவதால் நாம் அவரை சந்திக்க எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆவிக்குரிய வாழ்வில் புத்தியற்ற கன்னிகைகள்போல் தூங்காமல், புத்தியுள்ள கன்னிகைகள் போல் ஆயத்தம் என்னும் எண்ணெயோடு ஆண்டவருக் காக நாம் காத்திருக்க வேண்டும். பாவங்களை விட்டொழிந்து, ஆவியின் கனிகளை சுதந்தரித்துக் கொண்டவர்களாய் நற்செயல்களை செய்து ஆயத்தம் என்னும் பாதரட்சைகளை அணிந்தவர்களாய் இருந்தால் மட்டுமே ஆண்டவரது வருகையின்போது அவரோடு கூட நித்திய வாழ்வுக்குள் பிரவேசிக்க முடியும்.

பண்டிகைக்கு ஆயத்தமாவோம்

பண்டிகை என்றாலே சந்தோஷம்தான். வீடுகளுக்கு வெள்ளையடித்து,

சுத்தம் செய்து. வண்ணத் தோரணங்களாலும். விளக்குகளாலும். அலங்கரிக்க திட்டங்கள் ஏராளம் வைத்திருப்பீர்கள். எல்லாம் நல்லதுதான்.

ஆனால் நம்மை சுற்றியுள்ள ஏழை எளியவர்களையும். இந்த பண்டிகைக் காலங்களில் நினைத்துக் கொள்ள வேண்டும். புதிய ஆடைகளை நீங்கள் அணிந்து மகிழும்போது. கந்தல் ஆடையோடு நிற்பவர்களை கொஞ்சம் நினைத்து அவர்களுக்கும் உங்களால் முடிந்தால் ஆடை வாங்கிக் கொடுங்கள். விதவிதமான கேக்குகள். இனிப்புகள். உணவுகள் உங்களுக்கு மட்டும்தானா? அவர்களும் கொஞ்சம் உண்டு மகிழட்டுமே. இந்த ஏழைகளுக்கு நீங்கள் செய்யும் உதவியால். ஏழைக் கோலமெடுத்து அவதரித்த இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதமும் அளவில்லாமல் உங்களை மகிழ்விக்கும்.

> நம்முடைய நற்குணங்களால் ஆண்டவரது ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெறுவோம்

பூமியில் நடைபெறும் பஞ்சங்கள். பூமி அதிர்ச்சிகள். யுத்தங்கள். வன்முறைகள். சுபாவ அன்பில்லாமை ஆகியவை கடைசி காலம் என்பதையும். ஆண்டவரின் வருகை சமீபம் என்பதையும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. அவரது வருகையின் போது ஏற்றுக் கொள்ளப்படும் தகுதிபடைத்தவராயிருக்க நம்மை ஆயத்தம் செய்வோம். நம்முடைய நற்குணங்களால் ஆண்டவரது ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெறுவோம்.

உன்னைத் தேடி வரும் ஆசீர்வாதம்

இந்த உலகமக்களின் பாவம்போக்க பாலனாக பாரினில் பிறந்த ஆண்டவரின் பிறப்பை பண்டிகையைக் கொண்டாடி மகிழும் மாதம் இது. தம்பி தங்கையே! உன்னைத் தேடி வரும் இயேசுவின் பிறப்பின் நற்செய்தியையும், அன்பையும் அறியாத நண்பர்களிடம் பகிர்ந்துகொள்கிறாயா?

ஆதாமைத் தேடி வந்த ஆண்டவர்

பாவம் செய்த ஆதாமை கர்த்தர் தேடி வந்தார். கீழ்ப்படியாத அவனை எப்படியோ போகட்டும் என்று ஆண்டவர் விட்டுவிடவில்லை! "நீ என்ன செய்தாய்? ஏன் பறிக்கக்கூடாத பழத்தைப் பறித்தாய்" என்று கோபமாய்த் திட்டுவதற்காக அவனைத் தேடவில்லை. மாறாக தகப்பன் மகனைத் தேடுவது போல "ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?" என பாசத்துடன் தேடுகிறார்.

ஆண்டவர் உன்னைத் தேடி வரும்போது உன்நிலைமை என்ன? ஆதாமைப்போல ஒளிந்துகொள்வாயோ?

ஈசாக்கைத் தேடி வந்த ஆசீர்வாதம்

ஆண்டவருக்குள் கீழ்ப்படியும் போது ஆசீர்வாதம் உன்னைத் தேடி வரும். கர்த்தர் ஈசாக்குக்குத் தரிசனமாகி நீ எகிப்துக்குப் போகாமல் நான் உனக்குச் சொல்லும் தேசத்தில் குடியிரு. அப்போது உன்னோடு கூட இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன் (ஆதி.26:2,3) என்று கூறுகிறார். செழிப்பாக இருந்த எகிப்துக்குப் போவதே. அவனுடைய விருப்பமாக இருந்தது. கானான் தேசத்தில் பஞ்சம் உண்டாயிருந்தது. ஆனாலும் தேவ சித்தத்துக்கு அவன் கீழ்ப்படிந்ததால் நூறுமடங்கு ஆசீர்வாதம் அவனைத் தேடி வந்தது. எந்த சூழ்நிலையிலும் நாம் தேவனைச் சார்ந்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது ஆசீர்வாதம் நம்மைத் தேடி வரும்.

சாலமோனைத் தேடி வந்த ஆசீர்வாதம்

சாலமோனிடம் வந்த ஆண்டவர் நீ விரும்புகிறதைக்கேள் என்றார். அவன் வெள்ளியையும், பொன்னையும் கேட்டிருக்கலாம். அரசனாக இருந்ததால் யுத்தத்தில் எப்போதும் எனக்கு வெற்றி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கலாம். ஆனால் அவன் கேட்டது என்ன? ஞானத்தையும், அறிவையும் எனக்குத்தாரும் (2 நாளா.1:10) என்று கேட்டான். அதன்மூலம் ஆண்டவரின் ஆசீர்வாதத்தையும், உகைப்புகழையும்· பெற்றுக்கொண்டான்.

ஆண்டவர் இன்று உன்னைத்தேடி வந்து "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டால் என்ன கேட்பாய்? பொன்னையா? பொருளையா? பதவியையா? தலைதயா? அழிந்துபோகும் இவற்றைக்கேட்பதால் ஆண்டவர் உள்ளம் மகிழுமா? உங்கள் வேண்டுதல் ஆண்டவருக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும். தேவசித்தத்தை நாடுங்கள். உங்கள் நியாயமான கோரிக்கை களை ஆண்டவர் நிச்சயம் நிறைவேற்றுவார்.

உண்மையோடு
உழைப்பும்
சேரும்போது
உயர்வு உன்னைத்
தேடி வரும்.

யோபுவைத் தேடிவந்த ஆசீர்வாதம்

பக்தன் யோபு பல விதங்களில் சோதிக்கப்பட்டும் பாதிக்கப்பட்டும் ஆண்டவரை தூஷிக்கவில்லை. நான் சோதிக்கப்பட்டபின் பொன்னாக விளங்கு வேன் என்ற யோபுவின் நம்பிக்கை நமக்கு உண்டா? யோபுவின் விசுவாசத்தை கனம்பண்ணிய கர்த்தர் அவன் இழந்த யாவற்றையும் இரண்டத்தனையாய் கொடுத்து ஆசீர்வதித்தார்.

கடுங்காற்றுக்கு வளைந்து நிற்கும் செடி நிமிர்ந்து மரமாகும். சாத்தானுக்கு எதிர்த்து நிற்கும்போது ஆண்டவரின் பிள்ளையாக ஆசீர்வாதம் பெறலாம்.

உழைப்பினால் உன்னைத்தேடிவரும் ஆசீர்வாதம்

வெற்றிக்கான சந்தர்ப்பங்கள் நம்மைத் தேடி வரும் என்று நாம் காத்திருக்கக் கூடாது. சந்தர்ப்பங்களை ஆண்டவர் உருவாக்கித்தரும்போது அதைப்பற்றிப் பிடித்துக்கொண்டு கடினமாக உழைக்க வேண்டும். அப்போது வெற்றி, செல்வம், சந்தோஷம், செழிப்பு யாவும் உன்னைத்தேடி வரும். உண்மையோடு உழைப்பும் சேரும்போது உயர்வு உன்னைத் தேடி வரும்.

தேன் தேனீயைத் தேடி வருவதில்லை. தேனீக்கள் தான் தேன் இருக்கும் இடத்தைத் தேடியலைகின்றன. கடின உழைப்பால் தேனை சேகரிக்கின்றன. எறும்பின் சுறுசுறுப்பையும், உழைப்பையும் உற்று கவனியுங்கள். அவைகளிட மிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

பாவ விடுதலையினால் உன்னைத்தேடிவரும் ஆசீர்வாதம்

தன் தலையில் விறகுக்கட்டு ஒன்றை சுமந்து கொண்டு சாலையில் ஒரு

கிராமத்து மனிதன் சிரமத்துடன் நடந்து கொண்டிருந்தான். அவ்வழியே ஜீப்பில் வந்த ஒருவர் அவன் மீது இரக்கப்பட்டு தன் ஜீப்பின் பின்பக்கம் ஏறி அமரச் சொன்னார். கிராமத்தானும் மகிழ்ச்சியுடன் ஏறி அமர்ந்தான்.

சிறிதுநேரம் கழித்து ஜீப்பை ஓட்டிக்கொண்டிருந்த மனிதர் திரும்பிப் பார்த்தார். அந்த கிராமந் தான் விறகுக்கட்டைக் கீழே வைக்காமல், தன் தலையிலேயே வைத்திருப்பதைப் பார்த்து திகைத்துப் போனார்.

நாமும் சில நேரங்களில் இப்படித்தான் நடந்து கொள்கிறோம். "வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று ஆண்டவர் உன்னைத்தேடி வரும்போது நீயும் உன் பாவப் பாரங்களை கீழே போடாமல் சுமந்து கொண்டே இருக்கிறாய் பாவப்பழக்கங்களை விட்டுவிட்டு ஆண்டவரைச் சார்ந்து கொள்ளும்போது ஆண்டவரின் ஆசீர்வாதம் உன்னைத்தேடி வரும்.

இந்தியாவைத் தேடிவந்த மேனாட்டு மிஷனெரிகள் தன்னலமற்ற தியாக உழைப்பால் கிறிஸ்தவம் தழைத்தது. ஆண்டவரின் அன்பை நாம் ருசிக்க முடிந்தது. அவரை இன்னும் அறியாமலிருக்கும் அநேகம் மக்களைத் தேடிச் சென்று சுவிசேஷம் அறிவிப்பது நமது தலையாய கடமை.

> இந்தியாவைத் தேடிவந்த மேனாட்டு மிஷனெரிகள் தன்னலமற்ற தியாக உழைப்பால் கிறிஸ்தவம் தழைத்தது.

உன்னைத்தேடி பசியோடு வருபவர்களுக்கு உணவளிப்பதும், ஆடைகேட்டு வருபவர்களுக்கு ஆடை வாங்கிக் கொடுப்பதும், வியாதியுள்ளோரைத் தேடிப்போய் விசாரிப்பதும் ஆண்டவருக்குச் செய்வதற்கு சமம் (மத். 25:35,36).

ஆசீர்வாதமான புத்தாண்டு

ஒவ்வொரு புத்தாண்டின் ஆரம்பத்திலும் சில புதிய தீர்மானங்கள் எடுப்பது அனைவரின் வழக்கம். வருடத்தின் முதல்நாள் மட்டுமல்ல, வருடத்தின் ஒவ்வொரு நாள் காலையிலும் இன்று நான் புதிதாய்ப் பிறந்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டு உற்சாகமாய் செயல்படுங்கள். சிறப்பான வாழ்வை எனக்காக ஆண்டவர் வைத்திருக்கிறார் என நம்புங்கள். தேவன் நம்மோடிருக்கிறார் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள். உங்கள் செயல்களுக்கான பலனை கர்த்தர் அளிப்பார்.

சாதனையாளராக வேண்டுமா?

இப்புதிய ஆண்டில் ஏதாவது சாதனைகள் செய்ய வேண்டும் என்று தீர்மானித்திருக் கிறீர்களா? அதற்கான ஆசையை வளர்த்துக் கொள்ளுங்கள். ஆழமான அர்ப்பணிப்போடு, உற்சாகத்தோடு அதற்கென்று உழைத்து, உங்கள் செய்கைகளுக்குத் தக்க பலனை ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். தடைகளை கண்டு தயங்கி நிற்காமல் தாண்டிச் செல்ல மான் கால்கள் எனக்குண்டு என்ற நம்பிக்கை கொள்ளுங்கள். கானல் நீர் என்னும் அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பு என்னும் கடலில் நீந்தி மகிழுங்கள்.

உறுதியான உள்ளம்

மனச்சோர்பு உடலை உருக்கும் மோசமான நோய். அது சிலந்திப்பூச்சிக்கு ஒப்பானது. சிலந்திப்பூச்சி வனத்திலும் கூடு கட்டும். வாஷிங்டன் மாளிகையிலும் கூடுகட்டும். ஏழை பணக்காரர், படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாடின்றி எல்லோர் மனதிலும் மனச்சோர்வு என்னும் சிலந்திப்பூச்சி கூடுகட்டும். வாழ்வின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான மனச்சோர்வை விரட்டி விட்டு உறுதியான உள்ளத்தோடு வேகமாக முன்னேறிச் செல்லுங்கள்.

தானியேல், யோசேப்பு போன்றவர்கள் வாழ்வில் எந்த நஷ்டங்கள் வந்தபோதும் சோர்ந்து போகவில்லை. ஆண்டவரைச் சார்ந்து கொண்டு

ஜெபித்து மனச்சோர்வை அண்டவிடாமல் மனரம்மியமாக வாழ்ந்தார்கள்.

இந்த மனச்சோர்வினால் நிமிடத்துக்குப் பத்துபேர் உலகில் தற்கொலை செய்து கொள்வதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் வெற்றிக்கான வழிகளைக் கண்டு பிடியுங்கள். இழந்ததைப் பார்க்காமல் இருப்பதைப் பாருங்கள். கவலையைக் கர்த்தர்மேல் வைத்துவிட்டு இளைப்பாறுதல் தரும் தேவனை நோக்கிப்பாருங்கள். சோர்வெல்லாம் பறந்துபோகும்.

வாழ்க்கை என்னும் அழகான பூமாலையை ஆண்டவர் உங்களுக்கு அளித்திருக்கிறார். அதை மனச்சோர்வு எனும் குரங்கு கையில் கொடுத்து விடாதீர்கள்.

> **வாழ்க்கை என்னும் அழகான பூமாலையை ஆண்டவர் உங்களுக்கு அளித்திருக்கிறார். அதைமனச்சோர்வு எனும் குரங்கு கையில் கொடுத்து விடாதீர்கள்.**

ஒரே விதமான சூழ் நிலையை சந்தித்த இரு சகோதரிகளை வேதத்தில் நாம் காணலாம். இருவருக்கும் முடிவெடுக்கும் சுதந்திரம் கொடுக்கப் பட்டது. கர்த்தரை உறுதியாகப் பற்றிக் கொண்ட ரூத் எடுத்த தீர்மானத்தால் அவள் வாழ்வு வளமானது. ஓர்பாளின் வாழ்வில் விசேஷமாக ஒன்றுமில்லை. சரித்திரத்திலும் அவள் இடம்பெற இயலவில்லை. இந்த ஆண்டு நீங்கள் எடுக்கும் தீர்மானங்கள் ஆண்டவரின் சித்தத்திற்கு உட்பட்டவையாக இருக்கட்டும். அப்போது வாழ்வில் உயர்வை காண்பீர்கள்.

நல்ல நட்பு அவசியம்

"உன் நண்பனைச் சொல், உன் குணத்தைச் சொல்கிறேன் என்பது ஓர் அறிஞரின் வாக்கு. நண்பர்கள் இல்லாமல் வாலிபர் உலகம் இல்லை. ஆனால் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது தான் முக்கியம் 'மூடனுக்குத் தோழன் நாசமாவான்' என சாலமோன்ஞானி எச்சரிக்கிறார். (நீதிமொழிகள் 13:20) ஆடம்பரமான ஆடையணிந்து செலவு செய்யும் நண்பர்களைவிட எளிமையாக, சுத்தமாக ஆடையணிந்து, அன்போடு பேசி, ஆண்டவரைச் சார்ந்து வாழும் இளைஞர்களை இந்த ஆண்டில் நண்பர்களாக தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

இயேசு எப்படிப்பட்டவர்களை நண்பர்காளகக் கொண்டிருந்தார்? செல்வந்தர்களையா? சீமான்களையா? இல்லை. அவர் மீனவர்களையும், சாமான்யர்களையும் சிநேகித்தார். அவர் உங்களையும் தன் நண்பர்களாக பாவிக்க விரும்புகிறார். அவரை உங்கள் உயிர் நண்பராக வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்வு வசந்தமாகும்.

நீங்கள் அழும்போது சிரிப்பவர்களும், நீங்கள் சிரிக்கும் போது சிடுசிடுப்பவர்களும் உண்மையான நண்பர்களாக இருக்க முடியாது. உங்கள் பணத்திற்காக, பதவிக்காக உங்களோடு இருப்பவர்களைவிட, உங்கள்

துன்பங்களில் பங்கெடுப்பவர்களே உயிர் நண்பர்கள். சிநேகிதன் எந்தக் காலத்திலும் சிநேகிப்பான். (நீதிமொழிகள் 17:17)

பாளையப் பருவத்தில் போதைப் பழக்கம், குடி, புகையிலை போன்றவை நண்பர்கள் மத்தியில் 'ஹீரோ'வாக காட்டலாம். இவை வாழ்வை சீரழித்துவிடும் உயிர்கொல்லிகள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இறைவனுக்கு அஞ்சி நடக்கும் சிறுகூட்டத்தை நண்பர்களாகக் கொண்டால் இறைவனின் ஆசீர்வாதம் என்றும் உங்களோடு தங்கும்.

புத்தாண்டின் மகிழ்ச்சிக்கான டிப்ஸ்

- கடந்த ஆண்டின் தோல்விகள், வருத்தங்கள், நோய்கள், இழப்புகள், எல்லாவற்றையும் முதுகுக்குப்பின்னால் எறிந்துவிட்டு, முன்னால் இருக்கும் ஆண்டவரின் ஆசீர்வாதங்களை நோக்கி நடப்போம்.
- இவ்வாண்டின் கனவுகள், தீர்மானங்களை ஆண்டவரிடம் ஒப்படைத்து அவர் சித்தம் அறிந்து செயல்படுங்கள்.
- கடந்தகால வெற்றிகளில் பெருமை பாராட்டாமல், இவ்வாண்டின் உயர்வுக்கு கவனமாக படியுங்கள்.
- வேதத்தை தினம் தியானிப்பதோடு நல்ல நூல்களை படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள்.
- பெற்றோர் கொடுக்கும் 'பாக்கெட் மணி'யை சிக்கனமாக செலவு செய்து, மீதமாகும் பணத்திலிருந்து ஏழை மாணவர்களுக்கு உங்களாலான உதவிகளைச் செய்யுங்கள். கர்த்தர் அகமகிழ்ந்து உங்களை ஆசீர்வதிப்பது நிச்சயம்.
- உங்கள் தாலந்துகளையும், திறமைகளையும் ஆண்டவரது மகிமைக்கென்று பயன்படுத்துங்கள்.
- பொய், களவு, தீவிரவாதம் போன்ற வார்த்தைகளை உங்கள் வாழ்க்கை அகராதியிலிருந்து எடுத்துவிடுங்கள்.
- தாய், தந்தை, பெரியவர்களை கனம்பண்ணுங்கள். ஆலயத்துக்கு ஒழுங்காகச் செல்லுங்கள்.
- குடும்ப தினதியான நூலின் உதவியோடு முழு வேதத்தையும் இவ்வருடத்தில் படியுங்கள்.
- இவ்வாண்டு முழுவதும் உங்கள் முகத்தில் புன்னகை தவழட்டும். நேர்மையான வழிகளில் அன்பின் செயல்களோடு இப்புதிய ஆண்டில் கடந்து செல்லுங்கள்.

புதிய ஆண்டு உங்களுக்கு மகிழ்ச்சியான, ஆசீர்வாதமான ஆண்டாக அமையட்டும்.

இரவும் பகலும் வேதத்தை தியானித்து, ஜெபத்தின் மூலம் எப்போதும் ஆண்டவரின் தொடர்பு எல்லைக்குள் இருங்கள்.

2017
2016
2015

புதிய பயணம்

ஆண்டு மட்டும் புதிதாகப் பிறந்தால் போதுமா? நாமும் நம் பழைய பாவங்கள், வேண்டாத சுபாவங்கள் என்னும் சிறகுகளை உதிர்த்துவிட்டு, புதிதாய் சிறகு முளைத்த பறவைகளாய் மாறி வாழ்க்கைப் பயணம் என்னும் வானில் சிறகடித்துப் பறக்க வேண்டும்.

எத்திசையில் பறப்பது? என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கிறீர்களா? வழிநடத்தும் தேவன் ஒருவர் நமக்குண்டு. பாதைக்கு வெளிச்சமாகவும், கால்களுக்குத் தீபமாகவும் தேவன் இருப்பதால் அவர் காட்டும் பாதையில் விசுவாசத்தோடு புதிய பயணத்தைத் துவக்குங்கள், பயணத்தின் இறுதிவரை இறைவன் உங்களுக்குப் பாதுகாப்பாக கூடவே வருவார்.

வெற்றிப் பயணம்

ஹார்லன்ட் டேவிட் சேன்டர்ஸ் என்பவர் அமெரிக்காவில் கெண்டகி மாநிலத்தில் பிறந்தவர். இவர், தந்தையை சிறுவயதில் இழந்து இரண்டாவது தந்தையால் துன்புறுத்தப்பட்டு, மாமாவால் வளர்க்கப்பட்டார். மாமா வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தபோதிலும் அவரால் படிப்பைத் தொடர முடியவில்லை. வாழ்வதற்காக அம்மாவிடமிருந்து கற்றுக் கொண்ட சமையலை தொழிலாக மேற்கொண்டார். உணவகம் ஆரம்பித்து தோல்வி கண்டாலும் அவரது பொரித்தகோழி உணவு எல்லோரையும் கவர்ந்தது.

மனம் தளராமல் தன் நண்பனது உணவகத்தில் கோழியைப் பொரித்து விற்பனை செய்தார். உணவகத்தின் விற்பனை அதிகரித்தது. இந்த பொரித்த கோழியே தற்போது (K.F.C - Kentucky fried chicken) என்ற அவர் பிறந்த மாநிலத்தின் பெயரில் 125 நாடுகளில் 3900 கடைகளில் சுமார் 12 பில்லியன் டாலரை ஒவ்வொரு ஆண்டும் ஈட்டித் தருகிறது. தன் வாழ்க்கையின் புதிய பயணத்தை தனது 65 வயதில் தொடங்கிய ஹார்லன்ட் டேவிட் சேன்டர்ஸைப் போல பொறுமையோடு, புதிய முயற்சிகளில் ஈடுபடுங்கள். 65 வயதில் அவர் சாதித்ததை 25 வயது இளைஞர்களாகிய உங்களால் சாதிக்க முடியாதா? ஏற்ற காலத்தில் உயர்த்தும்படி ஆண்டவரின் பலத்த கரத்துக்குள் அடங்கியிருங்கள். உங்கள் வாழ்க்கைப் பயணம் வெற்றிப் பயணமாக மாறும்.

புதுப்பித்துக் கொள்ளுங்கள்

புதிய விஷயங்களை ரசிக்காமல், கவனிக்காமல், பரீட்சித்துப் பாராமல்

இருந்தால் வாழ்க்கை சுவாராசியமாக இருக்காது. இந்த உலகம் எப்பொழுதும் ஒரே மாதிரிதான் சுழன்று கொண்டிருக்கும். அதை வெவ்வேறு நிலையிலிருந்து கவனித்து ரசிப்பது புதிய உற்சாகம் தரும்.

பள்ளிக்கோ, பணிக்கோ, கல்லூரிக்கோ செல்லும் போது வழக்கமான பாதையில் செல்வதைத் தவிர்த்து வேறொரு பாதையில் பயணித்துப்பாருங்கள். புதிய கடைகள், புது மனிதர்கள், புத்தம் புதிய பூக்கள் நிறைந்த கடைகள், பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் என பார்ப்பவை எல்லாமே புதிய உற்சாகத்தைத் தரும். மாற்றங்கள் வாழ்வில் உற்சாகம் தரும். உங்களை சுற்றி நடக்கும் விஷயங்களை ரசிக்க ஆரம்பியுங்கள். ஓர் இரயிலோ, பேருந்தோ, இருசக்கர வாகனமோ குறிப்பிட்ட தூரத்தை ஓடி முடித்தபின் அதன் பாகங்கள் பழுதுபார்க்கப்பட்டு, சீராக்கப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு, புதிதாக்கப்பட்டு மீண்டும் ஓட தயார் செய்யப்படும். அது போலவே மனித வாழ்க்கையிலும் ஒவ்வொரு ஆண்டு பயணத்திற்கும் பின்னரும் பழைய பாவங்கள், ஏமாற்றங்கள், கசப்புகள் ஆகியவற்றை விட்டொழித்து புதிதாக்கப் பட்டவர்களாய புதிய பயணத்தைத் தொடர வேண்டும். கடந்த காலம் கசப்பாக இருந்தாலும் புத்தாண்டை ஆண்டவர் மதுரமாக்கித் தருவார். ஜெயம் கொடுக்கும் தேவனை நோக்கிப்பார்த்து வெற்றிப் பயணத்தைத் தொடருங்கள்.

பெற்றோரைக் கனப்படுத்துங்கள். ஆண்டவர் இவ்வுலகில் பெற்றோரை நமக்கு சிறந்த வழிகாட்டியாய் தந்திருக்கிறார்.

சிறப்பான வழிகாட்டி தேவை

நாம் சில தெரியாத இடங்களுக்குச் சுற்றுலாவாக செல்லும் போது, அந்த இடத்தின் சிறப்புகளை நமக்கு எடுத்துரைக்க வழிகாட்டி ஒருவர் அவசியம் தேவை. வாழ்க்கைப் பயணத்திற்கும் நல்லதொரு வழிகாட்டி நமக்குத் தேவை. நம்மை பாராட்டவும், தட்டிக் கொடுக்கவும், தவறுகளைச் சுட்டிக்காட்டவும் தயாராக இருப்பவர்களோடு எப்போதும் தொடர்பில் இருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் வாழ்க்கைப் பயணத்திற்கான வழிகாட்டியாய் தேர்ந் தெடுங்கள். நன்மையைக் கண்டடைவீர்கள். பெற்றோரைக் கனப்படுத்துங்கள். ஆண்டவர் இவ்வுலகில் பெற்றோரை நமக்கு சிறந்த வழிகாட்டியாய் தந்திருக்கிறார்.

இலக்குகள் இல்லா பயணமா?

பயணங்கள் பலவாயினும் ஒவ்வொன்றிற்கும் இலக்கு என்பதும், செல்லும் பாதை என்பதும் நிச்சயம் இருக்கும். இலக்குகள் அற்ற, வரையறுக்கப்படாத பயணங்கள் வெற்றி பெறுவதில்லை. இலக்குகளும், பாதைகளும் சரியாக அமைந்து பயணித்தால் அவை வரலாற்றை மாற்றும் பயணங்களாக அமையும் என்பதை வாஸ்கோடகாமா, கொலம்பஸ் ஆகியோர் நிரூபித்துள்ளனர்.

இலக்குகள் இல்லா வாழ்க்கை சுக்கான் இல்லாத கப்பல் அலைக்கழிக்கப்பட்டு பாறையில் மோதுவது போல துயர் நிறைந்ததாயிருக்கும். கடந்த ஆண்டில் நடந்த துன்பங்கள், தோல்விகள் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் பயன் ஒன்றுமில்லை. எதிர்காலம் உங்கள் கையில்தான் உள்ளது. பழைய சிந்தனைகளை மாற்றி புதிய இலக்குகளை நிர்ணயித்து புதிதாக பயணத்தை தொடங்குகள் சென்ற ஆண்டு செய்ததைவிட இந்த ஆண்டு இன்னும் சிறப்பாகச் செய்வேன் என்று தீர்மானம் செய்யுங்கள். உலகம் மாற்றப்பட வேண்டுமானால் அது என்னிலிருந்துதான் துவங்கப்பட வேண்டும் என்று உணருங்கள். மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் ஒவ்வொரு நாளையும் வரவேற்று புத்தாண்டுப் பயணத்தை மேற்கொள்ளுங்கள்.

நேரத்தை செலவழியுங்கள்

மர்லின் மன்றோ என்ற புகழ் வாய்ந்த நடிகை ஒருவர் ஏராளமாகப் பணம் சம்பாதித்தார். பணம், புகழ், அழகு, அந்தஸ்து இருந்தாலும் மன நிம்மதியில்லாமல் தவித்தார் இவ்வுலகில் தன்னை உண்மையாய் நேசிக்க யாருமில்லை என ஏங்கினார். ஒருநாள் உலகப்புகழ்பெற்ற பிரசங்கியார் பில்லி கிரஹாம், மர்லின் மன்றோவின் ஆத்தும ரட்சிப்பைக் குறித்து அவரிடம் பேச விரும்பினார். ஆனால் மர்லின் மன்றோ "நான் படப்பிடிப்பில் பிஸியாக இருக்கிறேன். இப்போது பேச நேரமில்லை. பத்து நாட்கள் கழித்து தொடர்பு கொள்ளுங்கள்" என்று கூறினார். பத்து நாட்கள் கழிந்த பின் பேசுவதற்கு அவர் உயிரோடு இல்லை. மனநிம்மதியில்லாமல் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

தம்பி தங்கைகளே! நீங்கள் எவ்வளவு தான் பிஸியாக இருந்தாலும் ஆண்டவருக்காய் நேரத்தை ஒதுக்குங்கள். வேதம் வாசிக்க, ஜெபிக்க, ஆலயத்துக்குச் செல்ல என நேரத்தை செலவழிக்கும் போது ஆண்டவரின் ஆசீர்வாதம் உங்களை சூழ்ந்துகொள்ளும். இதற்கெல்லாம் நேரமில்லை என்று சொல்லி அலைபேசியில் அரட்டை அடித்து, கணிப்பொறியில் காலத்தைப் கழிப்பவர்களாக இருந்தால் ஆண்டவரும் உங்களுக்கு உதவ நேரமில்லை என சொல்லிவிடுவார். இப்புதிய ஆண்டில் ஆண்டவருக்காய் நேரத்தைச் செலவழியுங் கள். ஆண்டவரோடு எப்போதும் தொடர்பில் இருங்கள். இந்த ஆண்டு முழுவதும் ஆண்டவர் உங்களோடிருந்து உங்கள் காரியங்களை வாய்க்கப் பண்ணுவார்.

பயணத்தில் பாதை தவறினால் கடல் கொந்தளிப்பை சந்தித்த யோனாவைப் போல துன்பங்களை சந்திக்க நேரிடும். ஆண்டவரின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி அவர் காட்டும் பாதையில் பயணிப்போமானால் இந்த புத்தாண்டு பயணம் நேர்த்தியானதாக சிறப்பானதாக அமையும்.

"கழிந்து போன நாட்களுக்காக வருத்தப்படுவதைக் காட்டிலும் கையில் கிடைத்திருக்கும் காலத்தில் இன்னும் விரிவாகச் சிறகுகள் விரித்தால் கண்ணுக்குத் தெரியாத வானத்தின் தொலை தூரங்கள் புலப்படும். - வெ. இறையன்பு ஐ.ஏ.எஸ்

இழந்துபோகாதே...

ஒரு இளைஞன் தன் காதலிக்கு பிறந்த நாள் பரிசாக அவளுக்கு எத்தனை வயதாகிறதோ அத்தனை ரோஜா மலர்களை அனுப்பி வைப்பதாக அவளிடம் கூறினான். பூக்கடைக்காரனிடம் சென்று அவள் முகவரியைக் கொடுத்து "இந்த முகவரிக்கு இருபது ரோஜாப் பூக்களை அனுப்பி வையுங்கள்" என்று கூறி அதற்கான பணத்தையும் கொடுத்து சென்றான்.

அந்தப் பூக்கடைக்காரருக்குத் தாராள மனம். அந்த வாடிக்கையாளரைத் தக்க வைக்கும் நோக்கத்துடன் தன் கடைப்பையனிடம் கூடுதலாகப் பத்து பூக்களைப் போட்டு அனுப்பி வைக்கக் கூறினான். கடைப்பையனும் அவ்வாறே செய்ய வந்தது ஆபத்து. கோபத்தினிமித்தம் அந்தப் பெண் அந்த இளைஞனின் காதலையே துறந்துவிட்டாள். இது வேடிக்கையான கதையாகத் தோன்றினாலும், இக்காலத்தில் காதல் என்பது நிலையற்றதாகத்தான் இருக்கிறது. இத்தகைய நிலையற்ற காதலுக்காக வாழ்க்கையை இழந்தவர்கள் ஏராளம்.

கல்வியை இழந்து போகலாமா?

இன்றைய உலகில் காதல் என்பது பொழுதுபோக்குக்குரிய ஒன்றாகவே கருதப்படுகிறது. பூங்கா, கடற்கரை, பேருந்து நிறுத்தம் போன்ற இடங்களில் காணப்பட்ட கல்லூரி மாணவர்களின் காதல் இப்போது பள்ளிக்கூட மாணவ, மாணவியரையும் படாதபாடு படுத்துகிறது. சமீபத்தில் நாளிதழ் ஒன்றில் வாசித்த செய்தியால் மனம் பதறுகிறது. பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவி அரையாண்டுத் தேர்வு எழுதி முடித்துவிட்டு, காதலனுடன் ஓடிப்போய்விடத் தீர்மானித்து பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தாள். தற்செயலாக அவர்களைப் பார்த்த அவளது அண்ணனால் தடுத்து நிறுத்தப்பட்டாள். தங்கள் உழைப்பால் இரத்த வேர்வை சிந்தி பெற்றோர் பிள்ளைகளை கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறார்கள். எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்க கல்வி எனும் விளக்கினை ஏற்றி வைக்க படாதபாடுபடும் பெற்றோரை அவமானத்தில் ஆழ்த்தி, சகோதர சகோதரரை மறந்து, இப்படி ஓடிப் போய் சீரழிந்து வாழ்க்கைக்கு ஆதாரமான கல்வியை இழக்கலாமா? சிந்தியுங்கள். கல்லூரிக்கும், பள்ளிக்கும் மட்டம் போட்டு

விட்டு சினிமா, பூங்கா என ஊர் சுற்றித்திரிந்து கல்வியை இழந்து, காதலிலும் தோல்வி கண்டு தாடியுடன் சோகமாகத் திரியும் வாலிபரே, கண்ணீர் கடலில் நீந்தித் திளைக்கும் வாலிப தங்கையே! கவனமாயிருங்கள்.

உறவுமுறைகளை இழக்கலாமா?

அம்னோனுக்கு யோனதாப் என்ற நண்பன் இருந்தான். அவன் தந்திரமுள்ளவன். (2 சாமுவேல் 13:23) அம்னோன் தன் சகோதரியாகிய தாமார் மீது ஆசை வைத்தான். (2 சாமுவேல் 13:1) அதனை யோனதாப் கண்டிக்காமல், தவறு எனச் சொல்லி திருத்தாமல் அவளைக் கெடுக்கத் திட்டம் தீட்டிக் கொடுத்தான். தற்காலத்திலும் இப்படித்தான் காதல் விவகாரங்களில் மோசமான நண்பர்களின் ஆலோசனைகளால் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்வோர் இருக்கிறார்கள்.

முதிர் வயதுள்ள பெண்களைத் தாயைப் போலவும், வாலிபப் பெண்களை கற்புடன் சகோதரிகளைப் போலவும் பாவிக்க வேண்டும் என (1 தீமோ. 5:2) வேதம் கூறுகிறது. ஆனால் தற்காலத்தில் கேள்விப்படும் செய்திகள் என்ன? சித்தி மகளையும், அண்ணன் முறையுள்ளவர்களையும் விரும்புவதும், அவர்களோடு ஓடிப்போய் திருமணம் செய்து கொள்வதும் குடும்பத்தில் குழப்பத்தை அல்லவா ஏற்படுத்துகின்றன? அவமானத்தால் கொலைகளும், தற்கொலைகளும் நிகழுகின்றன.

> **வாலிபரே, கன்னியரே முறையற்ற காதலால் உறவுமுறைகளை இழந்து போகாதீர்கள்.**

மனிதர்கள் தேவ சாயலால் படைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு கட்டுக்கோப்பான உறவுமுறைகளோடு வாழ்ந்து குடும்பத்தில் ஒழுங்கை கடைபிடிப்பதையே தேவன் விரும்புகிறார். வாலிபரே, கன்னியரே முறையற்ற காதலால் உறவுமுறைகளை இழந்து போகாதீர்கள்.

பெற்றோரை இழக்கலாமா?

வாலிபர்கள் இன்று அதிகம் கேட்கும் கேள்வி காதலிக்கலாமா? கூடாதா? என்பதுதான். இன்றைய காலக்கட்டத்தில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள், சேர்ந்து பணிபுரிகிறார்கள். அதனால் சிலசமயங்களில் காதலிப்பதைத் தவிர்க்க முடிவதில்லை. ஆனால் சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்து, நன்மை தீமைகளை சிந்தித்துப் பார்த்து, பெற்றோரின் ஆலோசனையைக் கேட்டு முடிவெடுங்கள்.

காதல் என்னும் சிலந்தி வலைக்குள் சிக்கிக் கொள்ளும் வாலிபர்கள், நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, பெற்றோரை மறந்து வீட்டை விட்டு ஓடிவிடுகிறார்கள். மாறாக உங்கள் விருப்பம் நியாயமானதெனில் பெற்றோரிடம்

மனம்விட்டு பேசுங்கள். அவர்கள் மனம் மாற காத்திருங்கள். பெற்றோரின் விருப்பமில்லாமல் ஒருபோதும் திருமணம் செய்து கொள்ளாதீர்கள். பெற்று, வளர்த்து, படிக்க வைக்கின்ற பெற்றோரைஅவமானத்தில் ஆழ்த்தி, ஓடிப்போய் திருமணம் செய்து அவர்களது சாபத்திற்கு ஆளாகாதீர்கள். சிலசமயம் அவமானத்தால் அவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். பெற்றோரை இழந்து விடாதீர்கள்.

நிம்மதியை இழந்து போகலாமா?

இக்காலத்தில் இருபாலரும் சேர்ந்து பேசுவதற்கும், பழகுவதற்கும் பார்த்துக் கொள்வதற்கும் நிறைய சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. அவ்வாறு பேசுவதை, பழகுவதை காதல் என தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. தவறான புரிதலால், அது ஒருதலைக் காதலாக மாறி, தோல்வி மனப்பான்மை ஏற்பட்டு நிம்மதியை இழக்க நேரிடுகிறது. சிலர் ஒருதலையாக விரும்பும் பெண்ணை தன்னைக் காதலிக்குமாறு கட்டாயப்படுத்துவதும், காதலிக்க மறுக்கும் பெண்களின் முகத்தில் ஆசிட் வீசி சிதைப்பதும், அப்பாவிப் பெண்களை வெட்டிக் கொலை செய்வதும் எவ்வளவு கொடூரமான செயல்கள்? அதற்குப் பிறகு அந்த பெண்களின் பெற்றோரும், உற்றார் உறவினரும் படும் துன்பம் அளப்பெரியது. சரி அந்த பாதக செயல்கள் செய்யும் வாலிபர்களின் வாழ்க்கையை சிந்தித்துப்பாருங்கள். நிம்மதியாக வாழ முடியுமா? சிறையில் தனிமையில் வாழ்நாட்களைக் கழிக்க நேரிடும் அவலநிலை தேவையா? **அர்த்தமில்லாத ஆசைக்காக நிம்மதியை இழந்து தவிக்க வேண்டாமே?**

உன்னை நீ இழக்கலாமா?

கனாக்களும், வினாக்களும் நிறைந்த வாலிபப் பருவம் மனித வாழ்க்கையில் மிக முக்கியமான காலகட்டம். தவறுகளுக்கும், தடுமாற்றங்களுக்கும் இடையே தத்தித்தாவும் வயது அது. பட்டாம்பூச்சிகளைப்போல பறக்க வேண்டிய பருவத்தைப் பட்டுப்போன பருவமாக மாற்றிவிடுவது காதல்.

உண்மை சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன். பெற்றோரால் செல்லமாக, ஆனால் நல்ல முறையில் வளர்க்கப்பட்ட ஒரு பெண் நன்றாகப் படித்து முடித்ததும் சாப்ட்வேர் கம்பெனியில் பணியில் அமர்ந்தாள். அதுவரை அவளுக்கு ஆண்களிடம் பேச, பழக வாய்ப்பு இல்லை. பணிபுரியம் இடத்தில் அத்தனை பேரும் இளைஞர்கள். ஆண்களும், பெண்களும் சகஜமாகப் பேசிப்பழகினர். அந்தப் பெண்ணும் மெல்ல மெல்ல மற்ற இளைஞர்களிடம் பேசிப் பழக ஆரம்பித்தாள்.

இளைஞனும், அவளது மேலதிகாரியுமான ஒருவன் அவள்மீது அதிக அக்கறை காட்டினான். இருவரிடையே நெருக்கம் அதிகரித்து காதல் என்ற பெயரில் சிறகடித்துப் பறந்தார்கள். விளைவு? திருமணத்திற்கு முன் அவள் கர்ப்பம் தரித்தாள். தன்னைத் திருமணம் செய்துகொள்ளுமாறு அவனிடம்

கேட்டபோது, தனக்கு பெரிய 'ப்ராஜக்ட்' ஒன்று முடிக்க வேண்டியதிருப்பதாலும், பிரமோஷனை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் கூறி, கர்ப்பத்தைக் கலைத்துவிடுமாறும், ஒரு வருடம் கழித்து திருமணம் செய்து கொள்ளலாம் என்றும் சொன்னான். அவன் பேச்சை நம்பி கர்ப்பத்தை கலைத்தாள்.

அதன்பின் அவன் அவளைத் தவிர்க்க ஆரம்பித்தான். அவளோடு பேசுவதில்லை. அவளைப் பற்றி மற்றவரிடம் அவதூறாக பேச ஆரம்பித்தான். அந்தப் பெண் துக்கத்தில் அமிழ்ந்து, எதிர்காலத்தைத் தொலைத்துவிட்டு நிற்க, அவனோ ஒன்றுமே நடவாததுபோல மற்ற பெண்களோடு சிரித்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருக்கிறான்.

மேற்கண்ட சம்பவத்தைப்போல தினந்தோறும் நாட்டில் ஏராளமான சம்பவங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இளைய தலைமுறைப் பெண்களே! ஆண்களிடம் பேசுவதில் தவறில்லை. ஆனால் எல்லை மீறி இடம் கொடுத்து கற்பை இழந்து விடாதீர்கள்.

"உன் இளமையைக் குறித்து ஒருவரும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ.... கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

தேவ அன்பை இழந்து போகலாமா?

காதல் என்பது திருமணத்தில்தான் தொடங்க வேண்டும். ஆபிரகாமும், சாராளும் திருமணத்திற்குப் பின் காதல் வாழ்க்கை வாழ்ந்தார்கள். 'இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது' என திருமணத்தைச் சொல்லலாம். காதலைச் சொல்ல முடியுமா?

விசுவாசி ஒருபோதும் அவிசுவாசியைக் காதலிக்கவோ, கல்யாணம் செய்து கொள்ளவோ கூடாது. அவிசுவாசியோடு விசுவாசிக்குப் பங்கேது? (2 கொரிந்தியர் 6:15) காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காக சில வாலிபர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வார்கள்.

ஆனால் திருமணம் முடிந்து கொஞ்ச காலம் கழிந்தபின்னர் மீண்டும் தன் வழிக்குத் திரும்புவதோடல்லாமல் தன் மனைவியையும் ஆண்டவரை மறுதலிக்க வற்புறுத்துகிறார்கள் இதனால் சண்டைகள், சச்சரவுகள், சமாதானமில்லாத வாழ்க்கை. இறுதியில் விவாகரத்தில் முடிகிறது' **அழிகின்ற காதலுக்காக அழியாத தேவ அன்பை இழந்து போகாதீர்கள்.**

நன்கு கல்வியைக் கற்று, நல்ல பணியைத் தேடிக் கொண்டு, பெற்றோர் தேர்ந்தெடுக்கும் மணமகளை, மணமகனைத் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியோடு தேவ ஆசீர்வாதம் பெற்று வாழ வாழ்த்துக்கள்.

சோதனையை தோற்கடி

மனித வாழ்வில் ஏற்படும் சோதனைகள் முன்னரே அறிந்து கொள்ளமுடியாதவை. சோதனைகள் வாழ்வில் வருவதை யாராலும் தடுக்க முடியாது. நமது தலைக்கு மேல் பறவைகள் பறப்பதை எவராலும் தடுக்க முடியுமா? ஆனால் அந்தப் பறவைகள் நம் தலையில் கூடுகட்டி முட்டையிட்டு, குஞ்சு பொரிப்பதை நம்மால் தடுக்க முடியுமே! அப்படியே சோதனைகள் நம்மை மேற்கொள்ளாதபடி பார்த்துக் கொள்வோம். சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்.

ஏவாளும் சோதனையும்

உலகின் முதல் பெண்மணியான ஏவாளுக்கு ஏற்பட்ட முதல் சோதனையால் உலகமே பாவத்திற்குள் வீழ்ந்தது. ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்படியாமல் சாத்தானின் வஞ்சக சோதனைக்கு ஆளான ஏவாளால் மனித குலமே சாபத்திற்குட்பட்டது. ஏதேன் தோட்டத்தின் செழிப்பை அனுபவிக்க இயலாமல் ஆதாமும், ஏவாளும் சோதனைக்குள்ளாகித் துரத்தப்பட்டனர். நாமும் சிலநேரங்களில் ஆண்டவரின் கட்டளைக்கு அடிபணிய மறந்து விடுகிறோம். அதனால் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை இழந்து போகிறோம். ஆண்டவரின் சித்தப்படி கல்வியையோ, வேலைவாய்ப்பையோ, மணவாழ்க்கையையோ தேர்ந்தெடுக்காமல் நமது சித்தத்திற்கு இடம் கொடுப்பதனால் வாழ்வில் ஏராளமான சோதனைகளை சந்தித்து, தோல்வியுற நேரிடுகிறது. ஆண்டவரின் சித்தத்துக்கு செவிகொடுப்போம். சோதனைகளை ஜெயிப்போம்.

ஆபிரகாமும் சோதனையும்

ஆபிரகாமுக்கு வந்த சோதனை சற்று வித்தியாசமானது. அவன் எந்த நிலையிலும் சாத்தானின் சோதனை வலையில் சிக்காமல் தன்னைக்

காத்துக் கொண்டான். சோதோமின் ராஜா தந்திரமாக "ஆத்துமாக்களை எனக்குத் தாரும், பொருட்களை நீர் எடுத்துக்கொள்ளும்" என ஆபிரகாமிடம் கூறினான். இதுவே சாத்தானின் மிகப்பெரிய தந்திரம். உலகப் பொருட்களைக் கொடுத்து ஆத்துமாக்களைப் பறிப்பதே அவனுடைய நோக்கம். ஆபிரகாம் சோதோம் ராஜாவின் ஐஸ்வரியத்தை வெறுத்தான். நாமும் அநித்தியமான உலகப் பொருட்களுக்காக நித்தியமான, ஆண்டவரின் அன்பை இழந்து போகக் கூடாது. அழிந்து போகும் பொன்னுக்காக, பொருளுக்காக, குறுக்கு வழிகளில் சம்பாதித்து, பரிதானம் வாங்கி, சாத்தானின் சோதனை கண்ணிக்குள் சிக்கித் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

யோசேப்பும் சோதனையும்

யோசேப்பு ஓர் அழகான இளைஞன். அவன் எஜமாட்டினியின் உருவில் சாத்தான் அவனுக்கு ஒரு சோதனையைக் கொண்டு வந்தான். அவளது பாலிய இச்சைக்கு இணங்காமல், சோதனைக்கு விலகியோடியதால் எகிப்தை ஆளும் அதிகாரியானான். இக்கால வாலிபர்கள் காதல் என்னும் சோதனைக்குள் வீழ்ந்து, பாலிய இச்சைக்கு ஆளாகிறார்கள் இவற்றிற்கு விலகியோட வேண்டும் என்ற வேதத்தின் எச்சரிப்பை மறந்தவர்களாய், கல்வியை இழந்து, வேலையை இழந்து, எதிர்காலத்தை இழந்து வாழ்வையே தொலைத்து விடுகிறார்கள். எந்த சோதனைக்கும் உள்ளே, வெளியே என்று இரு கதவுகள் உண்டு. சோதனை என்னும் கதவை திறந்து கொண்டு வெளியே வாருங்கள்; உள்ளே சென்று விடாதீர்கள்!

சோதனை என்னும் கதவை திறந்து கொண்டு வெளியே வாருங்கள்; உள்ளே சென்று விடாதீர்கள்!

உலகின் சோதனைகளும் ஜெயமும்

இவ்வுலகில் கண்களினால் காணும் பொருட்களினாலும், போஜனத்தின் மேலுள்ள ஆசையாலும், பதவி, பணம், பட்டம் போன்ற பெருமைகளினாலும் சாத்தான் பல சோதனைகளைக் கொண்டு வருகிறான்.

படிக்கும் மாணவர்களுக்கு சாத்தான் கொண்டு வரும் சோதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. படிக்க வேண்டிய காலத்தில் படிக்க விடாமல் டி.வி. பார்ப்பது, விளையாடுவது, சினிமா, வீடியோ கேம்ஸ் போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபடும் சோதனைகளுக்கு மாணவர்கள் ஆளாகிறார்கள்.

கம்ப்யூட்டரும், செல்போனும் விஞ்ஞான வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவற்றை நல்லமுறையில் பயன்படுத்த சாத்தான் விடுவதில்லை. மோசமான படங்களைப் பார்க்கவும், வீண் அரட்டைகளுக்கும், இன்னும் வேண்டாத காரியங்களுக்கும் இவற்றைப் பயன்படுத்துவதால் எதிர்காலமே பாழாகிறது. தேர்வு எழுதும்போது 'பிட்' அடிப்பது, காப்பி அடிப்பது போன்ற

சோதனைகளுக்கு ஆளாகி, பிடிபட்டு, அவமானத்தை வரவழைத்துக் கொள்கிறார்கள்.

தற்காலத்து வாலிபர்களை மிகவும் ஆட்டிப் படைக்கும் பாவ சோதனை பாலியல் சோதனை. தினமும் செய்தித்தாளைத் திறந்தால் பாலியல் பலாத்காரங்களால் நடைபெறும் சீரழிவுகள்பற்றிய செய்திகளே நிறைந்திருக்கின்றன. வாலிபர் முதல், வயோதிகர் வரை இந்த சோதனைக்கு ஆளாகி, சாபத்தை தேடிக் கொள்கிறார்கள். இதுதவிர மதுபானம், போதைப்பொருட்கள், சிகரெட் போன்றவற்றிற்கும் அடிமையாகி, சாத்தானை சந்தோஷப்படுத்துகின்றனர்.

வாலிப தம்பிகளே, தங்கைகளே நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலமிது. 'சோதனையை மேற்கொள்ள பெலன் தாரும்' என ஆண்டவரிடம் ஜெபித்தால் எந்த சோதனையையும் மேற்கொள்ள ஆண்டவர் பெலன் தருவார்.

நமது வாழ்வில் சோதனைகள் வரும்போது உயர உயர பறந்து ஆண்டவரிடம் தஞ்சம் புகுவது நல்லது.

சிலசமயம் பருந்துகளை பல காகங்கள் கூட்டமாக சேர்ந்து தாக்கிவிடுமாம். இப்படிப்பட்ட தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள பருந்துகள் தான் பறக்கும் உயரத்தை மாற்றிக் கொண்டு உயர உயர பறந்து உச்சிக்கே சென்றுவிடுமாம். அந்த உயரத்துக்கு மற்ற பறவைகள், காகங்கள் எதுவுமே வரமுடியாது. நமது வாழ்வில் சோதனைகள் வரும்போது உயர உயர பறந்து ஆண்டவரிடம் தஞ்சம் புகுவது நல்லது.

தானியேல், அனனியா, மிகாவேல் ஆகிய மூன்றுபேருக்கு தேவன் கொடுத்த ஞானத்தையும், அறிவையும் எனக்கும் தாரும் என்று ஜெபியுங்கள். தனக்கு நேரிட்ட சோதனையை இறை வார்த்தையைக் கொண்டு இயேசு ஜெயித்தது போல நீங்களும் வேதத்தை தியானித்து, சோதனைகளை முறியடியுங்கள்.

வாடிப்போகும் வசந்தகாலங்கள்...

வாலிபப்பருவம் இனிமையான வசந்தகாலம். ஆனால் இக்காலத்தில் சாத்தான் பல சோதனைகளைக் கொண்டு வந்து அதை இலையுதிர் காலமாக்கிவிடுகிறான். சோதனைகளை மேற்கொள்ள ஆண்டவர் பலம் தருவார் என்ற விசுவாசம் இருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் உலக இச்சைகளும், உணர்ச்சி வேகங்களும் வாலிப உள்ளங்களைப் பின்நோக்கித்தள்ளுகின்றன. போதைப் பழக்கம் என்னும் பாவ சோதனையும் அவற்றில் ஒன்று.

உன் நட்பு யாரோடு?

'உங்கள் நண்பர்கள் யாரென்று சொல்லுங்கள். நீங்கள் யாரென்று சொல்லுகிறேன்' என்றார் ஓர் அறிஞர். பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ள முடியாத இன்ப துன்பங்களை பகிர்ந்துகொள்ள நண்பர்கள் தேவைதான். ஆனால் குடிகாரன் நட்பு வேண்டாம் என சாலமோன் ஞானி கூறுகிறார். (நீதிமொழிகள் 23:20)

பெற்றோருக்கு தைரியமாக அறிமுகம் செய்யக் கூடிய நண்பர்கள் உங்களுக்கு உண்டா? என சிந்தியுங்கள். மதுபானம், சிகரெட், கஞ்சா ஆகிய போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் வாலிபர் வட்டத்துக்குள் நுழைந்து விடாதீர்கள். இவற்றை மறுப்பதால் நண்பர்கள் உங்களை பரியாசம் பண்ணக் கூடும். இன்று ஒருநாள்தானே, தேர்வில் வெற்றியைக் கொண்டாடத்தானே! என்று நண்பர்கள் சொல்லி ஒருதடவை பயன்படுத்தினால், அதுவே பழக்கமாகி அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகி விடுவீர்கள். அந்த அடிமை விலங்கை உடைத்தெறிவது அவ்வளவு எளிதல்ல.

நீங்கள் உண்டாக்கப்பட்டது கழுகைப் போல செட்டைகளை அடித்து உயரே பறக்கவேயன்றி, கோழிகளைப் போல குப்பைகளை பொறுக்குவதற்காக அல்ல,

புண்பட்ட மனதை புகைவிட்டு ஆற்றுகிறேன் என்று சொல்லிக்கொள்ளும் வாலிப தம்பிமாரே உங்கள் நுரையீரல் புண்ணாகி அதை ஆற்ற முடியாமல் உயிரையே இழக்க நேரிடு

என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கவனம்!! பெற்றோர்களே...

வசதிபடைத்த பெற்றோர் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு பாக்கெட்மணி கொடுத்து பழக்குகிறார்கள். ஆனால் அதை எந்த வகையில் பிள்ளைகள் செலவு செய்கிறார்கள்? என கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். தீய நண்பர்களோடு சேர்ந்து போதைப் பழக்கத்திற்கு ஆளாகிவரும் பிள்ளைகளைத் திருத்த முடியாமல் பெற்றோர் படும்பாடு, பெரும் பாடாக இருக்கிறது. தற்காலத்தில் ஐ.டி துறையில் பணியாற்றும் பெரும்பாலான இளைஞர்கள் அதிக ஊதியம் பெறுகிறார்கள். அதிகப்படியான நேரம் பணிபுரிவதாலும், பணிப்பளுவினாலும் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். இதனால், கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு, நண்பர்களுடன் சேர்ந்து 'பார்ட்டி' என்ற பெயரில் குடித்து மகிழ்கிறார்கள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்? என்பதைக் கவனிக்க வேண்டியது மிக அவசியம். சிறு வயதிலிருந்தே வேதவாசிப்பு, ஜெபம், ஆலய ஆராதனைக்கு ஒழுங்காகச் செல்லுதல் போன்ற காரியங்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

> சிறு வயதிலிருந்தே வேதவாசிப்பு, ஜெபம், ஆலய ஆராதனைக்கு ஒழுங்காகச் செல்லுதல் போன்ற காரியங்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

வரலாற்றில் கற்றுக்கொள்ளுங்கள்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் மிகவும் பக்தி வைராக்கிய முடையவர். ஒருநாள் தனது படைத்தளபதியோடு பயணம் செய்து கொண்டிருந்தார். அந்த படைத் தளபதி மது அருந்த முற்பட்டபோது முதலாவது லிங்கனுக்கு ஊற்றிக் கொடுத்தார். லிங்கன் தனக்கு அந்தப் பழக்கம் கிடையாது என்று கூறி மறுத்துவிட்டார். படைத்தளபதி ஒரு சிரெட்டை எடுத்து அவரிடம் கொடுக்க, தனக்கு புகைக்கும் பழக்கமும் இல்லை என்று கூறினார். மேலும் "நான் சிறுவனாக இருந்தபோது என் அம்மா நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தார்கள். அப்போது என் அம்மா என்னை அழைத்து, நீ இவ்வுலகில் நல்லவனாக வாழ வேண்டும். மது அருந்த மாட்டேன், புகைபிடிக்கமாட்டேன் என வாக்குறுதிகொடுக்குமாறு கேட்டார்கள். நானும் அப்படியே என் அம்மாவுக்கு வாக்குறுதி கொடுத்து அதை இன்றுவரை கடைபிடித்து வருகிறேன். அதை நான் மீறுவதற்கு உங்களுக்கு விருப்பமா?" என்று கேட்டார்.

அந்த தளபதி அதைக்கேட்டு, மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, "இவ்வுலகில் நீங்கள் வாழும்வரை உங்கள் தாயாரின் வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள். எனக்கும் இப்படி ஒரு தாயார் இருந்திருந்தால் நானும், உங்களைப் போல மேலானவனாக இருந்திருப்பேன்" என்று அங்கலாய்த்தார். தீய

பொருட்களை விலக்கி, பெற்றோரின் அறிவுரைகளை கேட்டு, ஆண்டவருக்குப் பயந்த ஒரு சாதாரண மனிதனான ஆபிரகாம் லிங்கனை ஆண்டவர் அமெரிக்க நாட்டுக்கே அதிபதியாக்கினார். உங்களையும் ஆண்டவர் இவ்வாறு உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோக வேண்டுமாயின் அவரது குணநலன்களை பின்பற்றுங்கள்.

மாமன்னன் அலெக்சாண்டர் தனது 20வது வயதில் அரசனாகி, ஏறக்குறைய உலகின் பல நாடுகளை தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தார். உலகையே தன் கட்டுக்குள் கொண்டுவந்த அவரால் தன் உள்ளத்தைக் கட்டுப்படுத்த இயல வில்லை. மதுபானத்திற்கு அடிமையாகி, தன் நண்பர்களோடு சேர்ந்து எப்போதும் குடித்து குடித்து தன் 30வது வயதில் மரணத்தைத் தழுவினார்.

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36).

இளைஞர்களே இவ்வுலகில் உங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கு, வாழ்ந்து சுகித்திருப்பதற்கு போதைப்பொருட்களுக்கு விலகி ஓடுங்கள்.

இளைஞர்களே! மனதையும், உடலையும் பாதித்து, குடும்பத்தையே நிலை குலைய வைக்கும் போதை வஸ்துக்களை தொடுவதில்லை என்று தீர்மானம் செய்யுங்கள்.

இளைஞர்களே! மனதையும், உடலையும் பாதித்து, குடும்பத்தையே நிலை குலைய வைக்கும் போதை வஸ்துக்களை தொடுவதில்லை என்று தீர்மானம் செய்யுங்கள்.

எப்போதாவது குடிக்கிறோம், இன்று ஒருநாள் தான் குடிக்கிறேன் என சமாதானம் சொல்லிக் கொள்ளாதீர்கள். ஒரு சொட்டு விஷமாயிருந்தால் என்ன? விஷம் விஷம்தானே? எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவை சார்ந்து கொள்ளுங்கள். இப்பாவத்திலிருந்து விடுதலைபெற பெலன்தாரும் என ஜெபியுங்கள். வேதம் வாசியுங்கள். கர்த்தர் உங்களை தம் செட்டைகளின் கீழ் வைத்துக் காத்துக்கொள்வார்.

திரும்பிப்பார்...

ஒருநாள் இரவு நான் ஒரு கனவு கண்டேன் கடற்கரை மணலில் ஆண்டவருடன் நடந்து கொண்டிருந்தேன் வாழ்வில் நடந்த சம்பவங்கள் வானில் காட்சியாய் விரிந்தன ஒவ்வொரு காட்சியின் முடிவிலும் திரும்பிப் பார்த்தேன் கடற்கரை மணலில் இருஜோடி பாதச்சுவடுகளைக் கண்டேன் வாழ்வின் கடைசி நிகழ்வைக் கண்டபின் திரும்பிப்பார்த்தேன் கடற்கரை மணலில் ஒருஜோடி பாதச்சுவடுகள் மட்டுமே ஆண்டவரிடம் இதுபற்றிக் கேட்கத் துணிந்தேன்

"ஆண்டவரே நான் உம்மைப்பின்பற்றி நடக்கத் தீர்மானித்தபோது நீர் என்னுடனே எப்போதும் வருவதாக வாக்களித்தீரே நான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தபோதோ துன்ப நேரங்களில் ஒரு ஜோடி பாதசுவடுகளை மட்டும் காண்கிறேனே? நீர் என்னைத் தனியாக விட்டு விட்டு எங்கே சென்றீர்? ஆண்டவர் என்னைப் பார்த்து அமைதியாக புன்முறுவல் பூத்தவாறு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

"எனக்கு மிகவும் விலைமதிப்பற்ற அன்பு பிள்ளையே! உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன் நேசிப்பதாலேயே உன் துன்ப நேரங்களில் நான் உன்னை என் கரங்களில் சுமந்து சென்றேன். அதனால் ஒரு ஜோடி பாத சுவடுகளை மட்டும் காண்கிறாய்" என்றார்.

எவ்வளவு உண்மை. இந்தக் கவிதையில் அடங்கியிருக்கிறது? நம் வாழ்க்கைச் சம்பவங்களைத் திரும்பிப் பார்த்தால் கடந்து வந்த பாதையில் எத்தனை மேடுபள்ளங்கள்? ஆண்டவரை நாம் சார்ந்து கொள்ளும்போது அவர் நம்மை ஏந்துவார், சுமப்பார், தப்புவிப்பார். அவரோடு நடந்தால் பாதையை செவ்வைப்படுத்துவார்.

சென்ற கல்வியாண்டைத் திரும்பிப்பாருங்கள்

இளைஞர்களே! விடுமுறை காலம் தொடங்கிவிட்டது. சென்ற கல்வியாண்டு முழுவதும் படிப்பு, படிப்பு என ஓடிக் கொண்டிருந்திருப்பீர்கள். சற்றே நின்று திரும்பிப்பாருங்கள். எத்தனை தோல்விகள்? எத்தனை மகிழ்ச்சியான தருணங்கள்? அத்தனை நேரங்களிலும் ஆண்டவர் உங்களோடு இருந்தார் என்பதை உணர்கிறீர்களா? நம்மை தோல்வியிலிருந்து வெற்றிக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் ஆண்டவரிடம் மட்டுமே உள்ளது.

நாம் திட்டமிட்டிருந்த பல காரியங்கள் கடந்த ஆண்டில் நடக்காமல் போயிருக்கலாம். வரும் கல்வி ஆண்டில் நமக்கு நியமித்திருக்கும் ஓட்டத்தில் பொறுமையோடு ஓடுவோம். (எபி.12:1) அவிசுவாசத்தோடு திரும்பிப் பாராமல், விசுவாசத்தோடு இலக்கை நோக்கி ஓடுங்கள். ஆண்டவர் காரியங்களை ஜெயமாக்குவார்.

நடந்ததை நினைத்துப் புலம்பாமல், புதிய நிகழ்காலத்தை வடிவமைத்து, எதிர்பார்ப்போடு எதிர்காலத்துக்குள் நுழையுங்கள். நேற்று செய்த எல்லாவற்றையும்விட இன்று சிறப்பாக செயல் படுவோம் என்ற மனோபாவம் வெற்றியைக் கொண்டுவரும்.

நடந்ததை நினைத்துப் புலம்பாமல், புதிய நிகழ்காலத்தை வடிவமைத்து, எதிர்பார்ப்போடு எதிர்காலத்துக்குள் நுழையுங்கள்.

வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப்பாருங்கள்

ஒரே வகையாக நடக்கிறோம், பேசுகிறோம், யோசிக்கிறோம், செயல்படுகிறோம். சிலசமயம் அவை வாழ்வில் சோர்வைக் கொண்டு வருகின்றன. முன்னேற முடியாத நிலையைக் கொண்டு வருகின்றன. பழக்கங்கள் என்பது சிலந்திக்கூடுபோல உருவாகி இரும்புக் கம்பிகள் போல மாறி விடுகின்றன என்பது ஒரு ஸ்பானிஷ் பழமொழி. இதற்குத் தீர்வுதான் என்ன? புதிய காரியங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். வேண்டாத பழக்கவழக்கங் களை புறம்பே தள்ளுங்கள். வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப்பாருங்கள். கல்லும், முள்ளுமான பாதையைக் காண்கிறீர்களா? அதை பூக்களால் நிரப்புவது உங்கள் கையில்தான் இருக்கிறது. பயணத்தை நிறுத்திவிடாதீர்கள். சரிவில் நிற்கிறீர்களா? சங்கடப்படாதீர்கள். சரிவின் முடிவில்தான் ஏற்றத்தின் ஆரம்பம் இருக்கிறது. ஜெபித்தல், வேதம் வாசித்தல் என்ற இரு கைப்பிடிகளைப் பிடித்துக்கொண்டு ஏறுங்கள். வாழ்வில் வெற்றி நிச்சயம்.

நல்ல பழக்கங்களைத் திரும்பிப் பாருங்கள்

பள்ளி, கல்லூரி படிப்பிற்கிடையே புத்தக வாசிப்பு என்னும் நல்ல பழக்கத்தை மறந்திருப்பீர்கள். டியூசன் செல்வதற்கும், தேர்வுக்கு ஆயத்தப்படுவதற்குமே நேரம் சரியாக இருந்திருக்கும். பயனுள்ள புத்தகங்களைப் படித்து பொது

அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தறிந்து ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடையுங்கள்.

சென்ற கல்வியாண்டின் நாட்களைத் திரும்பிப்பாருங்கள் எத்தனை நாட்கள் உணவையும், உறக்கத்தையும் மறந்து படித்துக் கொண்டிருந்திருப்பீர்கள்! இப்போது அம்மா செய்து தரும் நல்ல உணவை ருசித்து உண்ணுங்கள். உணவகங்களுக்குச் சென்று காசையும், உடல் நலனையும் வீணாக்கி விடாதீர்கள். நன்றாக உடற்பயிற்சி செய்யுங்கள். நல்ல நண்பர்களோடு சேர்ந்து விளையாடுங்கள். முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்களுக்குச் சென்று அவர்களோடு பேசி, உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். வீட்டுக்காரியங்களிலும் உற்சாகமாக பங்கெடுத்து பெற்றோரை சந்தோஷப்படுத்துங்கள். முடிந்தால் ஏதாவது இசைக்கருவி மீட்டக் கற்றுக் கொள்ளுங்கள்.

நானும் என் பள்ளி நாட்களைத் திரும்பி பார்க்கிறேன். அப்போதெல்லாம் பள்ளிகளில் நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். அதற்கென்றே பாடவேளைகள் உண்டு. இப்போது படிப்பைத்தவிர வேறொன்றும் முக்கியப் படுவதில்லை. போட்டி நிறைந்த கல்வி உலகில் வேறு எதற்கும் நேரமில்லை. ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தால் எழுந்து நின்று மரியாதை செலுத்தி அமரச் சொன்னபின்னரே அமருவோம். ஆசிரியரை எங்கே பார்த்தாலும் மரியாதை செலுத்த தவறுவதில்லை. எவ்வளவு வயதானாலும் கற்றுக்கொடுத்த ஆசிரியர்களைக் கண்டால் எழுந்து நிற்கத் தவறுவதில்லை. ஆனால் இந்தக் காலத்தில் வகுப்பறையிலே ஆசிரியர் கழுத்தை அறுக்கும் மாணவரை நினைக்கும் போது மிகவும் கவலையாக இருக்கிறது.

> முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்களுக்குச் சென்று அவர்களோடு பேசி, உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

மிஷனரிகளின் வாழ்வைத் திரும்பி பாருங்கள்

திரும்பிப் பாருங்கள் வயல் நிலங்கள் அறுப்புக்குக் காத்திருக்கின்றன. ஆனால் அறுப்புக்கு ஆட்களைக் காணவில்லை. ஆதி அப்போஸ்தலரும் மிஷனரிகளும் செய்த அறுவடையால் இந்தியாவில் கிறிஸ்தவம் தழைத்தது. இயேசுவின் இறைப்பணிக்கு இதயத்தைக் கொடுத்து இவ்வுலகை மாற்றி இறைவனோடும், மனிதரோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்த உடைய மாமனிதர்கள் மிஷனரிகள். சொந்த பந்தம் துறந்து, இனம், மொழி, நாட்டைக் கடந்து வந்து, பிறர் துன்பங்களில் பங்கெடுத்து, பிறருக்காக வாழ்ந்தவர்கள். அளவில்லாத கொடுமைகளை அநுதினமும் அனுபவித்து அறியப்படாத மனிதருக்காய் இன்னுயிரை ஈந்தவர்கள். மிஷனரிகளின் வாழ்க்கைப் பக்கங்களை திரும்பிப் பார்ப்போம். இறைவனின் இராஜ்யம் இப்புவியில் கட்டப்பட உழைப்போம்.

சென்ற கல்வியாண்டில் பல இழப்புகளை நீங்கள் சந்தித்திருக்கலாம். அன்பிற்குரிய யாரையேனும் இழந்திருக்கலாம். நம்பியவர்கள் துரோகம் செய்திருக்கலாம். எதற்கும் கலங்காதீர்கள். ஒரு தாய் தேற்றுவதுபோல் நம்மைத் தேற்றும் ஆண்டவர் நம்மோடிருக்கிறார். செடியில் நேற்று மலர்ந்த மலர் இன்று வாடினாலும் நாளை புதிதாக வேறொரு பூ பூக்குமே? சென்றதையே திரும்பிப் பார்த்துக் கொண்டிராமல் வருவதை நினைத்து உவகை கொள்ளுங்கள்''.

என்றென்றும் கல்வி

அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் வாழ்த்துக்கள். ஞானமும், அறிவும் தந்து உங்கள் கடின உழைப்பைக் கனப்படுத்திய தேவாதி தேவனைத் துதியுங்கள். ஒருவேளை தேர்வில் தோல்வியுற்றிருந்தாலும் அதையே நினைத்து, நினைத்து தலையணையில் முகம்புதைத்துக் கண்ணீர் விடாதீர்கள். உங்கள் எதிர்காலத்தைக் கர்த்தரின் கைகளில் ஒப்புவித்து மீண்டும் முயன்று படித்து வெற்றியடையுங்கள். ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் தாராளமாய்க் கொடுக்கிற கடவுளிடத்தில் கேட்கட்டும். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் (யாக். 1:5) கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பவைகளைக் கண்முன் கொண்டு இலக்கைநோக்கி தொடருங்கள். (பிலி. 3:13)

படித்தால் மட்டும் போதுமா?

நன்றாகப் படித்தால் மட்டும் போதாது. நல்ல மதிப்பெண்களையும் பெறவேண்டியது மிகவும் அவசியம் என கருதப்படுகிறது. நல்ல மதிப்பெண்கள் எடுப்பவர்களுக்கே நல்ல கல்லூரியில் நல்ல பாடப்பிரிவுகளில் இடம் கிடைக்கின்றன. நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கும்போது பிறநற் திறன்களையும் குறிப்பாக ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள முடிகிறது. ஆங்கிலத்தில் சிறந்து விளங்கும்போது நல்ல வேலை வாய்ப்பையும் பெற முடிகிறது. அதிக மதிப்பெண்கள் பெற்றால் லட்சங்களைக் கட்டணமாகக் கட்ட வேண்டிய நிலை இல்லை. மாறாக கல்வி உதவித் தொகை பெற்றுக் கொள்ளவும் வாய்ப்புகள் உண்டு. எனவே வெறுமனே படித்தால் மட்டும் போதாது. நல்ல மதிப்பெண்களை பெற்றுத் தேர்வடைவோம் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உழைப்பும் படிப்பும்

கடினமான பாடம் என்று ஒன்றுமில்லை. நன்றாக உழைத்துத் திரும்பத் திரும்பப் படித்தால் எதுவும் எளிதாகிவிடும். படிக்கும் காலத்தில் நேரத்தை வீணாக செலவு செய்வதோ, நண்பர்களுடன் ஊர் சுற்றுவதோ, அரட்டை அடிப்பதோ கூடாது. முயன்று படிக்காமல் பள்ளி அல்லது கல்லூரியை, ஆசிரியரை குறை கூறக்கூடாது.

வறுமையான சூழ்நிலையிலும், ஏழை மாணவர்கள் வீட்டு வேலை

செய்தும், கூலி வேலைக்குச் சென்றும் படித்து, முதன்மையான மதிப்பெண்கள் பெறுவதை செய்தித்தாள், ஊடகங்கள் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம். வறுமையிலிருந்து மீளவேண்டும் என்ற வெறி, கல்விமீது அவர்களுக்கு இருக்கும் தாகம், வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற கனவுகள் அவர்களை ஊக்குவிக்கின்றன. குடும்ப வறுமை காரணமாக குழந்தை தொழிலாளர்களாக ஆக்கப்பட்டவர்களும் இன்று கல்வி கற்று, மருத்துவராக, பொறியாளராக, ஆசிரியராக பணிபுரிவதை நாம் காண்கிறோம் அல்லவா? உழைத்துப் படித்து பெற்றோருக்கு பெருமை சேர்த்து மகிழுங்கள்.

வெற்றியும் தோல்வியும்

மாணவர்களே உங்களுக்கு விருப்பமான பாடப்பிரிவைத் தேர்ந்தெடுங்கள். பெற்றோரே உங்கள் விருப்பத்தை பிள்ளைகளின் மீது திணிக்காதீர்கள். எல்லோரும் மருத்துவராக, பொறியாளராக, ஆட்சியாளராக ஆகிவிடமுடியாது. ஒவ்வொரு நாளும் வேதம் வாசித்து, ஜெபித்து, பாடம் படிக்க ஆரம்பியுங்கள் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். கர்த்தரை சார்ந்து கொண்டு முயற்சியுடன் படிக்கும்போது வெற்றி நிச்சயம்.

> தேர்வில்
> தோல்வி என்பது
> வாழ்க்கையை
> நிர்ணயிக்கும்
> அளவுகோல் அல்ல

முழுமுயற்சி எடுத்தும், சில சமயம் தேர்வில் தோல்வியை சந்திக்க நேரலாம். சோர்ந்து போகாதீர்கள். தேர்வில் தோல்வி என்பது வாழ்க்கையை நிர்ணயிக்கும் அளவுகோல் அல்ல உலகிலுள்ள விஞ்ஞானிகள், தேசத்தலைவர்கள் பலர் தோல்வியை சந்தித்தவர்களே. ஆயிரத்துக்கும் மேல் மதிப்பெண்கள் எடுத்தும் தான் விரும்பிய மருத்துவப் பாடப்பிரிவு கிடைக்காது என்பதற்காக தற்கொலை செய்து கொண்ட மாணவியை பற்றிய செய்தி நெஞ்சை நெகிழச்செய்தது பெற்றோர்களின் மனம் விருப்பம் எத்தகையது என்பதை சிந்தியுங்கள். பெற்றோரும் பிள்ளைகள் தோல்வியுறும்போது அதைக் குறைக்காட்டி மன அழுத்தத்திற்குக் காரணமாகாதீர்கள்.

ஆறிலும் கல்வி, நூறிலும் கல்வி

கல்விக்காக உயிரையே பணயம் வைத்துப் போராடியிருக்கிறாள் பாகிஸ்தானைச் சேர்ந்த இளம் மாணவி மலாலா. அங்கே பெண்கள் கல்வி கற்கக்கூடாது என தீவிரவாதிகளால் அச்சுறுத்தப்பட்டும், ‘எனக்கு வேண்டியது கல்வி, இதற்காக நான் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை” என தைரியமாக எதிர்த்துநின்றாள். தீவிரவாதிகளால் சுடப்பட்டு, உயிருக்குப் போராடிய அவளது அபயக் கூரல் அமெரிக்காவை எட்டியது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்குப்பின் உயிர் பிழைத்தாள். அப்போதும்அவளது கல்வித்தாகம்

...கவில்லை.

...கிய நாடுகள் சபையில் உலகளாவிய அளவில் சிறப்புக் கல்வித் தூதராக ...கும பிரிட்டீஷ் பிரதமர் 'நான் மலாலா'' என்ற இயக்கத்தைத் தொடங் ...குகிறார். அதன்மூலம் 2015ஆம் ஆண்டுக்குள் உலகில் பள்ளி செல்லாத ...குழந்தைகளே இல்லை என்னும் நிலையை எட்டுவது நம் லட்சியம் ...று கூறியுள்ளார். இந்தியாவில் பள்ளி மற்றும் கல்லூரி வாசல்கள் திறந்தே ...கின்றன. ஆணென்றும், பெண்ணென்றும் கல்வி கற்பதற்கு வேதம் ...லை என்பதை உணர்ந்து கல்வி செல்வத்தைப்பெற்று வளமுடன் ...ங்கள்.

கல்லூரி கட்டணம் செலுத்த இயலாத வறுமை நிலையால் 1932ஆம் ...டு கல்லுலூரிப்படிப்பை விடநேர்ந்த அமெரிக்காவைச் சார்ந்த பியோபால் ...வா மரம் அறுக்கும் வேலைக்குச் சென்றார். ...யாக முன்னேறி காஸ் ஏஜென்ஸி ...னத்தின் தலைவரானார். ஆனால் ...வியின் மீது அவருக்கு ஆர்வம் தீரவில்லை. ... பெறும் ஆர்வத்தில் பல்கலைக் கழகத்தை ...கி தனது 99ம் வயதில் பொதுப்பாடப் ...ல் பட்டம் பெற்றுள்ளார். உலகிலேயே ... பெற்றவர்களுள் அதிக வயதானவர் ... பெருமைக்குரியவராகி கின்னஸ் சாதனை ...த்துள்ளார்.

ஒருவனுக்கு அழிவில்லாத, நிலையான ...ான செல்வம் கல்வியே, என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். கல்வி ...து மூளைக்கு மட்டுமே உணவளிப்பதாக ஆகிவிடாமல், நேர்மை, ...வு, சமூக நேயம், சேவை மனப்பான்மை ஆகிய நற்பண்புகளையும் ...த்துக் கொள்வதாக இருக்குமாயின் ஒவ்வொருவரின் எதிர்காலமும் சிறப்பாக ...மையும். தானியேல், அனனியா, மிகாவேல், அசரியா ஆகிய நாலுபேருக்கு ...வ எழுத்தாலும், ஞானத்தாலும், அதிகளவில் சமார்த்தியத்தையும் கொடுத்த ...தேவன உங்களுக்கும் அவ்வாறே அருள்வாராக!

தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்.
சங்கீதம் 136:21

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ம் நாள் அன்னியரின் அடிமைத்தனையிலிருந்து இந்தியா விடுதலைபெற்ற சுதந்திரத் திருநாள். இதற்காகத்தான் ஆயிரக்கணக்கானோர் தங்கள் இன்னுயிரை ஈந்தனர். தம் சந்ததியினர் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகத் தம் வாழ்வைத் தொலைத்தனர். அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்றுவிட்டோம். சுதந்திர நாட்டில் நாம் சுதந்திரமாக வாழ்கிறோமா? ஊழல் சுயநலம், தீவிரவாதம், லஞ்சம், சமூக பொருளாதார சீரழிவு ஆகியவற்றின் பிடியில் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம் என்பது தான் நிதர்சனமான உண்மை.

நம் நாடு ஒரு காலத்தில் கானான் தேசத்தைப் போல வளம் கொழிக்கும் நாடாக இருந்தது. அதனால் அந்நியர்கள் நம் நாட்டில் வியாபாரம் செய்ய வந்தார்கள். ஆனால் இன்று 20% மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்கள். குடிநீர் இன்றி, கழிப்பிட வசதியின்றி கோடிக்கணக்கான மக்கள் தவிக்கிறார்கள். சட்டத்தை மீறுவதாலும், ஊழல் புரிவதாலும், இயற்கை வளங்களை அழிப்பதாலும், சட்டம், பொருளாதாரம் சீர்குலைந்து நாடு முன்னேற இயலவில்லை.

இந்திய இளைஞர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் பெற இயலவில்லை. திறமையான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் மறுக்கப்படுகிறது. அதனால் பல இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் சென்று உழைக்கிறார்கள். நாட்டில் லஞ்சமும், தீவிரவாதமும் தலைவிரித்தாடுகிறது. இதற்கெல்லாம் மாற்றம் தேவை. “நீ காண விரும்பும் மாற்றமாக முதலில் நீ மாறவேண்டும்” என்பது மகாத்மா காந்தியின் பொன்மொழி. அந்நியரிடம்

நம் நாட்டை மீட்க ஒரு மகாத்மா பாடுபட்டார். லஞ்சம், சுயநலம், தீவிரவாதம் போன்ற தீய சக்திகளிடமிருந்து இன்றைய இந்தியாவை மீட்க இளைஞர்கள் மகாத்மாக்களாக மாற வேண்டும்.

ஊழலிருந்து வேண்டும் விடுதலை

அரசியல்வாதிகளிடமும், அரசு அலுவலர்களிட மும் காணப்படும் ஊழல், தொழிலதிபர்களிடம் காணப்படும் நேர்மையற்ற தன்மை, வியாபாரிகள் செய்யும் கலப்படம், தனிமனிதர்களிடம் காணப்படும் ஒழுக்கமற்ற செயல்கள் ஆகியவை நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கின்றன. இந்திய மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு முப்பது வயதுக்குட்பட்டவர்கள் என்ற புள்ளிவிபரத்தைப் பார்க்கும்போது இந்தியா ஓர் இளமையான நாடு என்று பெருமிதம் கொள்ளலாம். இளைஞர்கள் நல்ல கல்விகற்று, உடல்வளம், நற்பண்புகளைப் பெற்று ஊழலற்ற இந்தியாவை உருவாக்க வேண்டும்.

பஞ்சகாலத்தில் தன் புத்திக் கூர்மையால் நாட்டினைக் காப்பாற்றிய யோசேப்பைப் போல, ஊழல் என்னும் சாத்தானின் பிடியிலிருந்து இந்தியாவை மீட்கத்துடிப்பான இளைஞர்கள் முன்வரவேண்டும்.

இளைஞர்களும் அரசியலும்

நாடு சுதந்திரம் பெற்றதன் முழுப்பயனையும் அடைய வேண்டுமாயின் இளைஞர்கள் பொறியாளராக, மருத்துவராக, ஆசிரியராக மட்டுமின்றி அரசாங்கம் என்னும் இயந்திரத்தை இயக்குபவராகவும், சட்டங்கள் இயற்றும் திறன் வாய்ந்தவர்களாகவும், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும் முன்வர வேண்டும். அதுநாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

இளம்வயதில் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி தம் இன்னுயிரை ஈந்த பகத்சிங் போன்ற இளைஞர்கள் ஏராளம். இன்று நாட்டிற்காக இளைஞர்கள் நீங்கள் உயிரைத் தர வேண்டாம் உழைப்பைத் தரலாமே? தற்போதைய பாராளுமன்றத்தில் 25 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்டோர் 15% பேர்தான் உள்ளனர். திறமைமிக்க, கல்வியறிவு பெற்ற இளைஞர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது சமூக பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படும். ஞானமுள்ள சாலமோன்களாய், துடிப்புள்ள தாவீதுகளாய் நாட்டிற்காக சேவைசெய்யுங்கள்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்போம்

இந்தியாவின் இறையாண்மையைக் காத்து, ஒருமைப்பாட்டை நிலைபெற செய்வது ஒவ்வொரு இந்தியரின் கடமை. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை

வளங்களைக் காத்தல், தொழில், விஞ்ஞானம், விவசாய வளர்ச்சிக்குப் பாடுபடுவது, வன்முறை தவிர்ப்பது பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது, போதைப் பழக்கங்களை விடுத்து தனிமனித ஒழுக்கத்தைப் பேணுவது போன்றவற்றை ஒவ்வொரு இந்தியனும் கடைபிடிக்கும்போது சுதந்திரம் பெற்றதன் முழுப் பயனையும் நாடு அடையும்.

நாடு சுதந்திரம் பெற அகிம்சை வழியைப் பின்பற்றின காந்தி பிறந்த நாட்டில் இப்போது எதற்கெடுத்தாலும் போராட்டம், வேலைநிறுத்தம், கலவரங்கள், வன்முறைகள், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்று விட்டோம். ஆனால் தீவிரவாதம் என்னும் தீயசக்தியின் பிடியில் நாடு சிக்கித் தவிக்கிறது. முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும். தீவிரவாதிகளில் பெரும்பாலானோர் இளைஞர்களே. இளைஞர்களாகிய நீங்கள்தான் தீவிரவாதத்திலிருந்து நாட்டை மீட்க வேண்டும்.

எது சுதந்திரம்?

போதைப் பொருட்களைப் பயன்படுத்துவது, ஆபாசகாட்சிகள், புகை பிடித்தல் போன்றவை இளைஞர்களை அடிமையாக்கி அதிலிருந்து விடுபட இயலாமல் செய்துவிடுகின்றன. இளைஞர்கள் காற்றாடி போன்றவர்கள் வானுயரப்பறந்து சாதனை படைக்க வேண்டியவர்கள். பட்டம் வானுயரப் பறக்க நூலைக் கட்டுப்பாடுடன் கையாள வேண்டும். இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம். (சங்கீதம் 127:4)

கர்த்தர் தந்த பிள்ளைகள், பெற்றோர் என்னும் கட்டப்பாட்டு நூலின்மூலம் இயங்க வேண்டும். சுதந்திரம் என்ற பெயரில் தான் தோன்றித் தனமாக நடந்து கொள்ளக்கூடாது. எந்த நேரமும் அலைபேசியில் அரட்டை அடிப்பதும், அரைகுறை ஆடை அணிவதும், வலைத்தளத் தினுள் மூழ்கி விடுவதும் காதல் வயப்படுவதும் சுதந்திரமல்ல இவற்றிற்கு அடிமையாகிவிடாமல் தன்னம்பிக்கை என்னும் சிறகுகளைக் கொண்டு வாழ்க்கை என்னும் சுதந்திர வானில் பறந்து வெற்றி பெற்றிடுங்கள். சிறகுகள் முளைத்ததும் உறவுகளைப் பிரிந்து செல்வதல்ல சுதந்திரம். பெற்றோரையும், உறவினர்களையும் மதித்து, நாட்டுப் பற்றோடு தேசநலனில் அக்கறையுடன் வாழ்வதே சுதந்திரம்.

இளைஞர்களே! பாவப்பழக்கங்களின் பிடியில் சிக்கித் தவிக்கும் அடிமையாக நீங்கள் இருப்பின் உங்கள் அடிமைத்தளையை உடைத்தெறிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவரைக் கிட்டிச் சேர்ந்து பாவத்திலிருந்து விடுதலை பெறுங்கள். புதிய சிந்தனையோடு வளம்மிகு பாரத்தை உருவாக்கி சுதந்திர காற்றை சுவாசியுங்கள்.

கானல் நீரில் காகிதக் கப்பல்கள்

அது ஒரு பிரதான சாலை. எப்பொழுதும் மக்கள் நடமாட்டமும், வாகனங்களின் ஓட்டமுமாக பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும். ஜன்னல் வழியாக அந்த சாலையை' வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். நடந்து செல்பவர்களும், வாகனங்களில் பயணிப்பவர்களும் எதையோ நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். மாணவர்கள் பள்ளியை நோக்கி, இளைஞர்கள் கல்லூரியை நோக்கி, சில மனிதர்கள் தாங்கள் அலுவலகம், தொழிற் கூடங்கள் அல்லது வணிக வளாகங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். இவ்வுலகில் வாழும் வரை மனிதர்கள் பணத்தையோ, பதவியையோ, புகழையோ நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவரை நோக்கிப் பார்ப்பவர்கள் எத்தனைபேர்? நீங்கள் எதை நோக்கி செல்கிறீர்கள்?

உலகத்தின் பயணம் எதை நோக்கி?

இவ்வுலகம் அழிவின் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இயற்கை சீற்றங்களால் ஒருபுறம் உலகின் பலபாகங்கள் அழிவை சந்தித்துக் கொண்டிருக்க தீவிரவாதம், வன்முறை கலாசாரம் உலகெங்கும் மக்களை துயரத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. கொலைகள், கொள்ளைகள் சகஜமாகிவிட்டன. அண்டை அயலாரோடு சமாதானமாக வாழ முடியவில்லை. நாட்டுக்கு நாடு சமாதானமில்லை. இவையெல்லாம் நாம் கடைசி காலத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறோம் ஏ்ன்பதை உணர்த்துகின்றன. ஆண்டவருடைய வருகை சமீபமாயிற்று என்பதை அறிந்து கொள்ளுங்கள். உலகம் எதை நோக்கிச் சென்றாலும் உங்கள் பார்வை ஆண்டவரை நோக்கிச் செல்ல வேண்டும். பாவியாக வாழ்ந்து, அக்கினி நரகத்துக்குள் வீழ்ந்துவிடாமல், பரிசுத்தமாக வாழ்ந்து பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வோம்.

பெற்றோர்கள் எதை நோக்கி

இன்றைய பெற்றோர்களின் ஓட்டம் எதிர்காலத்தைக் குறித்த கேள்வியை எழுப்புகிறது. தன் பிள்ளைகள் நல்ல கல்வி கற்க வேண்டும் என்பதற்காக மிகுந்த கட்டணம் வசூலிக்கும் பள்ளியாக இருந்தாலும் அதை நோக்கியே ஓடுகிறார்கள். பிள்ளைகள் நல்ல மதிப்பெண் களை எடுக்கவில் லை யெனில் மற்ற வர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து பிள்ளைகள் மனதைக் காயப்படுத்து கிறார்கள். உயர்ந்த படிப்பு,



நல்ல வேலை, கைநிறைய ஊதியம் என்பதை நோக்கியே அவர்கள் கவனம் இருக்கிறது. பிள்ளைகள் வேதம் வாசிப்பதையோ, ஜெபிப்பதையோ இரண்டாம் பட்சமாகக் கருதுகிறார்கள். தேர்வு காலங்களில் பிள்ளைகள் ஆலயத்தை நோக்கிச் செல்வதையும், ஜெபிப்பதையும் ஊக்குவிப்பதில்லை. நேரமில்லை என்ற காரணத்தைக் கூறாமல் ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது அவர் எல்லா காரியங்களிலும் ஜெயம் கொடுப்பார்.

வாலிபர்கள் எதை நோக்கி?

இக்கால வாலிபர்கள் நல்ல கல்வி, அதிக ஊதியத்தில் வேலை ஆகியவற்றைப் பெறுவதற்காக நல்ல கல்வி ஸ்தாபனங்களையும், வேலை வாய்ப்புகளையும் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள் அதன்பின் நல்ல அழகான, இலாப நோக்கோடு கூடிய வாழ்க்கைத் துணையை நோக்கிச் செல்கிறார்கள். ஒரு சில இளைஞர்கள் படிக்கும் காலத்தில் கல்வியில் நோக்கத்தைச் செலுத்தாமல், நண்பர்களோடு சுற்றித் திரிந்து, விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டு வாழ்க்கையையே தொலைத்து விடுகிறார்கள். ஆலயத்துக்கும், கல்விச் சாலைகளுக்கும் செல்ல வேண்டிய கால்கள் மதுபானகடையை நோக்கிச் செல்கின்றன. தங்களையும் கெடுத்து, பெற்றோருக்கும் அவமானத்தைத் தேடித் தருகின்றனர். கானல் நீரில் காகிதக் கப்பல்களாய் சிலரின் ஓட்டம் அமைந்துவிடுகிறது.

> **நண்பர்களோடு சுற்றித் திரிந்து, விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டு வாழ்க்கையையே தொலைத்து விடுகிறார்கள்.**

விளக்கை நோக்கி ஓடும் விட்டில் பூச்சிகளைப் போல ஒரு சில வாலிபத் தம்பி தங்கைகள் படிக்கும் காலத்தில் காதலை நோக்கி ஓடுகின்றனர். அந்த மாய வலையில் சிக்கி மீள முடியாமல் தவிப்பவர்களே ஏராளம் இளைஞர்களே! நன்றாக யோசியுங்கள். தினந்தோறும் ஊடகங்களில் வரும் காதல் கதைகள் உள்ளத்தை உருக்குவதாகவே இருக்கின்றதே தவிர மகிழ்ச்சியைத் தருவதாக இல்லை. சாதிப் பிரச்சனைகள், அந்தஸ்தில் ஏற்றத்தாழ்வுகள் இவற்றை மீறி செய்யப்படும் காதல் திருமணங்களால் குடும்பம் சின்னாபின்னமாகிறது. மன முறிவுகள், தற்கொலைகள், கொலைகள் ஆகியவற்றை நோக்கியே காதல் பயணிக்கிறது. ஆண்டவரை நோக்கிப் பார்த்து, அவர் சித்தம் அறிந்து, பெற்றோர் சொல்கேட்டு வாழ்க்கை துணையைத் தேர்ந்தெடுப்பதே புத்திசாலித்தனம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அழகை நோக்கி ஓடாமல் அன்பை நோக்கி ஓடுங்கள். பணத்தை நோக்கிச் செல்லாமல் பண்பான வாழ்க்கைத் துணையை நோக்கிச் செல்லுங்கள்.

பெற்றோர்கள் தங்கள் உடல் உழைப்பையும், பொருளையும் ஈந்து பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்கிறார்கள். திருமணம் செய்து கொண்டு, வெளி

நாட்டிலோ, வெகு தொலைவான நகரத்திலோ பணி வாய்ப்பை பெற்றுக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அதன்பின் பெற்றோரை மறந்து விடுகிறார்கள். அங்கிருந்து பணம் அனுப்புகிறார்கள். தனியே வாழ இயலாத அவர்கள் முதியோர் இல்லம் நோக்கிச்செல்ல பிள்ளைகள் காரணமாகிறார்கள். தான் பெற்ற பிள்ளைகளோடும், பேரக் குழந்தைகளோடும் வாழ முடியாத பெற்றோரின் மனநிலையை ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள்.

இந்த உலகில் ஆண்டவரால் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிருக்கும், பொருளுக்கும் ஒரு நோக்கம் உண்டு. எங்கோ மலையில் உற்பத்தி யாகும் நதியானது தான் பாய்ந்து செல்லும் வழி யெங்கும் வளங் கொழிக்கச் செய்து, மனிதர் களின் தாகத்தைத் தீர்த்து, கடலை நோக்கிச் செல்கின்றது.

மனிதர்களின் வாழ்க்கை ஓட்டப் பந்தயம் போலிருக்கிறது. இலக்கை நோக்கி ஓடுகிறவர்கள் வெற்றிக் கோப்பையை பெற்றுக் கொள்கிறார்கள். நாமும் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு இலக்கை நோக்கி ஓடு வோம்.

ஆண்டவர் நமக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்கள் என்னும் வெற்றிக் கோப்பையை பெற்றுக்கொள்ளுவோம். உங்கள் ஓட்டம் வெற்று ஓட்டமாக மாறாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள்

இவ்வுலகில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு எதிர்பார்போடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எதிர்பார்ப்புகள் இல்லாவிட்டால் வாழ்க்கை சுவாரசியமில்லாமல் போய்விடும். பெற்றோர் பிள்ளைகள் ஒழுக்கமுள்ளவர்களாக வளர்ந்து, நல்ல கல்வியைப்பெற்று, உயர்பதவிகளில் அமர்ந்து எல்லா நலன்களும் பெறவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவை நிறைவேறாதபோது ஏமாற்றமடைகிறார்கள். ஆனால் பிள்ளைகளும் சிலகாரியங்களைப் பெற்றோரிடம் எதிர்பார்க்கிறார்களே?

நேரத்தை எதிர்பார்க்கிறார்கள்

ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞரின் மகன் ஒரு பணமோசடி வழக்கில் சிக்கி நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான். அவன் வழக்கறிஞரின் மகன் என்பதை அறிந்து கொண்ட நீதிபதி ஆச்சரியப்பட்டு, "உன் அப்பாவின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும்படி இங்கே நிற்கிறாய்" என்றார். அவன் "ஆம். என் அப்பா சட்டத்தைப் பற்றி ஏராளமான புத்தகங்கள் எழுதியுள்ளார்". நான் சிறு பையனாக இருந்தபோது அப்பாவிடம் கொஞ்சநேரம் பேசலாம் என்று ஆசையோடு போகும்போதெல்லாம், "நான் பிஸியாக இருக்கிறேன்" என்று விரட்டியடித்து விடுவார். அதனால் அவரை விட்டு வெகுதூரம் போய் இப்போது இங்கே நிற்கிறேன்" என்றான்.

ஆம் பெற்றோரே! சிறுவயதுப் பிள்ளைகளுக்காக முதலீடு செய்யும் சில மணித்துளிகள், அவர்கள் வளர்ந்தபிறகு அவர்களோடு போராடி கண்ணீர்த்துளிகள் சிந்த வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தடுக்க உதவும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரோடு பொழுதைக் கழிக்க ஒருவருக்கொருவர் கொடுக்கும் விலையுயர்ந்த பரிசு நேரம்தான். அவ்வாறில்லாத குடும்பம் சோலைவனமாக இல்லாமல் பாலைவனம்போல் மாறிவிடும். பெற்றோர் பொருளீட்டுவதிலும், வேறு காரியங்களிலும் கவனத்தை செலுத்தி, பிள்ளைகளைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் அவர்கள் எதிர்காலம் கேள்விக்குறிதான். உங்கள் வயதான

காலத்தில் அவர்கள் உங்களைக் கவனிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதில் நியாயமில்லை.

அரவணைப்பை எதிர்பார்க்கிறார்கள்

இன்றைய காலத்தில் கணவனும், மனைவியும் பணிபுரிவது தவிர்க்க முடியாததாகி விட்டது. தாத்தா, பாட்டியின் அரவணைப்பில் கவனித்துக் கொள்ளப்படும் பிள்ளைகள் அன்போடு, பண்போடு வளர்க்கப்படுகிறார்கள். இப்போதுதான் கூட்டுக்குடும்பங்கள் கலைக்கப்பட்டுவிட்டனவே? அதனால் பணிப் பெண்களால் வளர்க்கப்படும் பிள்ளைகள் முரட்டாட்டம் உள்ளவர்களாக மாறிவிடுகின்றனர்.

அன்பான பெற்றோரே! உங்கள் ஓய்வு நேரங்களை பிள்ளைகளோடு செலவிடுங்கள். பிள்ளைகள் அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறார்கள். உங்கள் நாவின் வார்த்தைகள் இனிமையாக, அன்புடைதம் நிறைந்ததாக இருப்பதையே அவர்கள் விரும்புகிறார்கள். உங்கள் அன்பும், அரவணைப்பும், பாராட்டும் அவர்கள் வாழ்வில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும். மலராத இளம்மொட்டுகளான உங்கள் பிள்ளைகளை அன்பெனும் சூரியனால் மலரச்செய்யுங்கள். இவ்வுலகில் நறுமணம் வீசி வாழ வழி செய்யுங்கள். கடுஞ்சொற்கள் என்னும் அம்புகளை உங்களிடமிருந்து பிள்ளைகள் ஒருபோதும் எதிர்பார்ப்பதில்லை.

> கடுஞ்சொற்கள்
> என்னும் அம்புகளை
> உங்களிடமிருந்து
> பிள்ளைகள்
> ஒருபோதும்
> எதிர்பார்ப்பதில்லை.

வழிநடத்துதலை எதிர்பார்க்கிறார்கள்

ஒரு தகப்பனுடைய இளவயது மகன் நோய்வாய்ப்பட்டு மரிக்கும் தருவாயில் இருந்தான். அவனுடைய படுக்கைக்கு அருகே அவனுடைய தகப்பனார் முழங்காற்படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார். கண்விழித்த மகன் "அப்பா கவலைப்படாதீர்கள். இன்றிரவு ஆண்டவரோடு கூட இருப்பேன். என்னை ஆண்டவரிடம் வழி நடத்தியதற்காக உங்களுக்கு நன்றி" என்று கூறி அன்றிரவு அமைதியாக மரித்துப் போனான். ஆம் பெற்றோரே! உங்களிடத்தில் வழிநடத்தப்படுவதையே பிள்ளைகள் எதிர்பார்க்கிறார்கள். வாழ்வின் முக்கியமான தருணங்களில் உங்கள் வழிகாட்டுதலை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பெற்றோரால் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்படாமல், ஓய்வுநாளில் பங்கேற்காத பிள்ளைகள் ஆண்டவரின் அன்பை ருசி பார்க்க இயலாமல் வழிதவறிப் போய்விடுகிறார்கள். தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளையை தோழனைப் போல நடத்துவதையே வாலிபர்கள் எதிர்பார்க்கிறார்கள். கழுகுதன் கூட்டைக் கலைத்துக் குஞ்சுகளைப் பறக்க விடுவதுபோல

சுதந்தரமாக செயல்பட விடுங்கள். பண நிர்வாகம் செய்யக் கற்றுக் கொடுங்கள் அவசரமான இவ்வுலகில் பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள் நிறைவேற பெற்றோரின் வழிநடத்துதல் மிக அவசியம். பிள்ளைகளை நடக்க வேண்டிய வழியில் நடத்தினால் அவர்கள் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பார்கள்.

சுதந்திரத்தை எதிர்பார்கிறார்கள்

நாம் வாலிபர்களாக இருந்தபோது நம் வாழ்க்கை முறைகள் இருந்தது போலவே நம் வாலிபப் பிள்ளைகளும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இந்த நவீன உலகிற்குப் பொருந்தாது. இன்றைய உலகம் நாகரீகத்திலும், விஞ்ஞான வளர்ச்சியிலும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. எனவே பிள்ளைகளை இந்த நாகரீக உலகோடு சற்று ஒத்துப்போக அனுமதியுங்கள். அழகாக, அம்சமாக உடையணிவதை பிள்ளைகள் விரும்புகிறார்கள்.

> அனுபவிக்கும் சுதந்திரக் காற்றில் நச்சு கலந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

தங்கள் பெற்றோர் தங்களுக்கு 'பாக்கெட்மணி' கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். செல்போன், இண்டர்நெட் போன்ற சாதனங்களை பயன்படுத்தும் சுதந்தரத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இவற்றினால் பெற்றோரின் தொடர்பு எல்லைக்கப்பால் போய்விடாமல் பார்த்துக்கொள் ளுங்கள். காதலிக்கும் சுதந்தரத்தை அனுபவிக்க வேண்டும் என வாலிபப் பிள்ளைகள் எதிர்பார்க் கிறார்கள். ஆனால் அதிலுள்ள பாதகங்களை பெற்றோர் எடுத்துக்கூறும்போது அதற்கு செவி கொடுங்கள். சிநேகிதரோடு பொழுதைக் கழிக்கும் சுதந்திரத்தை நீங்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை. ஆனால் அவர்கள் நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும் என்பதையே பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். அனுபவிக்கும் சுதந்திரக் காற்றில் நச்சு கலந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

முன்மாதிரியை எதிர்பார்க்கிறார்கள்

"நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசி களுக்கு மாதிரியாயிரு. (1 தீமோத்தேயு 4:12)

ஒரு போதகருக்கு எழுதப்பட்ட இந்த வார்த்தைகள் பெற்றோருக்கும் பொருந்துகிறது. விசுவாசிகளுக்கு என்பதை பிள்ளைகளுக்கு என்று எடுத்துக் கொள்ளலாம். ஒரு மகன் தன் தாயிடம் "அப்பாவைப் போல நான் எப்போது பெரியவனா வேன்?" என்று கேட்டானாம். ஏன்? என தாயார் கேட்டதற்கு "அப்போதுதான் குடும்ப ஜெபம் நடக்கும்போது டி.வி. பார்க்கலாம். நீங்கள் ஆலயத்துக்குச் செல்லும்போது நான் ஊர் சுற்றலாம்" என்றான். பாருங்கள். பிள்ளையின் இந்த தவறுதலான எதிர்பார்ப்புகளுக்கு பெற்றோர் காரணமாக இருக்கலாமா?

தாயும், தகப்பனும் எப்போதும் சண்டையிட்டுக் கொள்வதையும், அக்கம்பக்கம்

உள்ளவர்களோடு சண்டையிடுவதையும், சிகரெட் புகைப்பதையோ, மது அருந்துவதையோ பார்க்கும் பிள்ளைகள் வழிதவறிச் செல்கிறார்கள்.

வேதம் வாசித்து, ஜெபம் செய்து, ஆலயத்துக்கு ஒழுங்காக செல்லும் பெற்றோர் பிள்ளைகளுக்கு மாதிரியாயிருக்கிறீர்கள். ஏழைகளுக்கு இரங்குவதிலும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாயிருங்கள்.

பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே உள்ள உறவு எந்தவொரு மனித உறவைவிடவும் மேலானது. பெற்றோர் தங்கள் அன்பை, தங்கள் வாழ்வை பிள்ளைகளுக்காகவே அர்ப்பணிக்கிறார்கள். ஆனால் பெற்றோர் 'எதிர்பார்ப்பு' என்னும் வட்டத்துக்குள் தங்களை சிக்க வைக்காமல், அவர்கள் தனித் திறமையை வெளிப்படுத்த வழிவிடுவதையே எதிர்பார்க்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவர் உங்களிடம் எதிர்பார்ப்பது என்ன? வாலிப தம்பி, தங்கைகளே, பெற்றோர்களுக்குக் கீழ்படிந்து அன்பு கூருவதையும், ஆண்டவரிடம் விசுவாசமாயிருப்பதையே எதிர்பார்க்கிறார். எதிர் பார்ப்பை நிறைவேற்றுவீர்கள் அல்லவா?

நேர நிர்வாகம்

சமீபத்தில் ஒரு பெண்கள் பத்திரிகை ஒன்றைவாசித்துக் கொண்டிருந்தேன். அதில் சமுதாயத்தில் பிரபலமான பெண் மணிகள் ஒருநாளில் 24 மணி நேரத்தை எவ்வாறு சரியான முறையில் செலவு செய்கிறார்கள் என்பதைப்பற்றி கூறியிருந்தார்கள். ஒருநாளில் எத்தனை வகையான பணிகளை, எப்படி திட்டமிட்டு நேர்த்தியாக செய்கிறார்கள் என்பதைப் பற்றி அறிந்தபோது, மிகவும் வியப்பாய் இருந்தது. இந்த ஒழுங்கை நம் வாழ்விலும் கடைப் பிடித்தால் வெற்றியடைபவர்கள் பட்டியலில் நாமும் சேரமுடியும். நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு மணித்துளியும் தேவனுடைய பணி செய்வதற்கும் சேர்த்துதான் கொடுக்கப் பட்டிருக்கிறது.

மகிழ்ச்சியூட்டும் பறவைகளின் நேரம்

எங்கள் வீட்டிற்கு முன்பாக ஒரு பெரிய மரம் இருக்கிறது. அதை பலவகையான பறவைகள் தங்கும் சரணாலயம் என்று சொன்னால் மிகையில்லை. காலையில் 4 மணியிலிருந்து ஒவ்வொரு பறவையாக விழித்துக் கொள்கின்றன. பொழுது புலர்வதுக்குள் அத்தனை பறவைகளும் விழித்துக்கொண்டு, இந்த உலகிற்கு தங்கள் மகிழ்ச்சியான சத்தங்கள் மூலம் காலை வந்தனத்தை

தரித்து புறப்பட்டு செல்கின்றன. தினமும் மாலையானதும் வேளையில் 6 மணிக்குள் மரத்தை வந்தடைகின்றன.

தினமும் காலை 7 மணிக்கு ஒரு குறிப்பிட்ட காகம் எங்கள் சமையலறை ஜன்னல் அருகே வந்து, உணவு கேட்டு கரைவதற்கு யார் சொல்லிக்கொடுத்தது? பறவைகளிடமிருந்து நாம் நேர நிர்வாகத்தை கற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட நேரத்தில் எழுந்து உணவு தேடி பறப்பதும், சரியான நேரத்தில் கூட்டிற்கு திரும்புவதும் ஆச்சரியமான நேர நிர்வாகம் தானே. சில இளைஞர்கள் சூரிய உதயத்தை பார்ப்பதே அரிதாக இருக்கிறது. காலதாமதமாக எழுந்து ஜெபிக்க நேரமில்லை. வேதம் வாசிக்க நேரமில்லை. காலை உணவு உண்ண நேரமில்லை என பள்ளிக்கும், கல்லூரிக்கும் ஓடிச்செல்லும் தம்பிகளே, தங்கைகளே! கொஞ்சம் யோசியுங்கள். பறவைகளிடமிருந்து நேர நிர்வாகத்தை கற்றுக்கொள்ளுங்கள். தேவனுக்காக நேரம் செலவிடவும், உழைக்கவும் நேரம் இல்லை என்று சொல்வது, பழுதுபட்ட சிந்தனை யின் வெளிப்பாடு.

நேரத்தை திட்டமிடுங்கள்

> காலதாமதமாக படுக்கையைவிட்டு எழும்பினால் ஒரு வேலையையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முடியாது.

எவ்வளவு **நாள் நாம் இந்த உலகில் வாழ்கிறோம்? என்பது முககியமில்லை. நமக்கு கொடுக்கப்பட்ட நேரத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம்.** - டாக்டர் தாமஸ்உல்கி

அதிகாலையில் எழுந்து காலை நேர ஆராதனை அனுபவியுங்கள். காலை நேர அமைதியான சூழ்நிலையில் ஜெபிப்பதும், வேதத்தை தியானிப்பதும் மன மகிழ்ச்சியை தரும். பின் உங்கள் பாடங்களை படியுங்கள். அதிகாலையில் படிப்பது மனதில் நன்றாக பதியும்.

காலதாமதமாக படுக்கையைவிட்டு எழும்பினால் ஒரு வேலையையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முடியாது. நாள் முழுவதும் பதற்றமாகவே கழியும். எனவே நேரத்தை திட்டமிட கற்றுக் கொள்ளுங்கள்.

அயர்ச்சியும், அலுப்பும் ஏற்படாமல் வாழ நாம் நேரத்தை சரியாய் பயன்படுத்த வேண்டும். - இறையன்பு IAS

நேரத்தை ஒழுங்குபடுத்துங்கள்

அட்டவணைகளால் மட்டும் நேரத்தை ஒழுங்குபடுத்த முடியாது. எப்போது உள்ளுணர்வுகளுடன் நாம் நேரத்தை செலவு செய்கிறோமோ, அப்போதுதான் தேவையற்ற செயல்கள் நம்மிடமிருந்து உதிர்ந்துவிடுகின்றன. எல்லோருக்கும் ஒரு நாளில் 24 மணி நேரம்தான். ஆனால் நேரத்தை நல்ல முறையில் திட்டமிட்டு செலவழிப்பவர்கள் அரசர்களாக இருக்கிறார்கள். பொழுதுபோகவில்லை என்று சோம்பித் திரிபவர்கள் பிச்சைக்காரர்களாக

ஆகிறார்கள்.

கடிகாரத்தை பார்க்காமல் கடினமாக உழைத்ததால்தான் என்னால் புதிய பொருட்களை கண்டு பிடிக்க முடிந்தது. - தாமஸ் ஆல்வா எடிசன்.

பொன்னான நேரத்தை வீணாக்கலாமா?

படிக்க வேண்டிய நேரத்தை, ஜெபிக்க வேண்டிய நேரத்தை, ஆலயம் செல்ல வேண்டிய நேரத்தை, நம் பணிகளை செய்ய வேண்டிய நேரத்தை எப்படியெல்லாம் வீணடிக்கிறோம்? செல்போனில் அரட்டை அடிப்பது, கம்ப்யூட்டர், பேஸ் புக் ஆகியவற்றை தவறாக கையாள்வது, செல்போனில் அரட்டை அடிப்பது, கண்ட கண்ட இடங்களில் காத்திருப்பது இவையெல்லாம் உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்கும் செயல்களே.

மறைந்த பாரத பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஒருநாளில் மூன்று அல்லது நான்கு மணி நேரம் மட்டுமே உறங்குவாராம். காலத்தின் அருமையை உணர்ந்து, தன்னலம் கருதாமல் உழைத்தவர்களே தலைவர்களாக போற்றப்படுவர். ஒருநாளின் ஒவ்வொரு நிமிடமும் மதிப்புமிக்கது. நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம் என நேரத்தை வங்கியில் சேமித்து வைக்க முடியாது. காலமும், கடல் அலையும் யாருக்காகவும் காத்திருக்காது. இந்த நாள் ஆண்டவர் எனக்களித்த பொன்னான நாள் என்றுணர்ந்து சிறப்பாக செயல்படுவோம்.

> **நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம் என நேரத்தை வங்கியில் சேமித்து வைக்க முடியாது.**

நம் வாழ்நாட்கள் வேகமாக ஓடுகின்றது. நாட்கள் குறுகியதாய் இருப்பதால் காலத்தை பிரயோஜனப்படுத்துவது அவசியமாய் இருக்கிறது.

தாவீது அரசனுக்கு வேலைகள் ஏராளம், ஆனாலும் அதிகாலையில் அவன் ஆண்டவருக்கென்று நேரத்தை ஒதுக்கினான். கர்த்தாவே காலையில் என் விண்ணப்பம் உமக்கு முன்பாக வரும் என்றான் (சங்கீதம் 88:13). அதிகாலையில் ஆண்டவரை கண்டு கொள்ளாதவன் நாள் முழுவதும் அவரை கண்டுகொள்வது அரிது. உழைத்து சம்பாதிக்க நேரத்தை ஒதுக்குவது போல, நாம் ஆண்டவரை தேடவும் நேரம் ஒதுக்குவதும் அவசியம். கர்த்தருக்காக நேரம் ஒதுக்காதவர்கள் யாரும் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்ததேயில்லை.

நாம் வாழும் இந்த 21ம் நூற்றாண்டு ஒரு வேகமான யுகம். பூமி ஒரு விநாடிக்கு 24 கி.மீ. வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது. நாம் பிரயாணம் செய்ய பஸ்சை பிடிக்கும்போது எந்த பஸ் வேகமாக முதலில் செல்லும் என்று கேட்டு ஏறுகிறோம். உணவு வகைகளிலும் துரித உணவு, இன்ஸ்டன்ட் காபி, 2 நிமிட நூடுல்ஸ் என நேரத்தை சிக்கனமாக செலவழிக்கிறோம். சுருக்க நேரத்தில் ஆயை ஆராதனை முடிய வேண்டும் என எண்ணுவோரும் உண்டு.

அர்த்தமுள்ள கிறிஸ்மஸ்

பாவிகளை இரட்சிக்க பூவுலகில் வந்துதித்த இறைமகன் இயேசுவின் பிறப்பை உலகமெங்கும் கோடிக்கணக்கான மக்கள் ஆண்டுதோறும் வெகு விமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். டிசம்பர் மாதம் பிறந்ததுமே பாடல் ஆராதனைகள், கீத பவனிகள், அலங்காரங்கள், வண்ண விளக்குகள், புத்தாடைகள், கேக் வகைகள், பரிசு பரிமாற்றங்கள், விருந்துகள் என கொண்டாட்டமாகவே நாட்கள் நகர்ந்துவிடுகின்றன. கிறிஸ்மஸ் பண்டிகையின் உண்மையான அர்த்தம் என்ன என்பதை நம்மில் எத்தனைபேர் அறிந்திருக்கிறோம்.

> **"கிறிஸ்துவின் பிறந்த நாளை எத்தனையோ பேர் அனுசரிக்கிறோம், எவ்வளவு குறைவானபேர் அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளுகிறோம்?"**
>
> -பெஞ்சமின் பிராங்ளின்.

உள்ளத்தில் பிறக்க வேண்டும்

இயேசு கிறிஸ்து நம் உள்ளத்தில் பிறக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நாம் செய்கிற வழிபாடுகளும், பண்டிகை கொண்டாட்டங்களும் அர்த்தமற்றவை. நம் வீட்டையும் ஆலயத்தையும் சுத்தம் செய்வது போல உள்ள அழுக்கையும் போக்க வேண்டும். அழுக்கான ஆடை அணிந்து பண்டிகை கொண்டாடுவோமா? புத்தாடை அணிந்து பண்டிகை கொண்டாடுவதையே நாம் விரும்புகிறோம்.

ஆண்டவர் தரும் இரட்சிப்பு என்னும் உடையை அணிந்து கொள்வதை ஆண்டவர் விரும்புகிறார்.

இங்கிலாந்தில் கண்ணைக் கவரும் இடமான ஸ்ட்ராட்ஃபோர்டு அப்பான் - ஆவோன் என்ற இடத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்த இடத்தை ஆண்டுதோறும் ஐந்து லட்சம் பேர் பார்த்துச் செல்கின்றனர். வசதி படைத்த நம் மக்களும் கூட ஆண்டவர் பிறந்த

ஊராகிய பெத்லகேமைப் பார்ப்பதை புனித பயணமாகக் கருதுகின்றனர். "இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையை பெத்லகேமில் கொண்டாடுவோம் வாருங்கள்" என ஒரு தொலைக்காட்சியில் விளம்பரம் செய்கிறார்கள். பெத்லகேமின் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசுபாலன் நம் உள்ளத்தில் பிறந்திருக்கிறாரா? அவர் பிரசன்னத்தை நமக்குள் உணர்ந்து கொள்வதே உண்மையான கிறிஸ்துமஸ் கொண்டாட்டமாகும்.

தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்

கிறிஸ்துமஸ் என்பதில் மிக முக்கியமானது அதிலுள்ள முதல் நான்கு எழுத்துக்களே. தேவன் தம்முடைய பரிசாக தம்முடைய குமாரனை அனுப்பினார். அவர் தாழ்மையின் ரூபம் எடுத்து அரண்மனையில் பிறக்காமல் மாட்டுத் தொழுவில் பிறந்தார். நாமோ ஆடம்பரமான ஆடைகள், அணிகலன்கள், விலையுயர்ந்த பரிசுகள், விருந்துகள் என கிறிஸ்துவை மறந்து விட்டு கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறோம். அண்டசராசரங்களையும் உருவாக்கிய ஆண்டவரிடமிருந்து தாழ்மையைக் கற்றுக் கொள்வோம் தாழ்மையிலிருந்து உயர்வுக்கு ஆண்டவர் நம்மை கொண்டு செல்வார்.

> **அவர் பிரசன்னத்தை நமக்குள் உணர்ந்து கொள்வதே உண்மையான கிறிஸ்துமஸ் கொண்டாட்டமாகும்.**

பகிர்தலில் மகிழ்ச்சியடைவோம்

எந்த ஒரு பண்டிகையானாலும் அங்கே சுவையான உணவு பிரதானமான இடத்தைப் பெறுகிறது. அதைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். நம்மை அழைத்தவர்களையும், நமக்கு அளிப்பவர்களையும் மட்டுமே நம் வீட்டுக்கு அழைத்து பண்டிகை காலங்களில் விருந்தளிக்கிறோம் அதற்குப் பதிலாக நமக்குத் திருப்பி கொடுக்க இயலாத ஏழைகளுக்கும், நம் இல்லங்களின் அருகில் பட்டினியால் வாடுபவர்களுக்கும் உணவை பகிர்ந்தளிப்பது அவர்கள் மனதைக் குளிர்விக்கலாமே? அதன் மூலம் ஆண்டவர் அகமகிழ்ந்து நம்மை ஆசீர்வதிப்பார். முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று முடிந்த உதவியை செய்து அவர்களை மகிழ்வித்து நாமும் மகிழ்வதே அர்த்தமுள்ள பண்டிகையாகும்.

நற்செய்தி அறிவியுங்கள்

மார்கழி மாத பனியில் மப்ளரால் தலையையும் காதுகளையும் மூடி, வீடுவீடாக சபையாரைத் தேடி, அவசரமாகப் பாடலொன்றைப் பாடி ஒரு சிறு ஜெபம் செய்து காணிக்கை வாங்கிச் செல்வது வாடிக்கையாகிவிட்டது. ‘இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்’ என்ற கிறிஸ்துவின் நற்செய்தி அதுவரை அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிராத மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஏன் நாமும்

ஆண்டவரைப் பற்றி அறியாத, அவரது அன்பை ருசிக்காத, பிறமதத்து சகோதர சகோதரிகளுக்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கக் கூடாது? வாலிப சகோதர, சகோதரிகளே! இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் கீதபவனியை சற்று வித்தியாசமாக செய்து பாருங்களேன். உங்கள் அருகிலுள்ள பிறமதத்து நண்பர்களின் வீட்டுக்குச் சென்று நற்செய்தி அறிவித்து இனிப்பு வழங்கி அன்பை பகிர்ந்து வாருங்கள். கிறிஸ்துமஸ் வாழ்த்து கூறுவதற்கும், நற்செய்தியை பகிர்ந்து கொள்வதற்கும் காணிக்கை வாங்குவது அவசியமா என யோசிப்போம். பல முயற்சிகளுக்குப் பிறகு கி.பி. 1903 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ரைட் சகோதரர்கள் பறக்கும் இயந்திரத்தை தரைக்கு மேல் செலுத்தி அதில் வெற்றி பெற்றனர். இந்த செய்தியைத் தங்கள் சகோதரியான கேத்தரினிடம் தந்தி மூலம் தெரிவித்தார்கள். "நாங்கள் 120 அடி உயரத்துக்குப் பறந்து விட்டோம். கிறிஸ்துமஸ்க்கு வீட்டுக்கு வந்து விடுவோம்" என கூறியிருந்தனர்.

கேத்தரின் உள்ளூர் பத்திரிக்கை ஆசிரியரிடம் சென்று அந்த செய்தியை காட்டினாள். அவர் ரைட் சகோதரர்கள் கிறிஸ்துமஸ்க்கு ஊருக்கு வரும் செய்தியை மட்டும் எடுத்துக்கொண்டு, 'மனிதன் பறக்கத் துவங்கிவிட்டான்' என்ற முக்கிய செய்தியை கவனிக்கத் தவறிவிட்டார். நாமும் அப்படித்தான். இயேசுவின் பிறப்பையும், அதன் நோக்கத்தையும் மறந்து விட்டு குடும்பத்தார் கூடி வருதல், விருந்துகள், அலங்காரங்கள், போன்ற கொண்டாட்டங்களையே பிரதானமாக நினைக்கிறோம். இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம் தவறானவையல்ல என்றாலும் கிறிஸ்துமஸ் என்பதன் உண்மையான அர்த்தத்தை மறந்து விட்டு கொண்டாட்டங்களை மட்டும் பிரதானமாகக் கொள்வது அர்த்தமில்லாதது.

கிறிஸ்துமஸ் என்பதன் உண்மையான அர்த்தத்தை மறந்து விட்டு கொண்டாட்டங்களை மட்டும் பிரதானமாகக் கொள்வது அர்த்தமில்லாதது.

சத்திரத்தில் இடமுண்டு

லண்டன் நகருக்கு அருகில் ஒரு சிறு கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்திய இரவு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த நாடகம் நடத்துவது வழக்கம். அந்த ஆண்டு புதிதாக வால்டர் என்ற இளைஞன் நாடகத்தில் சேர்ந்து நடிக்க விரும்பினான். அவனுக்கு சத்திரக்காரனாக நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அந்த கதாபாத்திரத்தில் நடிக்க அவனுக்கு விருப்பம் இல்லை. எனினும் நாடகத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தமைக்காக ஒப்புக்கொண்டான்.

யோசேப்பும், மரியாளும் சத்திரத்தில் இடம் கேட்க, "இடமில்லை" என சத்திரக்காரனாக நடித்த வால்டர் கூறினான். திரும்ப திரும்ப கெஞ்சி கேட்டபின் அவர்கள் திரும்பிப் போவதைப் பார்க்க பொறுக்காத வால்டர் "தயவு செய்து திரும்பி வாருங்கள் சத்திரத்தில் இடமுண்டு. என் அறையில் தங்குங்கள்.

இயேசு என் அறையில் பிறக்கட்டும்" என்று தன்னையும் அறியாமல் கூறிவிட்டான்.

நாடக அமைப்பாளர் 'சத்திரத்தில் இடமில்லை என கூறாமல் கதையையே கெடுத்துவிட்டாய்" என வால்டரைக் கண்டித்தார். நாடகத்தின் இறுதியில் கிராமத்துத் தலைவர் நடிகர்களைப் பாராட்டும்போது "ஒவ்வொரு ஆண்டும் இந்த நாடகத்தைப் பார்க்கிறேன். ஆனாலும் இந்த ஆண்டுதான் கிறிஸ்து பிறப்பின் முக்கிய செய்தியை விளங்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. வால்டரின் தவறு மூலமாக இயேசு நம்மில் பிறக்க இடம் கொடுக்க வேண்டும். என்ற முக்கியமான செய்தியை நாம் அறிந்து கொள்ள முடிந்தது" என்றார். இயேசு உலகில் பிறந்தார் என்பது உண்மை. இயேசு என்னில் பிறந்தார்' என்று கூறுவதே இரட்சிப்பின் நிச்சயம்.

இயேசு உலகில் பிறந்தார் என்பது உண்மை. இயேசு என்னில் பிறந்தார்' என்று கூறுவதே இரட்சிப்பின் நிச்சயம்.

சகமனிதரிடம் நாம் அன்பு கூறும் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு நிகழ்வும் ஆண்டவரை மகிழ்விக்கும் தருணங்கள். கிறிஸ்துமஸ் பாடல்கள் பாடி விருந்துண்பது மட்டும் கொண்டாட்டமல்ல. சகோதரி அன்பை பகிர்ந்து, தாழ்மை உடை அணிந்து, நற்செய்தியை அறிவித்து, ஒளியின் பிள்ளைகளாய், உள்ளத்தில் இயேசு பிறக்க இடம் தந்து உண்மையான அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுவோமா?

எல்லோருக்கும் நற்செய்தி

டிசம்பர் மாதம் வந்து விட்டால் நம் எல்லோர் மனதிலும் உற்சாகம் பிறந்து விடுகிறது. விசேஷ ஆராதனைகள், பாடல் நிகழ்ச்சிகள், மரவிழாக்கள், அலங்காரங்கள், விருந்துகள், புத்தாடைகள், பரிசுகள் என மாதம் முழுவதும் கொண்டாட்டம்தான். கிறிஸ்து இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த நாளை கிறிஸ்துமஸ் என்ற பெயரில் இவ்வுலகமே கொண்டாடி மகிழ்கிறது.

எல்லோருக்கும் நற்செய்தி

'கிறிஸ்துமஸ்' என்பதன் உண்மையான பொருள் ஈராயிம் ஆண்டுகளுக்கு முன் மந்தை மேய்ப்பருக்கு தேவதூதன் கூறிய வார்த்தைகளில் அடங்கியுள்ளது. "இதோ! எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:10,11) என்பதே அது. பெத்லகேமில் கூறப்பட்ட நற்செய்தி மேய்ப்பர்களுக்கு மட்டுமல்ல. இவ்வுலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவான நற்செய்தியாகும். அவர் "புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், இஸ்ரவேலருக்கு மகிமையாகவும் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது" என சிமியோன் கூறுகிறார் (லூக்கா 2:30.32) அன்னாள் என்ற எண்பத்து நான்கு வயதுடைய தீர்க்கதரிசியும் எருசலேமில் மீட்புண்டாக காத்திருக்கிற அனைவருக்கும் அவரைக் குறித்து சாட்சி அளிக்கிறாள் (லூக்கா 2:37,38) நாமும் கிறிஸ்து இவ்வுலக மக்கள் யாவருக்கும் இரட்சிப்புண்டாக பிறந்தார் என்ற நற்செய்தியை இவ்வுலகிற்குச் சொல்லுவோம்.

பிசாசின் பொல்லாத கிரியைகளை அழிக்கவும், உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனையும் பாவத்திலிருந்து விடுதலையாக்கவும் ஆண்டவர் இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தார். என்பதை அவரை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பது நம் கடமை. கிறிஸ்துமஸ் காலத்தில் நம் வீட்டையும், ஆலயத்தையும் சுத்தம் செய்து அலங்கரிக்கிறோம். நம் வீட்டைச் சுற்றியிருக்கிற

மக்களின் பாவ அழுக்கைப் போக்க ஆண்டவரின் பிறப்பின் நோக்கத்தை விசேஷமாக அறிவிக்கிறோமா? புத்தாடைகள் அணிந்து, மீட்பு என்னும் பரிசினை பெற்றுக் கொள்ள ஆண்டவரின் அன்பை அவர்களிடம் பகிர்ந்து கொள்வோம்.

எல்லோருக்கும் ஆண்டவர்

பிரபலமான உரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் பில்லி கிரஹாமின் மகள் ஆனி (Annie)யிடம் பேட்டி கேட்கப்பட்டது. "பரலோகம் செல்வதற்கு இயேசு மட்டும் தான் வழியென்று நம்புகிறீர்களா? இது மற்றவர்களுக்கு எவ்வளவு எரிய வெறுப்பை அளிக்கிறது தெரியுமா?" என்று கேட்டார். ஆனி எதையும் யோசிக்காமல் சட்டென்று பதிலளித்தார். "இயேசு தனிப்பட்ட மதத்திற்குரிய வரல்ல மீட்புக்காக யார் வேண்டுமானாலும் அவரிடம் வரலாம். உலகில் அதற்காகவே அவர் மனிதனாகப் பிறந்து சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்தார். உலகிலுள்ள எல்லோருக்குமான மீட்பர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்ற நற்செய்தியை வெளிப்படுத்துவதே கிறிஸ்துமஸ்" என்றார்.

> கிறிஸ்துவை அறியாதவர்களை ஆண்டவரிடம் வழிநடத்தும் விண்மீன்களா யிருப்போம்.

கிறிஸ்தவம் என்பது மேலை நாட்டு மதம் என்றும் கிறிஸ்தவர்கள் மேலை நாட்டு கலாசாரத்தைப் பின்பற்றுபவர்கள் என்ற தவறான எண்ணம் பலர் மனதில் ஓங்கியிருக்கிறது. அவர் எல்லோருக்கும் ஆண்டவர் என்பதை கிறிஸ்துமஸ் நன்னாளில் நாம் அறிவிக்க வேண்டும். "யூதர்களின் அரசனாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்று கேட்டு கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் ஆண்டவரை அறியாதவர்களாயிருந்தாலும் விண்மீனின் வழிகாட்டுதலால் தேவபாலனைக் கண்டு பணிந்து கொண்டார்கள். நாமும் கிறிஸ்துவை அறியாதவர்களை ஆண்டவரி டம் வழிநடத்தும் விண்மீன்களாயிருப்போம்.

எல்லோருக்கும் கொண்டாட்டம்

கிறிஸ்துமஸ் பண்டிகையை கிறிஸ்து நமக்காக மட்டும் தான் பிறந்தார் என்பது போல ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்தவர்கள் மட்டும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் கீதபவனி என்ற பெயரில் நள்ளிரவில் கிறிஸ்தவர்களின் வீடுகளின் கதவைத் தட்டி ஜானுக்கும், மேரிக்கும் 'கிறிஸ்து பிறந்தார்' என அறிவிப்பதோடு நிறுத்திவிடாமல் கிருஷ்ணன் வீட்டிற்கும், சீதா வீட்டிற்கும் சென்று ஆண்டவரின் அன்பை பகிர்ந்து, பாடல்பாடி இனிப்பு வழங்கலாமே? கிறிஸ்துமஸ் தினத்தன்று அண்டையில் வசிக்கும் இந்துக்கள், முகமதிய சகோதரர்களை நம் இல்லத்துக்கு அழைத்து விருந்தளித்து மகிழலா

மே?

ஏழை சிறுவர்களையும், சிறுமிகளையும் அழைத்து பேராயர் கால்டுவெல் அவர்களின் அருமை மகள்கள் இடையன்குடியில் கொண்டாடிய முதல் கிறிஸ்துமஸ் மர விழாவை நினைவு கூறுவோம். அக்கம் பக்கத்து ஏழை குழந்தைகளையும், புற மதத்து குழந்தைகளையும் அழைத்து கிறிஸ்துமஸ் மரவிழாவைக் கொண்டாடி, பரிசுகள் வழங்கி, ஆண்டவரின் அன்பை ருசிக்கச் செய்வோம். பாடல்களில் புரியாத வார்த்தைகளை நீக்கி எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும் படியாகப் பாடி, நமது கலாசாரத்துக்கு ஏற்ற ஆடல்பாடல்களால் கிறிஸ்துமஸ் விழாக்களை கொண்டாடுவோம். நம்மோடு அலுவலகங்களில் நிறுவனங்களில் பணிபுரியும் பிறமதத்தினருக்கு கேக் போன்ற இனிப்புகளை வழங்கி ஆண்டவரின் பிறப்பின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வோம் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த இதுவும் ஒரு சிறந்தவழி.

> **மாட்டுத் தொழுவத்தில் ஏழைக் கோலமெடுத்துப் பிறந்த பாலகனை ஏற்றித் தொழும் நாம் எளியவரை உதாசீனப்படுத்துவது ஏற்புடையதல்ல.**

உணவு, உடை, தங்குமிடம் இல்லாத எத்தனையோ ஏழை மக்கள் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பண்டிகை செலவுகளில் கொஞ்சத்தை மீதப்படுத்தி அவர்களுக்கும் புத்தாடை வாங்கிக் கொடுத்து விருந்தளித்து அதன்மூலம் ஆண்டவரையும் மகிழ்விக்கலாமே? பதில் செய்ய முடியாதவர்களுக்கு உணவளியுங்கள். உதவி செய்யுங்கள். மாட்டுத் தொழுவத்தில் ஏழைக் கோலமெடுத்துப் பிறந்த பாலகனை ஏற்றித் தொழும் நாம் எளியவரை உதாசீனப்படுத்துவது ஏற்புடையதல்ல. அனாதை விடுதிகள், மருத்துவமனைகள், சிறைக் கூடங்கள், முதியோர் இல்லங்கள் என எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் சென்று ஆண்டவரின் பிறப்பின் நற்செய்தியைப் பகிர்ந்து இந்த கிறிஸ்துமஸ் காலத்தைக் கொண்டாடுவோம்.

நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவரது முதலாம் வருகையைக் குறித்து இன்னும் அறியாதவர்கள் கோடிக்கணக்கானவர்கள் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரை அறிந்து கொள்ளும் வகையில் நம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் அமையட்டும். அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

"கிறிஸ்தவ மதத்தின் வெளிச்சமாயிருக் கிற கிறிஸ்துவை நான் கண்டு கொள்ள வில்லை. உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் வெளிச்சமாயிருக்கிற கிறிஸ்துவை நான் கண்டு கொண்டேன்."

- பண்டித ரமாபாய்

இதுதான் காதலா?

கல்லூரியில் கடைசி ஆண்டு படிக்கும் அழகான இளம்பெண் சாந்தியும், சுந்தரும் காதல் வானில் சிறகடித்துப் பறந்த பறவைகள். சுந்தர் அவள் கல்லூரியின் அருகில் ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரியும் இளைஞன். அடிக்கடி பஸ் ஸ்டாண்டில் சந்தித்து காதலை வளர்த்துக் கொண்டார்கள். கடிதங்களையும், பரிசுப் பொருட்களையும் பரிமாறிக் கொண்டார்கள். பூங்கா, கடைவீதிகள், திரையரங்குகள் என சுற்றித் திரிந்தனர்.

ஒரு நாள் சாந்தி அழுத கண்களோடு பதற்றமாகக் காணப்பட பதறிப்போன சுந்தர் என்னவென்று விசாரித்தான். அவனது பெற்றோர் வெளிநாட்டில் பணிபுரியும் இன்ஜினியர் மாப்பிள்ளையைத் திருமணம் செய்து கொள்ளக் கட்டாயப்படுத்துவதாகவும், மறுத்தால் தற்கொலை செய்துகொள்வோம் என்று மிரட்டுவதாகவும் கூறினாள். சுந்தரோ செய்வ தறியாது தவித்தான். 'கொஞ்ச நாள் பொறுத்துக்கொள். என் சகோதரியின் திருமணம் முடிந்ததும் உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன்' என கெஞ்சினான். அன்று போன சாந்தியை அவனால் பிறகு பார்க்க முடியவில்லை.

அந்த வெளிநாட்டு மாப்பிள்ளையை மணந்து கொண்டு சாந்தி விமானத்தில் பறந்துவிட, சுந்தரோ ஏமாற்றத்தின் விளிம்பில் புழுவாகத் துடித்தான். வாழ்க்கை அவனுக்கு சூனியமானது. ஏமாற்றத்திற்கு மறுபெயர்தான் காதலா?

அழிவுக்குப் பெயர்தான் காதலா?

விமலா கம்ப்யூட்டர் சென்டர் ஒன்றில் பணி புரியும் இளம்பெண். அவள் சம்பாதித்துதான் குடும்பத்தினரின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. தாய் கூலி வேலை செய்துதான் விமலாவைப் படிக்க வைத்தாள். கல்லூரியில் படிக்கும்

தம்பியையும், பத்தாம் வகுப்பு படிக்கும் தங்கையையும் படிக்க வைக்கும் பொறுப்பை இப்போது விமலா ஏற்றுக் கொண்டு உழைக்கிறாள். அமைதியான அவள் பாதையில் முள்ளை அள்ளி வீசினான் ஒரு பாவி. வேலை வெட்டியில்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்த அவனுக்கு விமலா மீது ஒரு தலைக் காதல். கண்ணில் விழுந்தவளைக் கடிதத்தால் வீழ்த்த நினைத்தான். காதல் என்ற மாயவலைக்குள் அவளை இழுக்க பல முயற்சிகளை மேற்கொண்டான். விமலா அவனைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை. தோல்வியை அவனால் தாங்க முடியவில்லை. தோல்வி வெறியாக மாறியது. ஆத்திரத்தில் அறிவையிழந்து அமிலத்தை விமலாவின் முகத்தில் வீசினான். அந்தோ பரிதாபம். முகம்வெந்து, கண்கள் குருடாகி வேதனையுடன் மருத்துவமனையில் போராடி பரிதாபமாக உயிரிழந்தாள். அந்த இளைஞனோ இப்போது சிறையில். விமலாவை நம்பி வாழ்ந்த குடும்பத்தினரின் பரிதாப நிலையை எண்ணிப்பாருங்கள். இப்படிப்பட்ட அழிவைத் தருகின்ற இழிவான செயலை காதல் என்று சொல்ல முடியுமா?

அவமானத்திற்கு பெயர்தான் காதலா?

பணம் படைத்த விஜியின் தந்தை, அவரைப் போலவே செல்வச் செழிப்புள்ள, கல்வியில் சிறந்த இளைஞனை தன் மகளுக்கு மணமகனாகத் தேர்ந்தெடுத்தார். மணநாளும் குறிக்கப்பட்டு அழைப்பிதழ்களும் அளிக்கப்பட்டன. நகைக் கடைக்கும், துணிக் கடைக்கும் அன்பு மகளை அழைத்துச் சென்று அளவில்லாமல் வாங்கி கொடுத்தார். உறவினர்கள் வந்து சேர திருமண வீடு களைகட்டியது. ஊரிலேயே பெரிய திருமணமண்டபத்தை விஜியின் தந்தை ஏற்பாடு செய்திருந்தார்.

'காதல்' என்ற பெயரில் குடும்பத்தினரை கண்ணீர்விடச் செய்பவர்கள் ஏமாற்றுபவர்களே.

திருமண மண்டபத்திற்கு எல்லோரும் மகிழ்ச்சியோடு புறப்பட்டுக் கொண்டிருக்க மணமகளையோ காணவில்லை. அவள் அறையிலுள்ள மேசையிலிருந்த ஒரு கடிதம் தாயின் கண்ணில்பட அலறித்துடித்தார். நகையோடும், பணத்தோடும், நீண்ட நாட்களாகக் காதலித்த எதிர்வீட்டுப் பையனோடு போய் திருமணம் செய்து வாழப் போவதாக அறிவித்திருந்தாள். அவமானத்தால் கதறித் துடித்த பெற்றோர் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக் கொள்ள, விஜியின் தங்கையோ அனாதையானாள். குடும்பத்தினரின் நிம்மதியைக் குலைத்து, வாழ்வை அழித்து அவமானத்தைத் தேடித் தரும் செயலுக்கு பெயர்தான் காதலா? இதுவரை கூறப்பட்ட சம்பவங்கள் எல்லாம் கதையோ, கற்பனையோ அல்ல. நிஜம். பெயர்கள் மட்டுமே கற்பனை.

ஏமாற்றாதே ஏமாறாதே

'காதல்' என்ற பெயரில் குடும்பத்தினரை கண்ணீர்விடச் செய்பவர்கள்

ஏமாற்றுபவர்களே, காதல் எனும் மாய வலையில் வீழ்ந்து, பெற்றோரை ஏமாற்றி உங்கள் வாழ்வில் ஏமாந்தும் போகாதீர்கள். பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் கூட காதல் என்ற பெயரில் வீட்டை விட்டு ஓடி அடுத்தவேளை சாப்பாட்டுக்குக் கூட வழியின்றித் தவிக்கிறார்கள். அந்தப் பையன் அவளை விட்டுவிட்டு ஓடிப்போகிறான். அந்தப் பெண்ணோ, ஏமாற்றப்பட்டு, திரும்ப வீட்டுக்குச் செல்ல முடியாமல், வாழவும் முடியாமல் சாவைத் தேடிக் கொள்கிறாள். அல்லது விபச்சாரத்தில் தள்ளப்படுகிறாள் கறிவேப்பிலையாகத் தூக்கி எறியப்படும் ஏமாளியாகி, நம்பிக்கை என்ற பெயரில் திருமணத்திற்கு முன் உடலைக் கறைப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

காதல் என்ற பெயரில் இளைஞர் உலகத்தை ஆட்டிப்படைக்கும் இந்த வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் காணப்படவில்லை. இதிலிருந்து காதலுக்கு எந்த மரியாதையும், முக்கியத்துவமும் கிடையாது என்பதை புரிந்து கொள்ளுங்கள். வெளிமான் வேட்டைக்காரன்கைக்கும், குருவி வேடன் கைக்கும் தப்புவது போல காதலுக்குத் தப்பித்துக்கொள்ளுங்கள் ஏற்றகாலத்தில் உங்கள் பெற்றோர் தேர்ந்தெடுத்துத் தரும் துணையோடு, திருமண பந்தத்தில் இணைக்கப்பட்டு கருத்தொருமித்து மகிழ்ச்சியாக வாழ வாழ்த்துக்கள்.

உன்னால் முடியும்...

விருப்பம் என்பது வெற்றிக்கான எரிபொருள். எல்லா கனவுகளும் விருப்பத்தில் இருந்து வெளிவந்தவைதான். கனவுகள்தான் விருப்பத்தை உருவாக்கி செயல்படத் தூண்டுகிறது.

ஊனமுற்றவர்கள் இப்பொழுதெல்லாம் மாற்று திறனாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர். ஊனமுற்றோர் பயனற்றவர்கள் அல்ல. நிறைவிற்குரிய நல்ல அம்சங்களைக் கொண்டு அவர்களும் அரிய சாதனை படைக்கிறார்கள். இருபத்து ஒன்பது ஆண்டுகள் மட்டும் இவ்வுலகில் வாழ்ந்த இளைஞரும், மிஷனெரியுமான டேவிட் பிரேனார்ட் பசியோடும், உடலில் உள்ள வியாதிகளினால் ஏற்பட்ட வேதனைகளின் மத்தியிலும் செவ்விந்தியர் மத்தியில் அவர் அற்புதமான ஊழியம் செய்தார். அவருடைய தியாக வாழ்க்கையையும், ஜெப ஜீவியத்தையும் பற்றி வாசித்து, அநேக நாடுகளிலுள்ள ஆயிரக்கணக்கான வாலிப பெண்களும், ஆண்களும் தங்களையும் அருட்பணிக்காய் அர்ப்பணித்துக் கொண்டனர்.

திக்குவாயும், மந்த நாவும் உள்ள மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் மக்களை ஆண்டவர் கானான் தேசம் வரை கொண்டு செல்லவில்லையா? உங்களில் யாராவது மாற்றுத் திறனாளிகளாயிருந்தால் குறையைப் பற்றி சஞ்சலப்படாதீர்கள். வேறு நல்ல கிருபையையும், அனுக்கிரகங்களையும், தாலந்துகளையும் ஆண்டவர் தந்திருப்பதற்காக நன்றி கூறி, அதன் மூலம் நீங்களும் அரிய காரியங்களைச் செய்ய முடியும்.

தாழ்வு மனப்பான்மையை விடுங்கள்

நம்முடைய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும்/மிகப்பெரிய தடை தாழ்வு மனப்பான்மையே. நான் அழகாய் இல்லை, நான் கருப்பாயிருக்கிறேன், நான் ஏழை, என்னிடம் எந்த தாலந்தும் இல்லை என்று மண்ணுக்குள் முகம் புதைத்து வாழும் தீக்கோழியா நீங்கள்? அற்பமான தாவீது, ஆடு மேய்த்த தாவீது ஆண்டவரால் அரசனாக்கப்பட்டானே? எளியவராயிருந்த ஆபிரகாம் லிங்கன் தாழ்வு மனப்பான்மையால் துவண்டு போகவில்லை. வேதத்தை பலமுறை வாசித்து தானும் ஓர் உயர்ந்த நிலைக்கு வர முடியும் என்ற உண்மையைக்

கண்டு கொண்டார். தேவன் அவரை அமெரிக்க நாட்டின் தலைவராக்கினார். தாழ்வு மனப்பான்மையை விட்டொழித்தால் நீங்களும் உலகம் போற்றும் மனிதராகலாம். எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்தும் தேவன் உங்களையும் உயர்த்துவார்.

தோல்வியே வெற்றிக்கு முதல்படி

உயர்ந்த மலை சிகரத்தை எட்ட நினைத்தவர்கள் உடனே உச்சத்தைத் தொட்டு விட முடியாது. பலமுறை தோற்ற பின்னரே சிகரத்தின் உச்சியில் கொடியை நாட்ட முடியும்.

ராபர்ட் ப்ரூஸ் என்ற மன்னன் எதிரிகளிடம் பல முறை தோற்றுப் போனான். இனி எதிர்காலமே தனக்கு இல்லை என்று முடிவு செய்தான். அவன் ஒரு குகையில் இருந்தபோது சிலந்தி ஒன்று ஆறுமுறை வலை பின்னுவதில் தோல்வியுற்று, ஏழாவது முறை வெற்றியாக வலை பின்னியதைக் கண்டு தானும், முயற்சி செய்வோம் என புறப்பட்டான். போரில் வெற்றியும் கண்டான். மோசே ஒன்பதுமுறை பார்வோனுக்கு முன் நிற்க வேண்டிய சூழ்நிலை வந்தபோதும் மனந்தளரவில்லை. பத்தாவது முறை வெற்றிகண்டார்.

> பலமுறை தோற்ற பின்னரே சிகரத்தின் உச்சியில் கொடியை நாட்ட முடியும்.

பரீட்சையில் தோல்வியா? அத்தோடு வாழ்க்கை முடிந்துவிடவில்லை. நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற முடியவில்லையா? கவலையைவிடுங்கள். இதைவிட நல்ல வாய்ப்பை நீங்கள் பெறமுடியும். முயற்சியைக் கைவிடாமல் முன்னேறும் வழியைக் கண்டு பிடியுங்கள். இயேசுவை உங்கள் நண்பராக்கிக் கொள்ளுங்கள். உங்களாலும் சாதிக்க முடியும்.

விசுவாசத்தால் எல்லாம் கூடும்

இந்த உலகில் முடியாது என்று கூறுபவர்கள் பலர் அதனாலேயே அவர்கள் வாழ்க்கையில் தோற்றுப் போகிறார்கள். ரைட் சகோதரர்கள் வானில் பறந்து காட்டும் வரை அது முடியாத காரியம்தான் வானொலி, தொலைக்காட்சி, கம்ப்யூட்டர், தொலைபேசி போன்ற மின்சாதனங்கள் கண்டுபிடிக்கப்படும் வரை இவை யெல்லாம் எட்டாத கனவுகளாகத்தான் இருந்தது. ஆனால் நம்பிக்கையோடு முயற்சியும் சேர்ந்தபோது இவையெல்லாம் சாத்தியமானது.

கோலியாத்தை எவராலும் வெல்ல முடியாது என்றுதான் நினைத்தார்கள். வாலிபனான தாவீது ஆண்டவர்மேல் வைத்த விசுவாசத்தால் 'என்னால் முடியும்' என்றான். வீழ்த்தி வென்றான் சாத்தான் வாலிப உள்ளங்களில் 'முடியாது' என்ற அவிசுவாச விதைகளை விதைக்க முயல்கிறான். இவ்வுலகில்

நேர்மையாய், ஒழுக்கமாய் வாழ முடியாது என்ற சிந்தனைகளை உங்களுக்குள் வளர விடுகிறான். ஆண்டவரை நம்பி எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு பரிசுத்த வேதத்தின் சிறந்த கதாபாத்திரங்களாக விளங்கிய மோசே, யோசுவா, எஸ்தர், யோசேப்பு, தாவீது, தானியேல் போன்ற விசுவாச வீரர்களை முன்மாதிரியாக கொள்ளுங்கள். விசுவாசத்தால் உங்களால் எதையும் செய்ய முடியும்.

படிகளில் ஏறுங்கள்

என் மகனின் பேஸ்புக்கிலிருந்து நான் கண்டெடுத்த தயக்கங்களை உடைத் தெறியும் வெற்றிக்கான படிகளை, தம்பி, தங்கையரே உங்களுக்கும் அறிமுகம் செய்கிறேன். உங்களாலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்குள் துளிர்விடட்டும்.

முதல்படி : நான் இதில் ஏறமாட்டேன். (I can not) பிடிவாதம்

இரண்டாம் படி : ஏறுவதற்கு விருப்பம்தான். ஆனால் என்னால் முடியாது தாழ்வு மனப் பான்மை, முயற்சியின்மை, சோம்பேறித்தனம் எந்த காரியத்தையும் செய்யவிடாது.

மூன்றாவது படி : ஏறுவேன். ஆனால் பயமாய் இருக்கிறது. எவ்வளவு காலம் இரு நினைவுகளால் குந்தி குந்தி நடப்பீர்கள். பயமும், அவிசுவாசமும் எதையும் சாதிக்க விடாது. முயற்சி செய்ய வேண்டும்.

> **விசுவாசத்தால் உங்களால் எதையும் செய்ய முடியும்.**

நான்காம் படி : எப்படி ஏறுவது? யோசிக்கிறேன். வாழ்க்கையில் எப்படி முன்னேறுவது என திட்டமிட்டு செயலாற்றுங்கள். நல்ல முடிவுகளை எடுக்க வேண்டிய நேரத்தில் எடுங்கள். (How can I do this)

ஐந்தாம் படி : ஏற ஆரம்பித்துவிட்டேன். சிந்திக்க ஆரம்பித்தவுடன் செயல்படுத்துங்கள். தாமதிக்காதீர்கள். நல்ல முடிவுகளால் வாழ்க்கையில் வெற்றி யைக் கொண்டு வரமுடியும்.

ஆறாம் படி : நான் வேகமாக இந்தப் படிகளில் ஏறி உச்சத்தை அடைந்து விடுவேன். (I will do this)

நான் இதைக் கண்டிப்பாக செய்து விடுவேன் என்ற உறுதியான முடிவை தன்னம்பிக்கையோடு வாழ்வின் சரியான நேரத்தில் எடுத்து வெற்றியை பெறுவேன். என்று செயல்பட ஆரம்பித்து விட்டீர்களா? வாழ்த்துக்கள்.

ஏழாம்படி: இதோ ஏறிவிட்டேன் (I did it)

தாழ்வு மனப்பான்மையை விட்டொழித்து, பயத்தை புறம்பே தள்ளி, திட்டமிட்டு செயலாற்றி, ஆண்டவரின் துணையோடு வாழ்க்கைப் படகில் ஏறி வெற்றி என்னும் உச்சத்தை அடைய உங்களால் முடியும். தம்பி தங்காய்.

சாதனைகள் தீர்மானத்தினாலும், திட்டமிடுதலி னாலும் நிகழ்த்தப்படுகிறது. துணிவோடும், நம்பிக்கையோடும், உழைப்பவர்களால்தான் சாதிக்க முடியும். மனிதனால் செய்ய முடியாது என்பதை செய்து முடிக்க ஆண்டவரின் துணை மிக மிக அவசியம்.

வாலிப நாட்களை வசந்த காலமாக்க வாலிபர்களே உங்களால் முடியும். சாம்பலிலிருந்து எழும் பீனிக்ஸ் பறவைபோல, வாழ்க்கை வானில் சிறகடித்துப் பறக்க உங்களால் முடியும். இலக்கை நோக்கிப் பயணித்து வெற்றிக் கரையை அடைய உங்களால் முடியும். மரணத்தை ஜெயமாக விழுங்கிய இறைமகன் இயேசுவின் துணையோடு இவ்வுலகில் நீங்கள் வெற்றி சிறக்க வாழ்த்துக்கள். வாலிப தோழர்களே! தோழியரே!!

உயிர்த்தெழுதலின் மகிமை

கிறிஸ்தவம் என்பது ஓர் உயிர்த்தெழுந்த நம்பிக்கையின் சாரம் என ஜான்ஸ்டோட் என்பவர் கூறியுள்ளார். உயிர்த்தெழுதலின் தத்துவத்தை எடுத்துவிட்டால் கிறிஸ்தவம் அழிந்துவிடும். இயேசுவின் மரணத்தோடு அவர் வரலாறு முடியவில்லை. "அவர் உயிர்த்தெழுந்தார்" என்பதே வரலாறு காணாத அதிசயம். நீதியுள்ள கிறிஸ்து அநீதியுள்ள மனிதருக்காய் பாடுபட்டு, மரித்து உயிர்த்தெழுந்தார். இரட்சகரின் உயிர்த்தெழுதல் பாடுகளுக்குப்பின் மகிமை உண்டென்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

உயிர்த்தெழுதலின் வல்லமை

ராக்பெல்லர் என்பவர் உலகின் மிகப்பெரிய பணக்காரர் என்பதை எல்லோரும் அறிவோம். அவரது ஐம்பதாவது வயதில் மிகவும் நோய்வாய்ப்பட்டார். தலை முடியெல்லாம் கொட்டிப்போய், என்ன வியாதி என்றே மருத்துவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. உண்ணமுடியாமல், உறங்க முடியாமல் அவதியுற்றார். யாரையும் பார்க்க அவர் விரும்பவில்லை.

மிகுந்த துயரத்தில் இருந்த அவரை ஒருநாள் ஒரு தேவ ஊழியர் சந்தித்து 'உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவருக்குப் புதுவாழ்வு கொடுக்க வல்லமை உள்ளவர் என்பதையும். சகலத்தையும் அவர் புதிதாக்குவார்' என்றும் கூறினார். அவரை ஓடஓட விரட்டியடித்தார் ராக்பெல்லர்.

நோயின் வேதனையோடு நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் ராக்பெல்லருக்கு அந்த தேவ ஊழியரின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை மட்டுமே தன்னை இந்த துன்பத்தி லிருந்து விடுவிக்க முடியும் என

நம்பினார். மரணபயம் போய் நம்பிக்கை துளிர்விட்டது. ஆண்டவரை பற்றிப் பிடித்துக் கொண்டபோது அவரது நோயின் தாக்கம் குறைந்தது. உணவு உண்ண வும், தூங்கவும் செய்தார். நோய்முற்றிலும் குணமானதும் தன் செல்வத்தை ஏழை மக்களுக்கு வாரி வழங்கினார். ஒரு வருடம் மட்டுமே உயிரோடிருப்பார் என்று மருத்துவர்களால் கணிக்கப்பட்ட ராக்பெல்லர் 98 வயதுவரை உயிர்வாழ்ந்தார்.

'ஆண்டவரின் உயிர்த்தெழுந்த வல்லமை எனக்குப் புதுவாழ்வு தந்தது. எனக்குள் ஜீவனை உருவாக்கிற்று' என்று சாட்சி பகிர்ந்தார். நம் வாழ்விலும் பலவிதமான துன்பம், துயரம், சோதனைகள் வரும்போது உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வல்லமையினால் புதுவாழ்வு உண்டு என நம்புவோம். ஆண்டவர் வல்லமையாய் நம் வாழ்வில் கிரியை செய்வார்.

உயிர்த்தெழுதலின் நம்பிக்கை

> நம் இதயக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் இயேசுவுக்கு உள்ளத்தில் அமர்ந்து ஆளுகை செய்ய இடம் கொடுப்போம்.

வாழ்க்கையில் ஏற்பட்ட பல சோதனைகளாலும், நெருக்கங்களினாலும், துன்பங்களினாலும் நம்பிக்கையிழந்தவராய், சோர்வுடன் நடந்து கொண்டிருந்த ஞா.சாமுவேல் ஐயரவர்கள் கீழே கிடந்த ஒரு துண்டு காகிதத்தை எடுத்தார். அதில் 'என் மீட்பர் உயிரோடிருக்கிறார்' என்ற வாசகம் காணப்பட்டது. வீடு வந்து சேர்ந்த ஐயரவர்கள் இந்த வசனத்தைத் தியானித்தவராக 'என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்கென்ன குறைவுண்டு, நீ சொல் மனமே' (கி.கீ. 208) பாடலை எழுதினார். நம்பிக்கையான இந்த வார்த்தைகளை யோபுவும் பயன்படுத்தினார்.

பாவக்கடலில் மூழ்கித் தவித்துக் கொண்டிருக்கும் என்னை மீட்க யாரும் இல்லை என வருந்திக் கொண்டிருக்கிறீர்களா? துன்பம், துயரம், சோதனைகளில் சிக்கித் தவிக்கிறீர்களா? உயிரோடிருக்கும் மீட்பர் ஒருவர் எனக்குண்டு என்று நம்புவோமானால் அவர் நம்மை மீட்டுக் கரைசேர்ப்பார். கண்ணீரையெல்லாம் துடைத்து கடைசிமட்டும் கைவிடாதிருப்பார்.

ஆண்டவரின் மரணத்திற்குப் பின் கலங்கி நின்ற அவரது சீஷர்கள் அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின் உலகத்தைக் கலக்குகிறவர்களாக மாறிப்போனார்கள். ஆண்டவர் நம்மோடிருக்கிறார் என்ற நம்பிக்கையில் அவர்கள் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள். நமக்குள்ளும் இந்த நம்பிக்கை துளிர்விட வேண்டும். நம் இதயக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் இயேசுவுக்கு உள்ளத்தில் அமர்ந்து ஆளுகை செய்ய இடம் கொடுப்போம். உயிர்த்தெழுந்த ஆண்டவர் ஒருபோதும் நம்மை கைவிடார்.

உயிர்த்தெழுதலும் மனமாற்றமும்

பவுல் படித்தவர், பணம் படைத்தவர். ஆனால் அவர் வாழ்க்கை வெற்றிகரமாக இல்லை. ஒருநாள் ஆண்டவரை சந்தித்தார். நீர் யார்? என்று கேட்டார்.

‘நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே’ (அப். 9:5) என்றார். அவ்வளவுதான் அவர் வாழ்க்கை அடியோடு மாறிற்று. முழு உலகமும் சென்று சுவிசேஷம் அறிவிக்கும் அளவிற்கு மனமாற்றமடைந்தார்.

வாலிபத் தோழர்களே! தோழிகளே நீங்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவரை இதுவரை ஏற்றுக் கொள்ளாமல், முரட்டாட்டம் உள்ளவர்களாய் பாவ சேற்றில் அமிழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? இப்பொழுதே ‘ஆண்டவரே! நீர் எனக்காக மரித்து, உயிர்த்தீர். உம்மை ஏற்றுக்கொண்டு, உமக்காக வாழ விரும்புகிறேன். என்னை ஏற்றுக்கொள்ளும் என்று ஜெபியுங்கள்.

உயிர்த்தெழுதலும் நற்செய்தியும்

ஆண்டவரின் மரணத்திற்குப்பின் பயந்து நடுங்கினவர்களாக, பின்மாற்றம் அடைந்தவர்களாக, நம்பிக்கையற்று, சந்தேகம் கொண்டவர்களாக இருந்தவர்களை உலகத்தை சுவிசேஷத்தால் கலக்குகிறவர்களாக அவரது உயிர்த்தெழுதலுக்குப்பின் மாற்றினார். அதிகாரத்திற்கு அஞ்சி, பதவியாளர்களுக்குப் பயந்திருந்த அவரது சீஷர்கள் உயிர்த்தெழுதலுக்குப் பின் தைரியமாக வெளியே வந்து ‘இயேசு உயிர்த்தெழுந்தார்’ என வீரமுழக்க மிட்டனர். மனமாற்றம் தைரியத்தையும், இயேசுவை நற்செய்தியாக அறிவிக்கும் ஆற்றலாகவும் மாறியது. நாம் ஆண்டவரின் உன்னதமான பணிக்காக இவ்வுலகில் படைக்கப் பட்டிருக்கிறோம். சுவிசேஷ விதைகளை நாடெங்கும் தூவி சாட்சிகளாக வாழ்வோம்.

> **சுவிசேஷ விதைகளை நாடெங்கும் தூவி சாட்சிகளாக வாழ்வோம்.**

புரட்டப்பட்ட கல் உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிவிக்கிறது. திறக்கப்பட்ட கல்லறை அவர் உயிரோடெழுந்த உண்மையை உலகுக்கு உரக்கச் சொல்கிறது. இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை உலகமெங்கும் கொண்டாடும் வேளையில் இயேசுவை அறியாத பலகோடி மக்களுக்கு ஆண்டவரின் அன்பை எடுத்துச் சொல்லுவோம். சீஷர்களோடு எம்மாவு ஊருக்கு நடந்துபோன ஆண்டவர் நம் வாழ்க்கைப் பாதையிலும் நம்மோடு வருவார் என்ற விசுவாசத்தோடு அவரது கரங்களைப் பிடித்துக் கொள்வோம்.

‘கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம் விசுவாசத்திற்கு ஆதாரம்’ - ஜேம்ஸ் ஸ்டூவர்ட்

கல்வி என்பது யாதெனில்...

...ாகத்தோடு கற்றுக்கொள்வதே கல்வி

...கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகளவு' என்பது பழமொழி. ...ஞர்களும், ஞானிகளும், வாழ்க்கையில் வெற்றியடைந்தவர்களும் ...வாழ்நாளின் இறுதிவரை கற்றுக்கொண்டேயிருக்கும் பழக்கத்தை ...வர்களாக இருக்கிறார்கள். யாரும் பிறக்கும்போதே கல்விமானாகப் ...ல்லை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்து, ...வின் முதல் குடிமகனாக உயர்ந்த அப்துல்கலாம் கற்ற கல்வியே ...உயர்வுக்குக் காரணமாயிருந்தது. கற்றுக் கொள்ள தாகம் வேண்டும். ...டத்திலிருந்து கூட நாம் கற்றுக் கொள்ள முடியும் (நீதி. 6:6) ...சாலமோன் ஞானி கூறுகிறார். "கர்த்தராகிய ஆண்டவர்... காலை ...என்னை எழுப்புகிறார், கற்றுக் கொள்ளுகிறவர் களைப்போல, ...டகும்படி என் செவியை கவனிக்கச் செய்கிறார்". (ஏசாயா 50:4) ...லும் கல்லூரியிலும் கற்பதோடு கல்வி முற்றுப் பெறுவதில்லை. ...கையின் ஒவ்வொரு நாளும் நாம் புதிதாக ஏதாவது ஒன்றை கற்றுக் ...டேயிருக்க வேண்டும்.

...கங்களை வாசியுங்கள்

... போன்ற புதிய தொழில் நுட்பகாலத்தில் கல்வியும் அவற்றின் ...கொண்டே கற்பிக்கப்படுவதால் புத்தகங்களைப் படிப்பதும், ...தும் ரண்டாம்பட்ச மாகத் தான் காணப்படுகிறது. நல்லதரமான, ...வைப் பெருக்கக் கூடிய புத்தகங்களைத் தேடிப்பிடித்து வாசியுங்கள். ... அறிவியல், பொது அறிவு, மிஷினெரியின் வாழ்க்கை ... போன்றவை உலக ஞானத்தையும், ...ஞானத்தையும் வளர்த்துக் கொள்ள ...கின்றன. ஞாபகசக்தியை ...த்துக்கொள்ள புத்தகம் ...மிகவும் தேவை நமது ...க்கும் மூளைக்கும் ... நரம்புகளைவிட, ...கண்களுக்கும் ...க்கும் இணை

யாக உள்ள நரம்புகள் 20 மடங்கு பலமானவை. எனவே கண்களை நன்கு திறந்து வாசிக்கும்போது நாம் படிப்பவை நன்கு ஞாபகத்தில் இருக்கும்.

பெரிய அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், அறிஞர்கள், வாழ்நாள் முழுவதும் புத்தகங்கள் வாசிப்பதில், அவற்றைப் பாதுகாப்பதில் ஆர்வம்காட்டினர். தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் திரு.அண்ணாதுரை புற்றுநோயால் அவதிப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும்போதும் புத்தகங்கள் வாசித்தபடியே இருந்தார். அன்று அவருக்கு அறுவை சிகிச்சை நடப்பதாக இருந்தது. ஆனால் அந்த அறுவை சிகிச்சையை மறுநாளுக்கு மாற்றி வைக்கும்படி மருத்துவரிடம் வேண்டி கேட்டுக் கொண்டார். ஏன் தெரியுமா? அவர் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வாசித்து முடிப்பதற்காகவே அவ்வாறு கூறினார்.

பவுல் தன் இறுதி நாட்களில் “நான் வைத்து வந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாக தோல் சுருள்களையும் நீ வருகிற போது எடுத்துக் கொண்டு வா” (2 தீமோ. 4:13) என்று கூறுகிறார். புத்தகங்கள் அறிவுச் சுரங்கங்கள் அதிலிருந்து அள்ள அள்ளக் குறையாத ஞானத்தைப் பெற்று, பொது அறிவுப் போட்டிகளிலும், போட்டித் தேர்வுகளிலும் வெற்றி பெறுங்கள்.

பெரிய அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், அறிஞர்கள், வாழ்நாள் முழுவதும் புத்தகங்கள் வாசிப்பதில், அவற்றைப் பாதுகாப்பதில் ஆர்வம் காட்டினர்.

பெற்றோரை கனம் பண்ணுங்கள்

பாஸ்கர் என்ற வாலிபன் கல்லூரி இறுதியாண்டு படித்து வந்தான். கூலித்தொழிலாளியாகிய அவனது தந்தை அவனை மிகவும் கஷ்டப்பட்டு இரவும் பகலும் உழைத்து ஓடாய்த் தேய்ந்து படிக்க வைத்தார். ஒருநாள் கல்லூரி முதல்வர் அவரது தந்தையை அழைத்து வரும்படி கூறினார்.

கூலித்தொழிலாளியை தந்தை என்று சொல்லிக் கொள்ள விரும்பாத அவன், தன் தந்தை தொழில் நிமித்தம் வெளியூர் போயிருப்பதாகவும், திரும்பிவர ஒரு மாதமாகும் என்றும் கூறினான். கல்லூரி முதல்வர் ‘உன் தந்தை கூலித்தொழிலாளி என்று யாரோ கூறியதால் வெளிநாட்டிலுள்ள ஒரு சமூக சேவை நிறுவனம் மூலம் ஒரு பெருந்தொகை ஒன்றை உதவித் தொகையாக பெற்றுத்தரவே உன் தந்தையை அழைத்து வரச் சொன்னேன். இனி அதை தேவையுள்ள வேறு ஒரு மாணவனுக்கு கொடுத்துவிட சொல்கிறேன்” என்று கூறினார்.

பெற்றோரின் உழைப்பு, பணத்தைக் கொண்டு படித்து, வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வந்தபின் பெற்றோர் என்று சொல்லவே வெட்கப்படுகிறார்கள். பெற்றோரை அனாதையாக்கிவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். **அணைத்து வளர்த்த தாயையும், உழைத்து வளர்த்த தந்தையையும் ஒருபோதும் அசட்டை பண்ணாதீர்கள்.** கல்வி மனிதனைப் பண்படுத்தவே தவிர யாரையும்

பண்படுத்துவதற்கில்லை. இளைஞர்களே பெற்றோரை கனம் பண்ணும்போது ஆண்டவரும் உங்களை கனம்பண்ணுவார்.

ஆண்டவரை சார்ந்து கொள்ளுங்கள்

தானியேலுக்கும், அவனது மூன்று வாலிப நண்பர்களுக்கும் பாபிலோன் நாட்டின் அறிவையும், அனைத்து இலக்கியத்தின் தேர்ச்சியையும், ஞானத்தையும் அருளினார். மற்றவர்களை விட அவர்கள் பன்மடங்கு கெட்டிக்காரர்களாக இருந்தனர். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் மெய்யான தேவனுக்குக் கீழ்படிந்து அவரைப்பற்றிப் பிடித்ததுதான். நாட்டிற்காக ஜெபிக்கும் திருச்சபைகள், திருச்சபை வாலிபர்களின் கல்வி வளர்ச்சிக்காக, எதிர்காலத்தில் மோசேயைப்போல, யோசேப்பைப்போல தலைவர்களாக, தானியேலைப்போல ஞானத்தில் சிறந்துவிளங்க ஜெபிக்க, உதவ வேண்டும்.

> கல்வி மனிதனைப் பண்படுத்தவே தவிர யாரையும் புண்படுத்துவ தற்கில்லை.

மேற்படிப்பில் விரும்பிய பாடப்பிரிவு கிடைக்கவில்லையா? ஆண்டவர் சித்தம் என எண்ணி கிடைத்த படிப்பில் கவனம் செலுத்தி படியுங்கள். உங்களுக்கென்று ஒளிமயமான எதிர்காலத்தை தருவார். தினசரி ஜெபித்து வேதம்வாசித்து ஆண்டவரோடு நெருங்கி வாழும்போது நண்பர்களின் தீய பழக்கங்கள் உங்களைத் தொற்றிக் கொள்ளாது.

தேர்வு நேரத்தில் டிவி பார்த்து, நண்பர்களோடு அரட்டை அடித்துவிட்டு, தேர்வில் தோல்வியுற்றால் தினமும் வேதம் வாசித்தேன், ஜெபித்தேன், ஆண்டவர் என்னை கைவிட்டுவிட்டார் என்று சொல்வதில் அர்த்தமில்லை. குதிரை யுத்த நாளுக்காக ஆயத்தமாவதுபோல தேர்வுக்கு நன்றாக தயார் செய்யுங்கள். ஜெயம் கர்த்தர் தருவார். தேர்வு நேரத்தில் மட்டுமல்ல, எப்போதும் ஆண்டவரை சார்ந்து கொள்ளுங்கள்.

சாலமோன் ராஜா பொன்னையும், பொருளையும் கேட்காமல், ஞானத்தைத் தாரும் என்று கேட்டபோது ஆண்டவர் அவனது வேண்டுதலில் பிரியப்பட்டு, ஞானத்தோடு அவன் கேட்காத செல்வத்தையும் கொடுத்து ஆசீர்வதித்தார். ஆடு மேய்த்த கல்வியறிவில் குறைவுபட்டிருந்த தாவீது ஆண்டவருக்குப் பிரியமானவனாக நடந்து கொண்டதால், அரசாளும் பாக்கியத்தை கொடுத்தார். நல்ல இருதயத்தை எனக்குத் தாரும் என்று ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். அப்போது ஆண்டவர் நல்ல கல்வி, நல்ல வேலை, செல்வம் ஆகியவற்றால் உங்களை ஆசீர்வதிப்பார்.

உயர்கல்வி மட்டுமே வாழ்வில் உயர்வைக் கொண்டு வராது. உழைப்பு, தேவ பயம், நல்ல பண்புகள் ஆசீர்வாதங்களை கொண்டுவரும். ஆசிரியரால் மந்த புத்தியுடையவன்' என்று ஆரம்பப்பள்ளியிலிருந்து வெளியேற்றப்

பட்டவரே ஐன்ஸ்டீன் என்னும் மாபெரும் விஞ்ஞானியாவார் நான்கு வயதில் செவிட்டுத் தன்மையோடு 'அறிவில்லாதவன்' என்று ஒதுக்கப்பட்ட தாமஸ் ஆல்வா எடிசன் 1000க்கும் மேற்பட்ட பொருட்களை கண்டுபிடித்த சென்ற நூற்றாண்டின் மிகப்பெரிய ஞானியாவார். கல்லூரியில், விடுதியில் நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆசிரியரை மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பெற்றோர் தொடர்பு எல்லைக்குள் எப்போதும் இருங்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

பின்னிட்டு பாராதே...

நாங்கள் எப்பக் கத்திலும் நெருக்கப்பட்டும், ஒடுங்கிப் போகிறதில்லை. கலக்கமடைந்தாலும், மனமுறிவடைவதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. (2 கொரி. 4:8,9) என்பதே பின்னிட்டுத் திரும்பாத வெற்றியாளர் மனநிலை. ஒருபோதும் எதிலிருந்தும் பின்வாங்குவதில்லை என்ற தீர்மானத்தோடு முன்னேறும் போது எந்தத் தடையையும் நாம் தாண்ட முடியும். விடாமுயற்சி உடையவர்கள் ஒருபோதும் பின்னிட்டுப் பார்ப்பதில்லை.

உலகம் பின்னிட்டுப்பார்க்க வைக்கிறது

உலக இச்சைகள், சிற்றின்பங்கள், உலகப்பிரகார ஆசீர்வாதங்கள் நம்மை தன்னோக்கி இழுக்கிறது. அவற்றை விட்டுவிட்டு முன்னேறிச் செல்வோமானால் ஆண்டவர் நமக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை அள்ளிக்கொள்ள முடியும்.

குட்டி குரங்கு ஒன்று பரலோகத்திற்குச் செல்ல ஒரு முனிவரிடம் சென்று வழி கேட்டது. முனிவர் ஒரு வாழை பழத்தை அதன் கையில் கொடுத்து இன்று மாலை என்னை வந்துபார். அதுவரை இந்தப் பழத்தைப் பத்திரமாக வைத்துகொள். மாலையில் இந்தப் பழத்தைக் கொண்டுவா" என்று கூறினார். குட்டி குரங்கு வாழைப்பழத்தைப் பலமுறை திருப்பித் திருப்பி பார்த்தது. அதனால் ஆசையை அடக்க முடியுமா? நாக்கில் நீர் ஊறியது. மெதுவாக அதை உரித்துப் பார்க்க ஆசை வந்தது. ஆசையை அடக்க முடியாமல் பழத்தை மெதுவாக உரித்து கொஞ்சமாக ரசித்து சாப்பிட்டு முடித்தது. மாலையில் குட்டி குரங்கு முனிவரிடம் போகவில்லை.

நாமும் இந்தக் குட்டிக் குரங்கைப் போலத்தான் இருக்கிறோம். ஆண்டவரிடம் நெருங்கிச் செல்ல வேண்டும். பரலோக வாழ்வைப் பெற வேண்டும் என்ற

ஆசை நம் எல்லோருக்கும் உள்ளது. ஆனால் உலக சிற்றின்பங்கள், போதைப் பழக்கங்கள், பணம், பதவி, மதுபானம் போன்றவை பின்னோக்கி இழுத்துச் செல்கின்றன. உலக பாடுகளால் நெருக்கப்படும்போதும் ஆண்டவரை விட்டுத் திரும்பி பின்னால் போய் விடுகிறோம். "உன்னால் பரிசுத்தமாக வாழ முடியாது. இந்த உலக இன்பங்களை விட்டு உன்னால் இருக்க முடியாது" என்று சாத்தான் பலமுறை கூறி நம்மை பின்னிட்டுப் பார்க்க வைக்கிறான்.

எத்தனை நிந்தைகள், சோதனைகள், துன்பங்கள், வேதனைகள் அடைந்தாலும் "என் இருதயம் தேவனை விட்டுப் பின்வாங்கவில்லை" என்று சங்கீதக்காரன் கூறுவதைப் போல நாமும் கூற முடியுமா? யோபு மிகுந்த உபத்திரவங்களின் மத்தியிலும் ஆண்டவர் மேல் வைத்த நம்பிக்கையிலிருந்து பின்வாங்கவில்லை. அதனால் அவர் இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்.

கலப்பையில் கைவைத்த பின்

ஒரு மனிதன் இயேசுவை நோக்கி "ஆண்டவரே! உம்மைப் பின்பற்றுவேன். ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருப்பவர் களிடம் சொல்லிக் கொண்டு வரும்படி எனக்கு உத்தரவு தர வேண்டும்" என கேட்டான். அதற்கு இயேசு "கலப்பையில் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்றார். (லூக்கா 9:61,62) ஆண்டவரை நம்பி வந்த பிறகு உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஏற்புடையதல்ல.

> "கலப்பையில் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல"

ஹென்றி மார்ட்டின் என்ற இளம் வாலிபர் ஸ்காட்லாந்து நாட்டைச் சார்ந்தவர். ஒரு அழகான பெண்ணைக் கண்டு அவளை திருமணம் செய்து கொள்ள விரும்பினார். திருமண நிச்சயதார்த்த மும் முடிந்தது. இதற்கிடையில் அவர் தன்னை மிஷனெரிப் பணிக்கென ஒப்புக் கொடுத்து இந்தியா செல்ல விரும்பினார். அந்தப் பெண்ணோ அவர் மிஷினெரியாகச் செல்வதை விரும்பவில்லை. "மிஷினெரியாக இந்தியாவுக்குப் போக விரும்பினால் என்னை மறந்து விடுங்கள்" என்று கூறினாள். இந்த வார்த்தைகள் ஹென்றி மார்ட்டினுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆண்டவரின் ஊழியத்திற்கென்று ஒப்புக் கொடுத்த அவரால், கலப்பையில் கை வைத்தபின் பின்னிட்டுப் பார்க்க முடியவில்லை. இந்தியாவுக்கு வந்து ஊழியம் செய்தார். முதன் முதலாக வேதாக மத்தை உருது மொழியில் மொழி பெயர்த்தார்.

நமது வாழ்க்கையிலும் ஆண்டவர் சில ஏமாற்றங்களை அனுமதிக்கிறார். பரீட்சையில் தோல்வி, குறைந்த மதிப்பெண்களால் விரும்பிய கல்லூரியில், விரும்பிய பாடத்தைப் படிக்க முடியாமல் போவது, வேலை கிடைக்காமை

போன்ற பிரச்சனைகள் தாக்கும்போது பல தம்பி தங்கைகள் ஆண்டவரை விட்டு விலகிப் போகிறார்கள். வேதம் வாசித்தேனே, ஜெபித்தேனே, ஆண்டவர் என்னை கைவிட்டுவிட்டாரே என்று அங்கலாய்க்கிறார்கள். ஆனால் ஆண்டவர் தம் பிள்ளைகளை ஒருபோதும் கைவிடு வதில்லை. ஏதோ ஒரு திட்டத்திற்காக இவற்றை அனுமதித்திருக்கிறார் என்று தெரிந்துகொள்ளுங்கள்.

பின்னிட்டுப் பாராத மிஷினெரிகள்

ஆதித் திருச்சபை அப்போஸ்தலர்கள் ஆண்டவர் மேல் வைத்த அன்பிலிருந்து ஒருபோதும் பின்வாங்க வில்லை. அதனால் அவர்கள் அனுபவித்த பாடுகள் அநேகம். வாளால் வெட்டப்பட்டு, தலை துண்டிக்கப்பட்டு, கல்லால் எறியப்பட்டு, சிலுவையில் அறையுண்டு, சித்ரவதை செயயப்பட்டு இரத்த சாட்சிகளாய் மரித்தவர்கள் அநேகர். இந்தியாவுக்கு வந்த மிஷினெரிகள் வெயிலிலும், மழையிலும் அலைந்து திரிந்து, உண்ண உணவின்றி, உறக்கமின்றி சுவிசேஷப் பணியைச் செய்தார்கள். ஒருபோதும் அவர்கள் தங்கள் நாட்டில் வாழ்ந்த வசதியான வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கவில்லை.

> **ஒருபோதும் அவர்கள் தங்கள் நாட்டில் வாழ்ந்த வசதியான வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கவில்லை.**

ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு தீவில் வாழ்ந்த பழங்குடி மக்கள் நரமாமிசப் பட்சிணிகளாயிருந்தார்கள். அங்கு சுவிசேஷம் அறிவிக்கச் சென்ற ஜான் வில்லியம்ஸ் என்ற மிஷினெரியை அடித்து கொன்று தின்றுவிட்டார்கள். அப்படிப்பட்ட இடத்திற்குச்சென்று ஜான் பேட்டன் என்ற மிஷினெரி ஊழியம் செய்ய முன்வந்தார். பலர் அவரை சோர்வடையச் செய்தார்கள். ஒரு வயதான மனிதர் அவரிடம் வந்து "வாலிபனே, அங்கே செல்லாதே, உன்னை நரமாமிசப் பட்சிணிகள் தின்று விடுவார்கள்" என்று கூறினார்.

ஜான் பேட்டன் சிரித்துக் கொண்டே "வயதானவரே, நீர் மரித்து கல்லறையில் அடக்கம் பண்ணப்படும்போது புழுக்கள் உம் உடலைத் தின்னும். நான் தேவப்பணியைச் செய்து நரமாமிசப்பட்சிணிகளால் தின்னப்பட்டாலும், சாதாரணமாக இறந்து புழுக்கள் என் உடலைத் தின்றாலும் வித்தியாசம் ஒன்றுமில்லை" என்று கூறி தன் இளவயது மனைவியுடன் அந்த தீவுக்குப் பயணமானார்.

பணித்தளம் வந்த ஓராண்டுக்குள் அவரது மனைவியும், பிறந்த குழந்தையும் மரித்துப் போனார்கள். ஆயினும் அவர் தன் மிஷினெரிப் பணியிலிருந்து பின்வாங்கவில்லை. இப்போதும், எப்பக்கத்தில் நெருக்கப்பட்டாலும் பின்னிட்டுப் பாராத மிஷினெரிகள் ஆண்டவருக்காய் ஊழியம் செய்து வருகிறார்கள்.

'முன்வைத்த காலை பின்வைக்காதே' என்பது பழமொழி. "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ. பின்னிட்டுப் பாராதே" என்று (ஆதி. 19:17) ஆண்டவர் கூறிய

பின்னும் லோத்தின் மனைவி பட்டணத்தைத் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை ஆண்டவர் தருவேன் என்று கூறிய பின்னும், பல அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்தபின்னும், இஸ்ரவேல் மக்கள் தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி ஒரு கன்றுக் குட்டியை உண்டு பண்ணி, விக்கிரகத்திற்குப் பலியிட்டுக் களிப்படைந்தார்கள். (அப். 7:36.39.41)

நாமும் நம் வாழ்வில் பல கஷ்டங்களை சந்திக்க நேரிடலாம். பாடுகள் நம்மை பண்படுத்துவதற் காகத்தான் என்பதை உணர்ந்து, ஆண்டவரையே சார்ந்து கொள்ளுவோம். ஆண்டவரை விட்டு விலகாமல் அவர் காட்டும் வழியில் நடப்போம். ஒருபோதும் பின்னோக்கிப் பார்க்காதீர்கள்.

தேடுங்க... தேடுங்க...
தேடிக்கிட்டே இருங்க...

ஒவ்வொருவருக்கும் ஒரு தேடல் இருக்கிறது. உலகில் வாழும் பறவைகளும், விலங்குகளும் உணவு, நீரைத் தேடி அலைகின்றன. மனிதர்கள் ஒவ்வொருவரும் வேலை, பணம், பொருள், புகழ், பதவி, அந்தஸ்து, மகிழ்ச்சி என உலகில் எதையாவது தேடிக்கொண்டே இருக்கிறார்கள். எனவே வெற்றியடைந்தவர்கள் என்ன செய்தார்கள்?, எப்படி செய்தார்கள்? அவைகளைத் தேடிக் கண்டுபிடித்தால், நீங்களும் வெற்றிக் கனியை எட்டிப் பறிக்கலாம். தேடுங்கள், கண்டடைவீர்கள்.

திறமையைத் தேடி

'அமெரிக்கன் ஐடல்' என்பது அகில உலகிலும் வரவேற்பு பெற்ற, இசைத் திறமையைத் தேடும் போட்டியாகும். இன்றும் தொலைக்காட்சி சேனல்கள் சிறந்த பாடகர், சிறந்த நடனக் கலைஞர் போன்றவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றன. புகழ்பெற்ற கல்வி நிலையங்கள் சிறந்த மதிப்பெண்கள் பெறும் திறமையான மாணவர்களைத் தேடிக் கண்டு அழைத்து தங்கள் பள்ளியில் சேர்த்து மேலும் புகழைத் தேடிக் கொள்கின்றன. கலை, விஞ்ஞானம், இலக்கியம் போன்றவற்றில் திறமையான வர்களைத் தேடிக் கண்டுபிடித்து பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஆனால் தேவனோ திறமையானவர்களைத் தேடுவதில்லை. நொறுங்குண்ட, அர்ப்பணிப்புள்ள இருதயமுள்ளவர்களையும், அற்பமானவர்களையுமே தேடுகிறார். தமக்கு



ஊழியம் செய்ய உறுதியும், ஆயத்தமுமாயிருப்பவர்களையே தேடுகிறார். இப்படிப்பட்டவர்கள் மூலமாக தம் வல்லமையை வெளிப்படுத்துகிறார். தம்பி தங்கைகளே! உங்களுக்குள் இருக்கும் திறமைகளை, தாலந்துகளைக் கண்டு பிடியுங்கள். வாழ்வில் வெற்றியடையலாம்.

இன்பத்தைத் தேடி

இன்பம், மகிழ்ச்சி, சந்தோஷத்தைத் தேடுவது மனித இயல்புதான். வாலிபம் என்றும் வசந்தகாலம். இன்பத்தைத் தேடியலையும் இளவேனில் காலம் – கண்களுக்கு இன்பம், காதுகளுக்கு இன்பம், மனதிற்கு இன்பம், சரீரத்திற்கு இன்பம் என இளைய தலைமுறையினர் தீவிரமாயிருந்து அதன் பின் விளைவுகளை அறியாமல் போகின்றனர். கம்ப்யூட்டர், செல்போன், ஃபேஸ்புக், ட்விட்டர் போன்றவை கண்களுக்கு இன்பம் அளிப்பதாக நினைக்கிறார்கள். அதனால் ஏற்படும் பிரச்சனைகள், வேதனைகள் ஏராளம் என்பதை ஊடகங்கள் மூலமும் தினமும் தெரிந்து கொள்கிறோம்.

> **நல்லதைத் தேடி, நன்மையை செய்வதில் உள்ள மகிழ்ச்சியே நிலையானது.**

சிம்சோன் வாழ்க்கையில் பாலியத்திற்குரிய இச்சையைத் தேடி ஓடியதால் வாழ்க்கையில் நிறைவைக் காண முடியாமல் இளவயதிலேயே மரணத்தைத் தழுவிக் கொண்டான். பாலியத் திற்குரிய இச்சைகளுக்கு விலகியோடுங்கள். (2 தீமோ. 2:22) மதுபானம், சிகரெட், போதைப் பொருட்களைத் தேடி அலையும் இளைஞர்களே! காதல் என்னும் மாய வலையைத் தேடி ஓடி அதில் சிக்கிச் சீரழியும் சகோதர சகோதரிகளே, சிந்தியுங்கள். கானல் நீர் போன்ற இன்பத்தைத் தேடி ஓடாமல், கண்ணீரைத் துடைக்கும் தேவனைத் தேடுங்கள். உங்களை சரியான பாதையில் அவர் நடத்துவார்.

நல்லதைத் தேடி, நன்மையை செய்வதில் உள்ள மகிழ்ச்சியே நிலையானது. சாலமோன், தாவீது போன்ற அரசர்களுக்கு அவர்களிடம் இருந்த செல்வத்தைவிட தேவனைத் தேடியதால் பெற்ற சந்தோஷமே அதிகமாயிருந்தது.

ஞானத்தை தேடி

நியூயார்க்கில் வசித்த மனிதர் ஒருவரிடம் விலையுயர்ந்த வைர மோதிரம் ஒன்றிருந்தது. பாதுகாப்பாக ஒரு துணியில் சுற்றி வைக்கப்பட்டிருந்த அந்த மோதிரம் தவறுதலாக குப்பைத் தொட்டியில் விழுந்து குப்பை வண்டியில் கொண்டு போகப்பட்டது. அந்த மனிதர் குப்பை லாரியினை பின்தொடர்ந்து சென்று அனுமதிபெற்று ஒரு மணி நேரம் தேடி வைர மோதிரத்தைக் கண்டுபிடித்தார்.

ஆனால் சாலமோன் ஞானியோ எல்லாவற்றையும் விட விலையேறப்பெற்ற

ஞானத்தைத் தேடிக் கொள்ளும்படி கூறுகிறார். அதை புதையல்களைத் தேடுவதுபோல தேடவேண்டும் என கூறுகிறார் (நீதிமொழிகள் 2:14) ஆண்டவர் சாலமோனிடம் அவன் வேண்டுவது என்ன? என்று கேட்டபோது பொன்னையோ, பொருளையோ கேட்காமல் 'ஞானத்தைத் தாரும்' என்று கேட்டார். ஞானத்தோடு, அவர் கேட்காத செல்வமும் அவரைத் தேடி வந்தது. நீங்களும் ஆண்டவரிடம் ஞானத்தைக் கேட்டு ஜெபியுங்கள். பணம், புகழ், பதவி எல்லாம் தானாக உங்களைத் தேடி வரும். ஞானம் உள்ள மனிதர்களே எல்லாராலும் சிறப்பிக்கப்படுவார்கள்.

வேதத்தைத் தேடி

பென்ஸ்டனிடம் அவனது தந்தை வேதத்திலிருந்து ஒரு கேள்வியைக் கேட்டார். அவனால் பதில் கூறமுடியாத தால் வேதத்தை நன்கு வாசித்தறிந் திருந்த அவனது தாயாரிடம் போய் அதற்கான விடையைக் கேட்டான்.

> விலையேறப்பெற்ற வேதத்தைத் தேடுங்கள். வேதம் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வரும்.

அவன் தாயாரோ "நீயே தேடிக் கண்டுபிடி" என்று கூறினார். வேதத்தை முழுவதும் புரட்டிப்பார்த்து விடையைக் காணப் பொறுமையில்லாமல் தன் நண்பர்களிடம் போய் கேட்டான். அவர்களுக்குப் பதில் தெரியாததால் தானே பொறுமையுடன் தேடி கண்டு பிடித்தான். அதன்மூலம் வேறு பல விஷயங்களையும் தெரிந்து கொண்டான்.

படிப்பு, படிப்பு என்று அலைந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் வேதத்தைத் தேடுவதேயில்லை. அதற்கு நேரமில்லை என்று கூறி வேதத்தை மறந்து விடுகிறார்கள். அதனால் வாழ்க்கைக்கு தேவையான பல விஷயங்களை தெரியாமல் இழந்து விடுகிறார்கள். வேதத்தை ஆழ்ந்து படிக்கும்போது அதில் புதைந்துள்ள வைரம் போன்ற வசனங்கள் மூலம் பல புதிய பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். விலையேறப்பெற்ற வேதத்தைத் தேடுங்கள். வேதம் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வரும்.

தேவனைத் தேடி

பிள்ளைகள் ஒளிந்து விளையாடும்போது எல்லோரும் ஒளிந்து கொள்ள ஒரு பிள்ளைமட்டும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிக்க முடியாமல் திகைத்து நிற்கும்போது 'நான் இங்கே இருக்கிறேன்' என்று குரல் கொடுப்பார்கள். உடனே அந்த பிள்ளை அவர்களைக் கண்டு பிடித்து விடுவான். ஆனால் ஆண்டவர் நமக்குத் தூரமாகவும் இல்லை. தேடிக் கண்டுபிடிக்கும் அளவிற்கு ஒளிந்து கொள்ளவும் இல்லை. எப்பொழுதும் நம் தொடர்பு எல்லைக்குள்ளேயே இருக்கிறார். ஆர்வமுடன் அவரை தொடர்பு

கொள்ளுபவர்களுக்கு அவர் பலனளிக்கிறார் என விசுவாசிக்க வேண்டும். (எபி. 11:6) கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்.

மனிதர்கள் அற்பமான உலக ஆசைக்காகக் கடவுளைத் தேடுகிறார்கள். உலகப்பிரகாரமான பணம், பொருள், பதவி ஆகியவை வந்தவுடன் கடவுளைத்தேட நேரமில்லை என்று சொல்லி அவரை விட்டு விடுகிறார்கள். முடிவில் வேதனை அனுபவிக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை வராதபடி ஆன்மீக ஆசீர்வாதங்களைத் தேடுங்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலயம் செல்லாமல், ஆண்டவரைத் தேடாமல், இராதேயுங்கள். படிப்பு, டியூசன் என செல்லாமல் தேவனைத் தேடுங்கள். அவரைத் தேடுபவர்களை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்.

அன்புத் தம்பி தங்கையரே! புதையல்களைத் தேடுவதுபோல வேத வசனத்தைத் தேடுங்கள் பூமியின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வீர்கள். இறைவன் உங்களுக்கு அளித்த ஞானத்தைக் கொண்டு விஞ்ஞான, நாகரீக வளர்ச்சிக்கு உதவுங்கள். தேடுகிறவன் கண்டடைகிறான். (மத்தேயு 7:8) ஆர்வம், முயற்சி, தேவனோடுள்ள உறவு, நம்பிக்கை ஆகியவற்றோடு இணைந்து உழைப்பதே உண்மையான தேடல். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். அப்பொழுது நன்மையும், கிருபையும், சந்தோஷமும், சமாதானமும் உங்களைத் தேடிவரும்.

உண்மை எனப்படுவது யாதெனில்...

அது ஒரு காவல் நிலையம். ஆட்டோ ஓட்டும் இளைஞன் ஒருவன் கைப்பையுடன் வேகமாக நுழைந்தான். அங்கிருந்த காவல்துறை அதிகாரியிடம் அதை ஒப்படைத்து யாரோ அதை தனது ஆட்டோவில் தவறவிட்டு விட்டதாகக் கூறினான். உள்ளே நாற்பது பவுன் நகைகளும், முப்பதாயிரம் ரூபாய் பணமும் இருந்தன. அதைத் தொலைத்துவிட்டு வேதனையுடன் அங்கே அமர்ந்திருந்த ஒரு முதியவர் அதை நன்றியுடன் பெற்றுக் கொண்டார். உண்மையோடும், உத்தமத்தோடும் அதனைக் கொண்டுவந்து ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுநர் மறுநாள் ஊடகங்கள் மூலம் பாராட்டப்பட்டார்.

அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கும் சாந்தா, சந்தையில் காய்கறி வாங்கிக் கொண்டிருந்தாள். கல்யாணியும் அதே கடையில் காய்கறி வாங்க வந்தாள். அவளது பையில் வங்கியில் அடமானம் வைத்து, திருப்பப்பட்ட 10 பவுன் நகை இருந்தது. இரண்டு பையும் ஒரே மாதிரி இருந்ததால் மாறிப்போய்விட்டன. வீட்டுக்கு வந்ததும் பையை பார்த்த சாந்தா பதறிப்போய், அதிலிருந்த நகைகளைக் கொண்டுபோய் காவல் நிலையத்தில் ஒப்படைத்தாள். நகையைக் காணாமல் புகார் அளித்திருந்த கல்யாணி மகிழ்ச்சியுடன் தன் நகைகளைப் பெற்றுக் கொண்டாள்.

மேற்கொண்ட இரண்டுமே உண்மையாக நடந்த சம்பவங்கள். ஆனால் இவ்வுலகில் வாழும் அனைத்து மனிதர்களும் இதைப்போல எல்லா சந்தர்ப்பங்களிலும் உண்மையாக நடந்து கொள்கிறார்களா? உண்மையைப்

பேசுகிறார்களா? இல்லை என்பதே வேதனைக்குரிய விஷயம்.

உண்மையினால் உயர்வு

அமெரிக்காவில் ஜனாதிபதிக்கான வேட்பாளர்பட்டியல் அறிவிக்கப்பட்டது. ஜார்ஜ்புஷ் என்ற பெயரைக் கேட்டதும் அநேகர் கொதித்தெழுந்தனர். அவரைப்பற்றிய ஒரு துண்டுப் பிரதியை அச்சடித்து விநியோகம் செய்தனர். அதில் ஜார்ஜ் புஷ் குடிவெறியில் வாகனத்தை ஓட்டி காவலரால் பிடிப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டவர். அதனால் குடிகாரனான அவருக்கு வாக்களிக்கக் கூடாது என்றிருந்தது. அவர். அவ்வளவுதான் என எதிர்க் கட்சியினர் கொக்கரித்தனர். சுதாரித்துக் கொண்ட ஜார்ஜ் புஷ், பதிலுக்கு ஒரு பிரதியை வெளியிட்டார். "நான் குடித்துவிட்டு காரோட்டி அபராதம் செலுத்தியது உண்மைதான். ஆனால் என் மனைவி, பிள்ளைகளின் வேண்டுகோளுக்கிணங்க 1987ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி புதுவருட ஆராதனையில், இனி குடிப்பதில்லை என தீர்மானம் செய்தேன். அதன்பின் 14 வருடங்களாக நான் குடிப்பதில்லை, மதுவை இனியும் குடிக்கமாட்டேன்" என்று அறிவித்தார்.

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.

மக்கள் அதை வாசித்துவிட்டு இவ்வளவு உண்மையாகத் தவறை ஒப்புக் கொண்டு திருந்தி வாழ்பவர் தான் நமக்குத் தேவை என வாக்களித்தனர் அமெரிக்காவின் 43வது ஜனாதிபதியாக வெற்றி வாகை சூடினார். உண்மைக்குக் கிடைத்த உயர்வைப்பார்த்தீர் களா? உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான். (நீதிமொழிகள் 28:20)

வாரிசு இல்லாத அரசன் ஒருவன் தனக்கு வயதாகிவிட்டதால் நல்ல இளைஞன் ஒருவனைத் தேர்ந்தெடுத்து முடிசூட்ட முடிவு செய்தான். இருபது இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் சில விதைகளைக் கொடுத்து இந்த விதைகளைத் தொட்டியில் இட்டு வளர்த்துக் கொண்டு வாருங்கள். ஒரு வருடத்தில் அழகிய பூஞ்செடியைக் கொண்டு வருபவர் யாரோ அவரே அடுத்த அரசனாக நியமிக்கப்படுவான் என்று அறிவித்தான். ஒரு வருடம் கழித்து எல்லோரும் அழகிய பூஞ்செடிகளோடு தொட்டியை கொண்டு வந்தார்கள். ஓர் இளைஞனது தொட்டி மட்டும் வெறுமையாக இருந்தது. அரசன் அந்த இளைஞனை நாட்டின் அரசனாக அறிவித்தார். அவர் எல்லோருக்கும் வேகவைத்த விதைகளைக் கொடுத்திருந்தார் "எல்லோரும் வேறு விதைகளைப் போட்டு பூஞ்செடியை வளர்த்துக் கொண்டு வந்திருந்தார்கள். இந்த இளைஞன் மட்டுமே உண்மையாகக் கொண்டு வந்தான்" என்றார். உண்மைக்கு உலகமே முடிசூட்டி மகிழும்.

வாலிபத் தம்பி, தங்கையரே! நீங்கள் பணிபுரியும் இடங்களில் உண்மையாய் உழைக்கிறீர்களா? சிறிய வேலையோ, பெரிய வேலையோ அதில் நீங்கள் உண்மையாயிருந்தால் தேவன் உங்களை உயர்ந்த நிலைக்கும் கொண்டு வருவார். தானியேல் தேவனுக்குப் பயந்து உண்மையாய் நடந்து கொண்டதால், அவர் பாபிலோனுக்கு அதிபதியானார். யோசேப்பு உண்மையோடு தன்னைக் காத்துக் கொண்டதால் எகிப்தினை ஆளும் பெருமைபெற்றார். உங்களையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பார்.

அரசு அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றினாலும் வியாபாரமோ, சொந்த தொழிலோ எதைச் செய்தாலும் லஞ்சம் வாங்காமல், கலப்படம் செய்யாமல், அநியாயம் செய்யாமல் உண்மையோடும், உத்தமத்தோடும் பணியாற்றுவதையே ஆண்டவர் விரும்புகிறார். கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது. (நீதி. ...) உண்மையாய் நடக்கும்போது இராஜாக்களுக்கு முன்பாக நிற்க வைப்பார். (நீதி. ...29)

> உள்ளதை
> உள்ளதென்றும்,
> இல்லதை
> இல்லதென்றும்
> சொல்வோம்.

பொய் சொல்லக்கூடாது, உண்மையே பேச வேண்டும் என்று பிள்ளைகளிடம் சொல்கிறோம். ஆனால் நமக்கு வேண்டாத யாரோ ஒருவர் அலைபேசியில் அழைத்தால், வீட்டில் இருந்து கொண்டே 'அப்பா இல்லை' என்று சிலர் சொல்லச்சொல்கிறார்கள். இதுபோன்ற செயல்களால்தான் பிள்ளைகளும் பொய்பேச கற்றுக்கொள்கிறார்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது உண்மைக்கு சாட்சியாக வாழ வேண்டிய வாழ்க்கையாகும். இந்த உலகம் பொல்லாங்கின் ஆவியினாலும், போலிகளினால் நிறைந்து காணப்படுகிறது. போலி மருந்துகள், போலி மருத்துவர்கள், போலி சான்றிதழ்கள், போலி கட்டிடங்கள் என எங்கும் எதிலும் உண்மையில்லை. அதனால் இந்த உலகம் தினந்தோறும் பலவிதமான ஆபத்துக்களையும், விபத்துக்களையும், உயிரிழப்புகளையும், பொருள் நஷ்டங்களையும் சந்தித்துக் கொண்டு இருக்கிறது. எனவே விழிப்புடன் இருப்போம். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்வோம். (மத்தேயு 5:37)

ஆண்டவர் தந்த பொறுப்பினை உத்தமமாய் நிறைவேற்றி மகிழுவோம்.

ஓடி ஓடி விளையாடு

உலகின் ஒரு பகுதியில் மட்டுமே ஒரு காலத்தில் விளையாடப்பட்டு வந்த விளையாட்டுகள். பயணங்கள் மூலமாக பிற நாட்டுக்கும் பயணப்பட்டன. வியாபாரத்திற்காகவும், நாட்டினை சுற்றிப் பார்க்கவும் வந்தவர்கள் புதிய விளையாட்டுகளைக் கண்டு வியந்து அவற்றைத் தங்கள் நாட்டிற்குக் கொண்டு சென்றனர்.

விளையாட்டுகள் உருவான விதம்

இந்தியாவுக்கு வந்த யுவான் சுவாங், பாஹியான் இருவரும் நாளந்தாவில் விளையாடப்பட்டு வந்த வாள் சண்டை, நீச்சல், பந்து விளையாட்டு, மல்யுத்தம் போன்ற குறிப்புகளை எழுதி வைத்தனர்.

போலோ விளையாட்டு பாரசீகத்தில் உருவானது. உலகில் சக்திவாய்ந்த பேரரசாக இங்கிலாந்து உருவெடுத்தபோது கிரிக்கெட் உலகெங்கும் பரவியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேய சிப்பாய்களில் சிலர் ஷாம்பெய்ன் பாட்டில் மூடியிலுள்ள கார்க்கில் சில இறகுகளைச் சொருகி பாட்டில்களை மட்டைகளாக பாவித்து வேடிக்கையாக விளையாடினர். ராணுவ வீரர்களால் இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அந்த விளையாட்டை டியூக் என்பவர் மிகவும் நேசித்தார். அவர் வசித்த கிராமத்தின் பெயரான பேட்மின்ட்டன் என்ற பெயரால் அந்த விளையாட்டு உலகமெங்கும் பிரபலமானது.



சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் குஜீ என்ற பெயரில் விளையாடப்பட்ட கால் பந்தாட்டம் கிரேக்க, ரோமானிய நாடுகளிலும், ஹாலந்திலும் பெயர்பெற்று விளங்கியது.

செஸ் என்ற சதுரங்க விளையாட்டு முதன்முதலில் இந்தியாவில் தான் தோன்றியது. சதுர் என்றால் நான்கு என்று பொருள் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட் படை அரசர்களுக்குப் போர்கலை யைக் கற்றுத்தரும் விளையாட்டாக அது திகழ்ந்தது. இன்று விளையாடப் படும் பல விளையாட்டுக்கள், சரித்திர காலத்தில் வேறு விதத்தில் ஆடப் பட்டன. நாடுவிட்டு நாடு அவை

…பட்ட போது தேவையான மாற்றங்களோடு இன்றுள்ள விளையாட்டு வடிவத்தை அடைந்தன.

திருமறையில் விளையாட்டு

விளையாட்டினை குறித்து திருமறையில் நேரிடையாக விபரங்கள் காணப்படவில்லை. எனினும் பவுல் விளையாட்டு குறித்ததான பல எடுத்துக்காட்டு …களை கையாண்டுள்ளார். நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். என தன் வாழ்க்கையை (2 தீமோத்தேயு 4:7) ஓட்ட பந்தயத்திற்கு ஒப்பிடுகிறார். மேலும் பந்தய சாலையில் ஓடுகிறவர்கள் எல்லோரும் ஓடுவார்கள். ஆனாலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவான். (1 கொரிந்தியர் 9:24) என்றும் கூறியுள்ளார். பந்தயத்தில் போட்டியிடுபவர்களுக்கு இச்சையடக்கம் தேவை என்பதையும். சிலம்பம் என்ற விளையாட்டினைக் குறித்தும் 25-26 வசனங்களில் தெரிவிக்கிறார். மோசே …பெறுவதில் சிறந்தவராயிருந்தார். தாவீதோ …பார்த்து கல் எய்வதில் வல்லவராயிருந்தார்.

கிறிஸ்தவரும், விளையாட்டும்

> ஆண்டவரின்
> உதவியால்
> மற்றவர்களைவிட
> பத்து மடங்கு
> திறமையுள்ளவர்களாக
> இருக்க முடியும்.

இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் விளையாட்டில் ஈடுபடுவது நேர வீணடிப்பு என்று நினைக்கின் … — ஜெபிக்கவும். வேதம் வாசிக்கவும். …செலவும் நேரம் ஒதுக்குவது போல. …பயிற்சி செய்வதற்கும். விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடவும் கிறிஸ்தவர்கள் நேரம் ஒதுக்க வேண்டும். அப்பொழுது ஆண்டவரின் உதவியால் மற்றவர்களைவிட பத்து மடங்கு திறமையுள்ளவர்களாக இருக்க முடியும். (தானியேல் 1:20)

…-07-2002 கால்பந்து ரசிகர்களுக்குக் கொண் டாட்டமான அதே நேரம் …மகிழ்ச்சி பொங்க ரசித்த நாள் அது. 2002-ஆம் ஆண்டு சேம்பியனை தேர்ந் …தெடுக்க நடந்த உலகக் கோப்பை இறுதியாட்டம்.

பிரேசில் மற்றும் ஜெர்மனி ஆகிய நாட்டின் கால்பந்து அணிகள் களத்தில் …இறங்க. பரபரப்புடன் ஆட்டம் தொடங்கியது. அரங்கில் கரவொலியும். ஆரவாரமும் …அதிர செய்தன. தொலைக்காட்சி மூலம் கோடிக்கணக்கானோர் ரசித்துக் கொண்டிருந்தனர்.

பெருத்த ஆரவாரம். மகிழ்ச்சி வெள்ளம் இவற்றினூடே வீரர்கள் நிதானத்துடனும் அதே நேரம் நரம்புகள் முறுக்கேற ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடிக்கொண்டிருந்தனர்.

நேரம் நெருங்க நெருங்க பார்வையாளர்தம் இரத்த அழுத்தம் அதிகரிக்க …தும்… பேராவலுடன் தொலைக்காட்சி பெட்டிகளின் முன் இருக்கைகளில் பதட்டத்துடன் ரசிகர்கள்…

ஆதலால் பிரேசில் நாட்டு அணி ஜெர்மனி நாட்டு அணியை 2-0 என்ற

கோல் கணக்கில் வீழ்த்தி உலகக் கோப்பையை வென்றது! 5-வது முறையாக மாபெரும் வெற்றி! "I belong to Jesus" என்ற வாசகங்கள் கொண்ட மேல் ஆடையணிந்திருந்த பிரேஸில் அணியினர், தாம் இயேசுவையே முழுமையாக நம்பி களத்திலிருந்தது தெளிவாகிறது.

வெற்றி ஈட்டியதும் ஒட்டுமொத்த அணியும் கைகோர்த்துக் கொண்டு மைதானத்தில் முழங்காலிட்டு ஜெபம் செய்து இயேசுவுக்கு நன்றி செலுத்தியது அற்புதமான உண்மையான நிகழ்வு.

July 2, 2002 "The Hindu" தேசீய நாளிதழில் 20-ம் பக்கம், The Secret to Brazil's என்ற தலைப்பிட்ட செய்தியின் ஒரு பகுதி பின்வருமாறு.

From Pele's wife to Brazil's World Cup Stars, the Secret to success has been revealed - divine intervention.

விளையாடுவதினால் நன்மைகள்

> **விளையாட்டின் மூலம் உடலுக்கும், உள்ளத்திற்கும் நல்ல பயிற்சி கிடைக்கிறது**

விளையாட்டின் மூலம் உடலுக்கும், உள்ளத்திற்கும் நல்ல பயிற்சி கிடைக்கிறது. நல்ல விளையாட்டு வீரர்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்கிறார்கள். இது சிறந்த கிறிஸ்தவ வாழ்வுக்கும் பயனுள்ளதாக இருக்கும். விளையாட்டுகளில் குழு உணர்வு காணப்படுவதால் ஒற்றுமையாக வாழ கற்றுக் கொள்கிறார்கள். ஆண்டவரிடமும் பற்றுறுதியாக இருக்க முடிகிறது. செஸ் போன்ற விளையாட்டுகள் சிந்திக்கும் ஆற்றல் அதிகமாவதற்கும், சுய கட்டுப்பாடு, ஆளுமைத்திறன் அதிகரிப்பதற்கும் பயன்படுகின்றன. விளையாட்டு வீரர்கள் நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறுகிறார்கள். நல்ல பொரு ளாதார வசதியைப் பெறுவதோடு உலக அரங்கில் நாட்டிற்குப் பெருமையும், புகழும் சேர்க் கிறார்கள்.

இந்திய விளையாட்டுத்துறை இப்போதே 2020 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்காக தயார்படுத்தும் வண்ணமாக விஷன் 2020 திட்டத்தினை செயல்படுத்த ஆரம்பித்துள்ளது கல்வித்துறையில் கடும்போட்டி நிலவுவது போல பெற்றோர் விளையாட்டுத்துறையிலும் தங்கள் பிள்ளைகள் போட்டியிடுவதை ஊக்குவிக்க வேண்டும். கிறிஸ்தவ வாலிபர்கள் பெருமளவில் விளையாட்டுத் துறையில் கலந்து கொண்டு நாட்டிற்கும், வீட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும். இதற்கான ஊக்கத்தையும், உதவியையும் திருச்சபைகளும், ஐக்கிய சங்கங்களும் செய்து அதன்மூலம் ஆண்டவர் நாமம் மகிமைப்படச் செய்வோமாக.

காதல் எனும் கொலைக் கருவி

இந்தக் காலத்தில் இளைஞர்கள் எல்லாவற்றிலும் ரொம்பத் தெளிவாக இருக்கிறார்கள். ஆனால் காதல் என்னும் மாய வலைக்குள் விழும்போது அவர்கள் எதையும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. ஆறு மாதம் அணியப்போகும் ஆடையைப் பார்த்து பார்த்து வாங்குகின்ற இளைய தலை முறையினர். அறுபது ஆண்டுகள் தன்னோடு வாழ வேண்டிய வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுப்பதில் அலட்சியமும், அவசரமும் காட்டு கிறார்கள்.

அர்த்தமில்லா கொண்டாட்டம்

மேற்கத்திய நாகரீகத்தில் பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு ஆண்டுக்கு ஒருமுறை அன்னையர் தினம், தந்தையர் தினம் என்று கொண்டாடுவது போல, காதலர் தினமும் கொண்டாடப்படுகிறது. காதலர் தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்பவர்கள் மிகவும் இளவயதினராக இருக்கிறார்கள். ஆட்டம், பாட்டம், பரிசுகள், பரிமாற்றம், மதுபான விருந்துகள் என தங்களை மறந்து ஆடிப்பாடிக் கொண்டாடுகிறார்கள். விழா முடிந்தபின் எத்தனை பேர் பாதுகாப்பாக இல்லங்களுக்கோ, விடுதிக்கோ திரும்புகிறார்கள்? இளம் பெண்கள் தங்கள் எதிர்காலம், பெற்றோர், திருமண வாழ்க்கை, குடும்பம் ஆகியவற்றை மனதில் கொண்டு வந்து காதலையும், காதலர் தினக் கொண்டாட்டத்தையும் தவிர்க்கலாமே?

பிஞ்சிலே வெம்பி விடாதே

சமீபத்தில் இரு தோழிகள் சந்தித்துக் கொண்டார்கள். அதில் ஒரு பெண்மணி வருத்தத்துடன் காணப்பட்டாள். காரணம் கேட்டபோது அவள் பையனுக்கு அவள் வகுப்பில் படிக்கும் ஒரு பெண் காதல் கடிதம் எழுதியிருக்கிறாள். பையனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் வயது 13தான் என்பது வேதனைக்குரிய விஷயம். அந்தக் கடிதம் அந்த வயதுக்குரிய பெண் எழுதுவதாக இல்லாமல், மிகவும் மோசமான வார்த்தைகளால் எழுதப்பட்டிருந்தது.

அந்தத் தோழி அந்தப் பெண்ணின் பெற்றோரை சந்தித்து, இதுபற்றி கூற அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அந்தச் சிறுமியின் பெற்றோர் இருவரும் பணிக்குச் செல்பவர்கள். தாமதமாகத்தான் வீட்டுக்குத் திரும்புவார்கள். அவர்கள் வரும்வரை அந்த சிறுமி டிவி பார்ப்பதிலும், வலைத் தளங்களில் பொழுதை கழிப்பதுமாக இருந்திருக்கிறாள். ஃபேஸ்புக்கும், ட்விட்டரும், ஸ்மார்ட் போனும் இளைஞர்களை ஆட்டிப்படைக்கும் காலம் இது. பெற்றோர்களே வளரும் பருவத்தில் உங்கள் பிள்ளைகளிடம் கவனம் வையுங்கள். அவர்கள் நடவடிக்கைகளை ஆராய்ந்து அவர்களுடன் நேரம் செலுத்தி, தவறான வழிகளில் அவர்கள் சென்று விடாதபடி கவனமாயிருங்கள்.

முள்ளில் விழுந்துவிடாதே

அவள், கல்லூரிக்குச் செல்லும்வரை பெற்றோர் பேச்சைக் தட்டாத படிப்பாளியாக இருந்தாள். அந்த கோ-எஜூகேஷன் கல்லூரி அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது. அவளுடன் படித்த ஒரு மாணவனுடன் ஏற்பட்ட நட்பு காதலாக மாறியது. அவன் காட்டிய அன்பில் உருகிப் போனாள். எத்தனை அழகான பெண்கள் இருந்தும் அவன் தன்னைக் காதலிப்பதும், அக்கறை காட்டுவதும் பெருமையாக இருந்தது. அவனோடு ஊர் சுற்றி, நெருக்கமாகப் பழகியதில் தன்னையே இழந்தாள். சீக்கிரம் அவளைத் தவிர்த்து, வேறொரு பெண்ணோடு அவன் ஊர் சுற்ற ஆரம்பித்தான். இதுபற்றி அவள் கேட்டதற்கு, அவளது நடத்தை பற்றி மோசமாகப் பேசியதோடு அவளோடு நெருக்கமாக இருந்த தருணங்களை வீடியோ எடுத்து வைத்திருப் பதாகவும், அதை பகிரங்கப்படுத்தி விடுவதாகவும் மிரட்டினான். வாழ்வைத் தொலைத்து நிர்க்கதியாய் நிற்கும் அபலைகளின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. பலர் தற்கொலைக்கு தள்ளப்படுகிறார்கள். வாலிபப் பெண்களே! முள்ளில் சேலை விழுந்தாலும் சேலையில் முள் விழுந்தாலும் சேதம் சேலைக்குத்தான் என்பதை உணர்ந்து எச்சரிக்கையாயிருங்கள்.

> **முள்ளில் சேலை விழுந்தாலும் சேலையில் முள் விழுந்தாலும் சேதம் சேலைக்குத்தான் என்பதை உணர்ந்து எச்சரிக்கையா யிருங்கள்**

நாசமாக்கும் நட்பு வேண்டாம்

இக்காலத்தில் ஆண்களும், பெண் களும் சேர்ந்து படிப்பதும், சேர்ந்து பணிபுரிவதும் சகஜமாகி வருகிறது. ஆண் பெண் நட்பு என்பது கத்தியின் மீது நடப்பது போல. எப்போதும் ஆபத்தானதுதான். டெல்லியில் மருத்துவர்களாகப் பணிபுரிந்து வந்த நீரஜாவும், முகேஷும் நீண்டகால நண்பர்கள். இரு குடும்பத்தாரும் நட்போடு பழகி வந்தார்கள். கிட்டதட்ட பத்தாண்டுகளுக்குமேல் நட்போடு பழகிவந்த முகேஷ் நீரஜாவை ஒருதலைப்பட்சமாகக் காதலிக்க

ஆரம்பித்தாள். நீரஜாவுக்குத் திருமணம் செய்ய அவர்கள் பெற்றோர் முடிவு செய்து மணமகனைத் தேர்ந்தெடுத்தனர். இந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த முகேஷ் நீரஜாவிடம் தன் காதலைக் கூற, அவளோ தான் நட்பாகத்தான் பழகியதாகவும், அவனைக் காதலிக்க முடியாது எனவும் மறுத்து விட்டாள். ஆத்திரமடைந்த முகேஷ் அவள்மீது ஆசிட் ஊற்றி அவள் முகத்தை சிதைத்துப்போட்டான்.

நட்பு காதலாக மாறி பழிவாங்கிவிட்டது. ஆண், பெண் நட்பு என்பது நம் நாட்டுக் கலாச்சாரத்திற்கு ஏற்புடையதன்று. காதல் என்ற வார்த்தைக்கு இப்போதெல்லாம் அன்பு, நேசம் என்ற அர்த்தம் மாறி விட்டது. காதலில் பழிவாங்குதலே ஓங்கி நிற்கிறது.

கொலைக்கார காதல்

இன்றைய ஊடகங்கள், செய்தித் தாள்கள் எல்லாம் காதலால் ஏற்படும் கொலைகள், தற்கொலைகளால் நிரம்பி வழிகின்றன. கூலித் தொழிலாளி ஒருவர் தன் இருபெண்களைக் கஷ்டப்பட்டு படிக்க வைத்தார். அந்தத் தெருவிலுள்ள தொழிற்கூடம் ஒன்றில் பணிபுரிந்த வாலிபன் ஒருவன் அதில் ஒரு பெண்ணை ஒருதலையாகக் காதலிக்க ஆரம்பித்தான். அந்தப் பெண் அந்தக் காதலை ஏற்க மறுத்து படிக்க வேண்டும் என்று கூறினாள். விளைவு அந்த இளைஞன் அந்தப் பெண்ணையும், அதைத் தடுக்க வந்த அவளது சகோதரியையும் வெட்டிக் கொன்றான்.

சமீபத்தில் நடைபெற்ற மற்றொரு உண்மை சம்பவம். பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவியும், மாணவனும் காதலிக்க. இரு வீடுகளிலும் அதை எதிர்த்தனர். அதைப் பொறுக்க முடியாமல் இருவரும் இரயிலில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டனர்.

பத்திரிக்கைகள், ஊடகங்கள் காதல் செய்திகளைக் கூவிக் கூவி விற்கின்றன. கள்ளக்காதல், காதல் கொலைகள், தற்கொலை செய்திகள் இல்லாத நாளே இல்லை. காதல் ஆசைகாட்டி, வீட்டை விட்டு அழைத்துச் செல்லப்படும் 15 வயது இளம்பெண், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, ஆற்றிலோ, குளத்திலோ, ஊருக்கு ஒதுக்குப்புறமாகவோ வீசியெறியப்படும் அவலங்கள் கண்களில் நீரை வரவழைக்கின்றன. குப்பைத் தொட்டியிலும், முள்வேலியிலும் அனாதையாகக் கிடக்கும் குழந்தைகள் கள்ளக் காதலின் நிலையை எடுத்துரைக்கின்றன.

வாலிபர்களே உடலையும், உயிரையும் கொலைசெய்யும் காதல் தேவைதானா என்பதை சிந்தியுங்கள்.

இதயம் கொடுத்து உயிரை வாங்கும் காதல் எனக்கு வேண்டாம்...
உயிரைக் கொடுத்து இதயம் கேட்கும் இயேசு எனக்கு போதும்.

கவனமாயிருங்கள்

அருமையான கருத்தை வெளிப்படுத்தும் ஓவியத்துக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு என்று ஓர் அரசன் அறிவித்தான். வந்து சேர்ந்த ஆயிரக்கணக்கான ஓவியங்களிலிருந்து இரண்டு ஓவியங்களைத் தேர்ந்தெடுத்தான். முதல் ஓவியத்தில் அழகான நதிக்கரை. அருமையான மலைத்தொடர், வெண் மேகங்களின் சஞ்சாரம், அமைதியின் அற்புதமான வெளிப்பாடு. அடுத்த ஓவியத்தில் மழையும், புயலும் அடிக்கும் பிரதேசம் மின்னல் கீற்றுக்கள் விண்ணி லிருந்து சீறிப்பாய, மலையிலிருந்து ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவி. ஓர் ஓரத்தில் பாறையிடுக்கில் புதர்களுக்கு நடுவே ஒரு பறவை அமைதியாக மிகுந்த கவனத்துடன் கூடு கட்டிக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டாவது ஓவியத்திற்குத்தான் அரசன் பொற்காசுகளைப் பரிசளித்தான். பதட்டமான சூழ்நிலையிலும் கவனமாக, அமைதியாகத் தன் கூட்டைக் கட்டுகின்ற பறவையிடமிருந்து நாம் கவனமாக வாழக் கற்றுக் கொள்வோம்.

பயணங்களில் கவனமாயிருங்கள்

சமீபத்தில் நடைபெற்ற ஓர் உண்மை சம்பவம். ஒரு தகப்பனும் மகனும் இருசக்கர வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென மகனின் செல்போன் ஒலிக்க, ஒரு கையால் வாகனத்தை ஓட்டிக் கொண்டே மறுகையை பாக்கெட்டுக்குள் விட்டு செல்போனை எடுக்க முயற்சி செய்தான். நிலைதடுமாறி இருவரும் கீழே விழ வயதான தந்தை அந்த இடத்தில் மரித்துப் போனார் ஹெல்மெட் அணியாத காரணத்தால் மகனும் தலையில் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். வாகனங்களை ஓட்டிக் கொண்டிருக்கும்போது செல்போனை பயன்படுத்து வது தவறானது என்று தெரிந்தும், அது கவனத்தை சாலையிலிருந்து திசை திருப்பும் என்று அறிந்திருந்தும் உயிரோடு விளையாடுகிறார் கள். சாலை விதிகளை கவனத்துடன் அனை வரும் கடைபிடித்தால் விபத்துக்கள் பெருமள வில் குறையும். எங்கு புறப்பட்டுச் சென்றா லும் ஜெபித்து பயணத்தைத் தொடருங் கள். ஆண்டவர் உங்களுக்கு முன்னே சென்று பாதையைச் செவ்வையாக்குவார். தூதர் களை உங்களுக்கு



வழித்துணையாக அனுப்புவார்.

வலைத்தளங்களில் கவனமாயிருங்கள்

வலைத்தளங்களுக்கு அடிமையாகாமல் கவனமாயிருங்கள். மும்பையைச் சேர்ந்த சேவியர் என்ற 25 வயது இளைஞன் பெரிய நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்தான். ஃபேஸ்புக்கில் சிந்தியா என்ற பெண்ணின் புகைப்படத்தைக் கண்டு அவளைக் காதலித்தாள். அந்தப் பெண்ணைப் பற்றிய விபரங்கள் அவன் மனதிற்கு ஏற்றவையாக இருந்ததால் அவளுடன் மணிக்கணக்கில் தொலைபேசி மூலமும் பேசி மகிழ்ந்தான்.

புனேயில் இருந்த அவளை நேரில் சந்திக்க விரும்புவதாக அவன் கூறிய பின்னர் அவள் அவனிடம் பேசுவதைத் தவிர்த்தாள். எப்படியோ அவள் முகவரியைக் கண்டுபிடித்து அவளை நேரில் சந்தித்தபோது அவன் அதிர்ச்சியடைந் தான். அவள் அந்த வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண் என்பதும், வெளிநாட்டில்படிக்கும் அவளது எஜமானின் மகளது புகைப்படம், விபரங்களை முகநூலில் அனுப்பி தன்னை ஏமாற்றி இருப்பதை அறிந்து ஏமாற்றத்துடன் திரும்பினாள்.

விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் கிடைத்த தொலைக்காட்சி, செல்போன், வலைத்தளங்கள், முகநூல், ட்விட்டர் போன்றவற்றை நாம் மறுக்க முடியாது. ஆனால் இவற்றைக் கையாளுவதில் கவனமாயிருக்க வேண்டும் விரும்பத்தகாத உறவுகள், ஆபாச புகைப் படங்கள், தவறான செயல்களுக்கு இவற்றைப் பயன்படுத்தாமல் இருக்க கவனமாயிருங்கள். வலைத்தளங்களில் உள்ள நல்ல விஷயங்களை மட்டும் கையாள கற்றுக் கொள்ளுங்கள்.

விரும்பத்தகாத உறவுகள், ஆபாச புகைப்படங்கள், தவறான செயல்களுக்கு இவற்றைப் பயன்படுத்தாமல் இருக்க கவனமாயிருங்கள்.

போதை பழக்கத்திற்கு கவனமாயிருங்கள்

வாழ்வில் ஒரு முறையாவது மதுபானத்தை அருந்திப் பார்க்க வேண்டும் என்று இளைய தலைமுறை எண்ணுகிறது. முதலில் இன்பமாகத் தோன்றும் இந்தப் பழக்கம் முடிவில் பாம்பைப் போல அது தீண்டிவிடும். இன்று ஒரு நாள் மட்டும், பரீட்சை வெற்றியைக் கொண்டாட மட்டும், பிறந்தநாள் பார்ட்டியில் கொஞ்சம்தான் என்று உங்களை நீங்களே சமாதானம் பண்ணிக் கொள்கிறீர் களோ? கவனமாயிருங்கள் அது உங்களை விடாமல் பற்றிக்கொள்ளும்.

சிகரெட், பீடி, கஞ்சா, புகையிலை இன்னும் எத்தனை எத்தனையோ போதைப் பழக்கங்களுக்கு இன்றைய இளைஞர்கள் அடிமையாகி, உடல்நிலை கெட்டு, மனம் பாதித்து, மூளை கலங்கித் திரிகிறார்கள். எனவே முதலிலேயே இவற்றை தவிர்த்து விடுவதில் கவனமாயிருங்கள்.

சமீபத்தில் உண்மைச் செய்தி ஒன்று உள்ளத்தை உலுக்குவதாக இருந்தது. வெளியூரில் பணிபுரிந்த வாய் பேசமுடியாத மகன் தன் குடும்பத்தாரோடு தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட சொந்த ஊருக்கு வந்தான். புத்தாடை உடுத்தி, பட்டாசு வெடித்து இனிப்புகளை உண்டு அவன் மகிழ்ந்திருக்கையில் அவனது தந்தை அவனிடம் மதுபானம் குடிப்பதற்குக் காசு கேட்டார். பணம் கொடுக்க மறுத்த மகனை தந்தையே அடித்துக் கொன்றுவிட்டார். மதுபானவெறி மகனையே கொல்லும் அளவிற்குக் கொண்டு சென்று விட்டது. அறிவை மயக்கும் பழக்கங்களுக்கு விலகி கவனமாயிருங்கள்.

மதுபான ஆசை மகன் என்றும் பார்ப்பதில்லை, மகள் என்றும் பார்ப்பதில்லை. போதையால் சொந்த மகளையும், அக்கம் பக்கத்து சிறுமிகளையும் பாலியல் பலாத்காரம் செய்யுமளவிற்கு மனிதனை மிருகமாக்கும் தீய பழக்கங்களுக்கு விலகியோடுங்கள்.

பாலியல் இச்சைக்கு கவனமாயிருங்கள்

> அறிவை மயக்கும் பழக்கங்களுக்கு விலகி கவனமாயிருங்கள்.

இன்றைய உலகில் ஆணும் பெண்ணும் சேர்ந்து படிப்பது, பணிபுரிவது, நட்பாகப் பழகுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் கவனமுடன் இவ்விஷயங்களில் நடந்து கொள்வதே விவேகமான செயல். பக்தியான குடும்பத்தை சார்ந்த இளவயது பெண் இனியா, ராஜன் என்ற இளைஞனோடு பழகுவதை அறிந்த அவள் பெற்றோர் அவளுக்குப் புத்திமதி கூறினர். அவன் குடிகாரன் என்பதையும், ஒழுங்காக வேலைக்குச் செல்லமாட்டான் என்று கூறியும் அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பலமுறை அவளை ஏமாற்றி பாலியல் தொடர்பு கொண்ட பிறகு அவளைத் திருமணம் செய்து கொள்ள மறுத்து ஊரைவிட்டு ஓடிவிட்டான். திருமணமாகாமல் குழந்தையைச் சுமந்த அவமானத்தால் தற்கொலை செய்து கொண்டாள். வாலிப சகோதரிகளே, கவனமாயிருங்கள். தான் சிநேகமாக இருக்கும் பெண்ணால் தனக்குக் கெடுதி உண்டாகும் என்பதை அறிந்தும் கவனமாக இல்லாததால் சிம்சோன் கண்ணை இழந்து உயிரையும் இழக்க நேரிட்டது. நசரேயனாக, கவனமாக வாழ வேண்டிய அவன் தனது கவனக் குறைவால் ஆண்டவரது ஆசீர்வாதத்தை இழந்து போனான்.

தற்கொலை எண்ணங்களுக்கு கவனமாயிருங்கள்

வாழ்க்கை எப்போதும் எல்லோருக்கும் இனிமையாக இருப்பதில்லை. வாழ்வில் தடைக் கற்களைப் படிக்கற்களாக மாற்றிக் கொள்ள முயற்சி செய்வதே நல்லது. வாழ்க்கைப்பாதை ரோஜா மலர்களால் நிறைந்ததில்லை.

தோல்வி, இழப்புகள் என்னும் முட்களும் ஆங்காங்கே கிடக்கும். ஆதாம் முதல் இன்றைய மனிதன் வரை மரணம் தவிர்க்க முடியாதது. ஆனால் அது இயற்கையானதாக நிகழவேண்டும். கல்வியறிவில்லாதவர்களை விட படித்த இளைய தலைமுறையினர் தான் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்கின்றனர். தோல்விகளால் ஏற்படும் மன அழுத்தமே தற் கொலைக்குக் காரணமாகிறது. தற்கொலை எண்ணம் வராதபடி கவனமாயிருக்க வேண்டும். ஓட்டப் பந்தயத்தில் ஓடும்போது வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இலக்கை நோக்கி ஓடுவது போல பந்தயத்திலும் மன' உறுதியோடு ஓட வேண்டும்.

எறும்புகள் சாரை சாரையாக, வரிசை வரிசையாகச் செல்லும்போது கைவைத்து தடுத்துப்பாருங்கள். அவை வேறு வழியைத் தேர்ந்தெடுத்து மீண்டும் வரிசையாகத் தொடர்ந்து செல்வது போல தடைகளைத் தாண்டி முன்னேறுவதில் கவனமாயிருங்கள். எந்த சூழ்நிலையிலும் ஆண்டவர் கொடுத்த வாழ்வை இடையில் முறித்துக் கொண்டு பரலோக வாழ்வை சுதந்தரிக்கும் வாய்ப்பை நழுவ விடாதபடிக்கு கவனமாயிருங்கள்.

வாழ்க்கை ஒரு கண்ணாடி பாத்திரம் போன்றது. அதைக் கவனமாகக் கையாள வேண்டும்

வாழ்க்கை ஒரு கண்ணாடி பாத்திரம் போன்றது. அதைக் கவனமாகக் கையாள வேண்டும். தவறான எண்ணங்கள், தீய பழக்கங்களால் கீறல் ஏற்படாமல், கை தவறிக் கீழே விழுந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். கவனக் குறைவால் வாழ்வை சீரழித்துக் கொள்ளாமல் ஆண்டவரை சார்ந்து கொண்டு, நற்கிரியைகளை செய்து வாழ்ந்து பாருங்கள். அது வசந்த கால பூந்தோட்டமாக மணம் வீசும்.

பொறுப்புள்ள வாலிபம்...

இன்றைய இளைஞர்கள் ஆடம்பரத்தை விரும்புகிறார்கள். பெற்றோர் பெரியோரை மதிப்பதில்லை. "ஆசிரியர்களே அச்சம் கொள்ளும் அளவுக்கு நடந்து கொள்கிறார்கள்'. இந்தக் குற்றச்சாட்டுகள் இன்று கூறப்பட்டவை என்று நினைக்கிறீர்களா? கி.பி. 4ஆம் நூற்றாண்டில் சாக்ரடீஸ் என்னும் சிந்தனை சிற்பி கூறிய வார்த்தைகள்தான் இவைகள். இது இன்றைய காலகட்டத்து இளைஞர்களுக்கும் பொருந்துகிறது அல்லவா? சிலர் அப்படியிருந்தாலும் பல இளைஞர்கள் இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்தும் காரியங்களால் உலகம் இந்திய இளைஞர்களைப் பார்த்து வியந்து போகிறது. வாய்ப்புகள், பொறுப்புகள் கொடுத்து ஊக்கமளித்து துணைநின்றால் இளைய தலைமுறையினர் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பது உறுதி.

சாக்கடையை சுத்தமாக்குங்கள்...

இளைஞர்கள் மருத்துவராக, பொறியாளராக, ஆசிரியராக உருவாக வேண்டும் என நினைக்கிறார்கள். பெற்றோரும் அதையே விரும்புகிறார்கள். ஏன் சிறந்த அரசியல்வாதியாக உருவாகி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள கிறிஸ்தவ இளைஞர்கள் முன்வரக் கூடாது? 'அரசியல் ஒரு சாக்கடை' என்று எத்தனை காலம்தான் சொல்லிக் கொண்டிருப்பது? கல்வியறிவு பெற்ற சுயநலமற்ற இளைஞர்கள் அதில் இறங்கி சுத்தம் செய்யலாமே? ஆண்டவரது ராஜ்யம் இந்தியாவில் வர கிறிஸ்தவ இளைஞர்கள் அரசியலில் பங்குபெற அவசியமாகிறது. யோசேப்பைப் போல, தானியேலைப் போல ஞானத்தோடு நேர்மையான அரசை நிர்வகிக்க ஆண்டவர் ஞானம் தருவார்.

பெற்றோரைப் பேணுங்கள்...

உலகில் முதன்மையான உறவாகக் கருதப்படுவது அன்னை, தந்தை என்னும் பெற்றோரின் உறவே. இயேசு கிறிஸ்து, தந்தைக்கு உதவியாகத் தச்சுத் தொழிலை செய்து வந்தார். சிலுவையில் தொங்கும் நேரத்தில் கூட தாயிடம் உள்ள பாசத்தால், சீஷனிடம் தாயைப் பார்த்துக் கொள்ளும்படி ஒப்படைத்துச் சென்றார்.

அத்தகைய அன்பு உங்களிடமும் காணப்பட வேண்டும். தங்கள் உழைப்பை, பொருளை, நேரத்தைப் பிள்ளைகளுக்கென்று தியாகம் செய்த பெற்றோரை இளைஞர்கள் பலர் மதிக்க மறக்கும் மதியற்றவராகி விடுகிறார்கள். சிறகுகள் முளைத்ததும் உறவுகளை விட்டுப் பறந்து போகும் பறவைகள் போல அல்லாமல், நமக்காக உழைத்த பெற்றோரை கனம் பண்ணுங்கள். அப்போது உங்கள் வாழ்நாள் நீடித்திருக்கும். வயதான காலத்தில், பெற்றோரை முதியோர் இல்லத்திற்கு அனுப்பாமல் நன்றியுணர்வோடு போற்றிப் பாதுகாத்து ஆண்டவரின் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

நேசத்தை நீராக்குங்கள்...

வறுமை ஒழிப்பு, நோய் ஒழிப்பு, கல்வி முன்னேற்றம் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டிய உலக நாடுகளில் சில, எல்லை தாண்டிய தீவிரவாதத்தாலும், பயங்கரவாதத்தாலும் நாடுகளிடையே பகைமையை வளர்க்கின்றன. நாசத்தை விளைவிக்கின்றன. இதற்கெல்லாம் இளைஞர் சக்தியே பயன்படுத்தப்படுகிறது. சக மனிதர் என்ற மனித நேயத்தை மறந்து நக்சலைட், மாவோயிஸ்ட் என்ற பெயரில் நடத்தும் தீவிரவாதச் செயல்களால் நம் நாட்டின் பல பகுதிகள் நிலை குலைந்து போகின்றன. இளைய தலைமுறையினர் அதிலும் பெண்கள் ஆயுதமேந்தி தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவது எத்தனை கொடுமை? இந்த தீவிரவாதம் காட்டுத் தீயைப் போல பரவி, சாதிப் பிரச்சனைகளை ஊதிப் பெரிதாக்கி கிராமங்களையே எரித்து சாம்பலாக்குகின்றன. நம் ஆண்டவர் சாந்த குணமுள்ளவர். நாமும் அவ்வாறு இருப்பதையே அவர் விரும்புகிறார். இளைய தலைமுறையினரே தேசத்தை அழிக்கும் தீவிரவாதத்தை, நேசத்தை நீராக்கி ஊற்றி அணையுங்கள்.

> இளைய த்தலைமுறையினரே தேசத்தை அழிக்கும் தீவிரவாதத்தை, நேசத்தை நீராக்கி ஊற்றி அணையுங்கள்.

மனிதநேயம் மலரட்டும்...

சாலையில் அடிபட்டு ஒரு மனிதன் இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான். வாகனங்களில் செல்வோரும், நடந்து செல்வோரும் ஒரு நிமிடம் நின்று வேடிக்கை பார்த்து செல்கிறார்களே தவிர, அவன் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் யாருக்குமே இருப்பதில்லை. சில சமயம் யாராவது சில இளைஞர்கள் உள்ளத்தில் ஏவப்பட்டு காப்பாற்ற முன்வருவது ஆறுதலளிக்கிறது. மனித உயிர் எவ்வளவு மதிப்பு வாய்ந்தது? நமக்கும் ஒருநாள் இதுபோன்ற விபத்து ஏற்படலாமே? நல்ல சமாரியன்களாய் உதவும் குணத்தை வளர்த்து சேவை செய்யுங்கள். ஏழைகளுக்கு இரங்குங்கள். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன்

கொடுக்கிறான். பகைவரையும் அன்பால் தன்வயப்படுத்தி மனித நேயம் மலர பாடுபடுங்கள்.

அடுக்கு மாடி குடியிருப்புகளில் வாழ்கின்ற கலாசாரத்தால் அடுத்த வீட்டில் வாழ்கின்றவர் யார்? என்பது கூட நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. பக்கத்து வீட்டார் பசித்திருக்க நாம் பால்சோறு சாப்பிடுவது மனிதத்தன்மைக்கு உகந்ததல்ல. நாம் உண்ணும் உணவில் ஒருபிடி கொடுப்பதே மனித நேயம். மனிதர்களை நேசிப்போம். மனித நேயம் வளர்ப்போம்.

சுற்றுச்சூழல் காப்போம்...

பூமி சூடாகிக் கொண்டிருக்கிறது. நம்மை சுற்றி நடைபெறுகிற இயற்கை மாற்றங்கள் ஏற்புடையதாக இல்லை. இப்படியே போனால் உலகம் சீக்கிரம் அழிந்துவிடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மழையில்லாமல் பயிர்கள் வாடி தண்ணீருக்கும், உணவுக்கும் வழியில்லாமல், பஞ்சத்தில் சிக்கப்போகிறோம். பறவைகளும், விலங்குகளும் கொஞ்சம் கொஞ் சமாக அழிந்து வருகின்றன.

> அடுக்கு மாடி குடியிருப்புகளில் வாழ்கின்ற கலாசாரத்தால் அடுத்த வீட்டில் வாழ்கின்றவர் யார்? என்பது கூட நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

மின் பயன்பாட்டைக்குறைப்பது, சணல், காகிதப்பையை பயன்படுத்துவது. பிளாஸ்டிக் உபயோகத்தை அறவே ஒழிப்பது. வாகனங்களின் பயன்பாட்டைக் குறைப்பது போன்றவற்றால் புவிவெப்பமாதலைக் குறைத்து சுற்றுச் சூழலைக் காப்பாற்றலாம். ஆனால் இவை எப்படி சாத்திய மாகும்? இளைஞர் சமுதாயம் நினைத்தால் இவையெல்லாம் சாத்தியமே முதலில் டி.வி. பயன்பாட்டை குறையுங்கள். கம்ப்யூட்டரை தேவையில்லாத நேரத்தில் சுவிச் ஆஃப் செய்யுங்கள். வீடுதோறும் மரம் நடுங்கள். வாகன பயன்பாட்டை குறைத்து சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க உதவுங்கள். எல்லாவற்றையும் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். இளைஞர் சக்தியை ஆக்கபூர்வமான சக்தியாக மாற்றுங்கள்.

பணத்தை அல்ல குணத்தை நாடுங்கள்...

ஒரு மனிதனின் வெற்றியையும், மதிப்பையும் கணக்கிட இந்த சமுதாயம் வைத்திருக்கும் அளவுகோல் பணம், பதவி, புகழ் என்பவையே. இவற்றில் பணமே பிரதானமாகக் கருதப்படுகிறது. பணமில்லாதவனை இவ்வுலகம் மதிப்பதில்லை. படிக்காதவனையும், பணம் இருக்கும் காரணத்தால் அவனை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கிறது. கல்வியும் கடின உழைப்புமே நம்மை தலைநிமிர்ந்து நிற்கவைக்கும் என்பதை இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நிலையற்ற பணத்தைவிட, நிறைவான குணமுடைய நண்பர்களை

நேசிக்க வேண்டும். சக மனிதர்களை நேசித்து, நன்மை செய்து, சமூக சிந்தனையோடு வாழ்பவர்களே மக்கள் மனதில் நிலைத்து நிற்க முடியும்.

ஆண்டவரும் இவ்வுலகில் நன்மை செய்பவராகவே சுற்றித் திரிந்தார். ஆவியின் கனிகள் அனைத்தையும் கைக்கொண்டால் ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெறுவது உறுதி.

புகை நமக்கு பகை...

மனிதர்களாகிய நாம் ஆறறிவு படைத்தவர்கள். ஐந்தறிவு படைத்த மிருகங்கள் கூட தன்னைத் தானே அழித்துக் கொள்ளக்கூடிய செயல்களைச் செய்வதில்லை. ஆனால் மனிதன் மட்டுமே தன் உடலுக்கு கேடு விளைவிக்கும் மது, சிகரெட், கஞ்சா போன்ற போதை வஸ்துக்களால் தன்னைத் தானே சீரழித்துக் கொள்கிறான். குடும்பமே நடுத்தெருவுக்கு வந்துவிடும் அவலம் மிகக் கொடுமையானது. மதுபானத்தால் வரும் கேடுகளை பற்றி வேதமும் தெளிவாக நமக்குப் போதிக்கிறது. இளைய தலைமுறையினர் சிந்திக்கும் ஆற்றல் மிக்கவர்கள் இத்தகையகேடு விளைவிக்கும் பழக்கத்தை சமுதாயத்திலிருந்து ஒழிக்க வேண்டிய பொறுப்பு உங்களிடமே உள்ளது வாலிபர் தோழன் பத்திரிக்கையில் இதுபற்றி ஏராளமான கருத்துக்களை பரிமாறியுள்ளோம். அவற்றை மனதில் நிறுத்தி **புகையில்லா புதுயுகம் படைத்து புதை குழியிலிருந்து சக மனிதரைக் காப்போம்.**

ஆவியின் கனிகள்
அனைத்தையும்
கைக்கொண்டால்
ஆண்டவரின்
ஆசீர்வாதத்தைப்
பெறுவது உறுதி.

தடுமாறும்போது தாங்கி பிடிப்பதற்கும், தலைநிமிர்ந்து நிற்கும்போது பாராட்டுவதற்கும் பெற்றோருக்கு அடுத்தபடியாக இருப்பது நமது நண்பர்களே. அத்தகைய நண்பர்களைத் துணையாக வைத்துக் கொள்ளுங்கள். 18 வயதில் பிரெஞ்ச் நாட்டிற்கு வெற்றியைத் தேடித்தந்த ஜோன் ஆஃப் ஆர்க், 16 வயதில் உலகைக் கைப்பற்ற புறப்பட்ட அலெக்ஸாண்டர், 20 வயதில் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தை தோற்றுவித்த பில்கேட்ஸ் போன்றோர், சாதனை படைப்பதற்கு வயது ஒரு தடையல்ல என்று நிரூபித்துள்ளனர் இளையதலைமுறையினரே. ஒவ்வொரு நாளும் உலகம் ஒரு தனித் தன்மையோடு விடிகிறது. கடந்து போனதை எண்ணிக் கவலைப்படாமல், ஆண்டவரின் அருளாசியோடு இந்த நாள் இனிய நாள் என மகிழ்ச்சிக்குரியதாக்கிக் கொள்ளுங்கள். சிறகு விரித்துப் பறந்திடுங்கள். சிறப்பான வாழ்வை பெற ஆண்டவரை வேண்டுகிறேன்.

ஆசிரியரைப்பற்றி...

இந்நூலின் ஆசிரியர் திருமதி.ஜெபா நியூட்டன் பாளையங்கோட்டையில் பிறந்து சாராள் தக்கர் கல்லூரியில் கல்வி பயின்று, கல்வித்துறையில் 32 ஆண்டுகள் நேர்மையாகப் பணியாற்றி, திருநெல்வேலி முதன்மை கல்வி அலுவலகத்தில் கண்காணிப் பாளராக ஓய்வு பெற்றவர். இவரது கணவர் திரு.நியூட்டன் பொதுப்பணித்துறையில் சிறப்புடன் பணிபுரிந்து கண்காணிப்பாளராக ஓய்வு பெற்றவர். இவர்களுக்கு ரீகன், ஷெல்ட்டன், மில்ட்டன் என மூன்று குமாரர்கள் இருக்கிறார்கள்.

இவர் திருமண்டலப் பத்திரிக்கைகளான நற்போதகம், மாதர் மகிழ்ச்சி, வாலிபர் தோழன் ஆகியவற்றில் தொடர்ந்து கட்டுரைகளும் கவிதைகளும் எழுதி வருகிறார். அன்புள்ள இளந்தலைமுறைக்கு என்ற இந்த புத்தகம் இளையோர்களுக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர் மற்றும் போதகர்களுக்கும் மிகுந்த பயனுள்ள நூலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

வாசித்து பயனடையுங்கள்...

பரிசாக கொடுத்து மகிழுங்கள்...

TIRUNELVELI DIOCESE YOUTH ASSOCIATION
2/1, CMS Centenary Hall Campus,
Palayamkottai, Tirunelveli - 627 002
Ph : 0462-2578765 E-mail : csitdya@gmail.com

Donation Rs.60/-